# 2

# தேசிய உற்பத்தியும் செலவினமும்

## 2.1 பொதுநோக்கு

**இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 2009இன் 3.5 சதவீதம் கொண்ட சார்பு ரீதியான குறைந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 8.0 சதவீதம் கொண்ட கவர்ச்சிகரமான வீதத்தில் வளர்ச்சியடைந்தது.** இது கடந்த ஆறு தசாப்தங்களில் அவதானிக்கப்பட்ட இரண்டாவது அதியுயர்ந்த வளர்ச்சியாகவும் கடந்த மூன்று தசாப்தங்களில் பதிவு செய்யப்பட்ட அதியுயர் வளர்ச்சி வீதமாகவும் விளங்கியது. தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகளில் 6 சதவீதம் அல்லது உயர் ஆண்டு வளர்ச்சியைப் பதிவு செய்த பின்பு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பொருளாதாரம் இரண்டிலும் ஏற்பட்ட சவால்கள் காரணமாக 2009இல் மெதுவடைவைக் கொண்டிருந்த உள்நாட்டுப் பொருளாதாரம் சமாதானமான உள்நாட்டு சூழலினால் ஏற்பட்ட சாதகமான நிபந்தனைகளின் பின்னணியில் மீட்சியடைந்து பொருளாதார வளர்ச்சிக்கான உகந்த சூழலை இயலச் செய்தது. மேலும், சாதகமான வானிலை நிலைமைகளுடன் சேர்ந்து உலகப் பொருளாதாரத்திலான படிப்படியான மீட்சியும் 2010இல் உயர் வளர்ச்சிக்குச் சாதகமாகப் பங்களிப்புச் செய்தது.

**மொத்த பொருளாதார வளர்ச்சிக்கான அனைத்து முக்கிய துறைகளினதும் சாதகமான பங்களிப்புடன் 2010 காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சியானது பரந்ததாக காணப்பட்டது.** அபரிமிதமான நெல் விளைச்சல், மரக்கறிகளினதும் உயர்நிலப் பயிர்களின் அதிகரித்த வெளியீடு மற்றும் மீன் உற்பத்தியின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு என்பன காரணமாக உள்நாட்டு வேளாண்மையில் ஏற்பட்ட சாதகமான செயலாற்றத்தில் முக்கியமாக உதவப்பட்டு வேளாண்மைத் துறையிலான பெறுமதிகூட்டப்பட்ட வளர்ச்சி 2010இல் 7.0 சதவீதத்தால் அதிகரித்தது. வேளாண்மை ஏற்றுமதியினுள், 2009இல் வீழ்ச்சியடைந்த தேயிலை உற்பத்தியானது 2010இல் வளர்ச்சியை நோக்கி சாதகமாக பங்களிப்புச் செய்ததோடு சிறு ஏற்றுமதிப் பயிர்களிலும் சாதகமானதொரு செயற்றினைக் காட்டியது. கைத்தொழில்துறை அனைத்துத் துணைத் துறைகளிலான உயர் வளர்ச்சியுடன் 2010இல் 8.4 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. கட்டடவாக்கம், சுரங்கமகழுதலும் கல்லுடைத்தலும் மற்றும் மின்வலுவாக்கல் துணைத்துறைகளின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியுடன் இணைந்து தொழிற்சாலை கைத்தொழில் துணைத்துறையின் வெளியீடானது உயர் வீதத்தில் அதிகரித்தது. வெளிநாட்டு வர்த்தகச் செயற்பாடுகளிலான சுருக்கத்துடன் 2009இல் குறிப்பிடத்தக்களவில் மெதுவடைந்த பணிகள் துறை 8.0 சதவீதம் கொண்ட கவர்ச்சியான வளர்ச்சியுடன் 2010இல் மீளெழுச்சி அடைந்தது. மொத்த

அட்டவணை 2.1

**நிலையான (2002) விலைகளில் கைத்தொழில் மூலங்களின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும்**

| துறை | மாற்று வீதம் % | | மொத்த உள்நாட்டு உற்பத்தி மாற்றங்களுக்கான பங்களிப்பு % | | மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு (%) | |
|---|---|---|---|---|---|---|
| | 2009(அ) | 2010(ஆ) | 2009(அ) | 2010(ஆ) | 2009(அ) | 2010(ஆ) |
| **வேளாண்மை** | 3.2 | 7.0 | 11.0 | 10.5 | 12.0 | 11.9 |
| 1. வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் காடாக்கல் | 2.8 | 6.4 | 8.8 | 8.7 | 10.9 | 10.7 |
| 1.1 தேயிலை | - 8.4 | 13.1 | - 2.8 | 1.7 | 1.0 | 1.1 |
| 1.2 இறப்பர் | 7.9 | 12.7 | 0.5 | 0.4 | 0.3 | 0.3 |
| 1.3 தெங்கு | 5.3 | - 14.3 | 2.0 | - 2.4 | 1.4 | 1.1 |
| 1.4 சிறு ஏற்றுமதிப் பயிர்கள் | 5.2 | 37.6 | 0.7 | 2.1 | 0.5 | 0.6 |
| 1.5 நெல் | - 5.1 | 17.5 | - 2.7 | 3.7 | 1.7 | 1.8 |
| 1.6 கால்நடை வளர்ப்பு | 6.2 | 2.9 | 1.5 | 0.3 | 0.9 | 0.8 |
| 1.7 ஏனைய உணவுப் பயிர்கள் | 7.0 | 4.4 | 7.5 | 2.1 | 3.9 | 3.8 |
| 1.8 பெருந்தோட்ட அபிவிருத்தி | 5.2 | 5.4 | 0.4 | 0.2 | 0.3 | 0.3 |
| 1.9 விறகு மற்றும் காடாக்கல் | 5.9 | 3.1 | 1.0 | 0.2 | 0.6 | 0.6 |
| 1.10 ஏனைய வேளாண்மைப் பயிர்கள் | 5.1 | 7.6 | 0.5 | 0.4 | 0.4 | 0.4 |
| 2. மீன்பிடி | 6.9 | 12.2 | 2.2 | 1.8 | 1.2 | 1.2 |
| **கைத்தொழில்** | 4.2 | 8.4 | 33.9 | 30.1 | 28.6 | 28.7 |
| 3. சுரங்கமகழ்தலும் கல்லுடைத்தலும் | 8.2 | 15.5 | 4.7 | 4.1 | 2.1 | 2.3 |
| 4. தயாரிப்புத்துறை | 3.3 | 7.3 | 16.3 | 16.0 | 17.4 | 17.3 |
| 4.1 பதனிடுதல் (தேயிலை,இறப்பர்,தெங்கு) | 0.7 | 5.8 | 0.1 | 0.4 | 0.6 | 0.6 |
| 4.2 தொழிற்சாலைக் கைத்தொழில் | 3.4 | 7.5 | 15.2 | 14.8 | 15.8 | 15.7 |
| 4.3 குடிசைக் கைத்தொழில் | 3.3 | 5.5 | 1.0 | 0.7 | 1.1 | 1.1 |
| 5. மின்வலு வாயு மற்றும் நீர் | 3.7 | 7.8 | 2.5 | 2.3 | 2.4 | 2.4 |
| 5.1 மின்வலு | 3.7 | 8.2 | 2.2 | 2.2 | 2.1 | 2.1 |
| 5.2 வாயு | 5.4 | 4.6 | 0.3 | 0.1 | 0.2 | 0.2 |
| 5.3 நீர் | 2.9 | 4.5 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| 6. கட்டடவாக்கம் | 5.6 | 9.3 | 10.3 | 7.7 | 6.6 | 6.7 |
| **பணிகள்** | 3.3 | 8.0 | 55.2 | 59.4 | 59.3 | 59.3 |
| 7. மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் | - 0.2 | 7.5 | - 1.4 | 21.7 | 23.3 | 23.2 |
| 7.1 இறக்குமதி வர்த்தகம் | - 8.2 | 9.5 | - 20.8 | 9.4 | 8.0 | 8.1 |
| 7.2 ஏற்றுமதி வர்த்தகம் | - 2.2 | 3.4 | - 2.7 | 1.8 | 4.2 | 4.0 |
| 7.3 உள்நாட்டு வர்த்தகம் | 7.3 | 7.6 | 22.1 | 10.5 | 11.1 | 11.1 |
| 8. உணவகங்களும் விடுதிகளும் | 13.3 | 39.8 | 1.4 | 2.0 | 0.4 | 0.5 |
| 9. போக்குவரத்து, மற்றும் தொடர்பூட்டல் | 6.3 | 11.9 | 23.4 | 19.9 | 13.5 | 13.9 |
| 9.1 போக்குவரத்து | 5.9 | 11.4 | 18.1 | 15.8 | 11.1 | 11.5 |
| 9.2 சரக்குக் கையாளல் - துறைமுகங்களும் பயணிகள் வான்போக்குவரத்தும் | 0.4 | 16.8 | 0.1 | 1.4 | 0.7 | 0.7 |
| 9.3 அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் | 11.7 | 13.2 | 5.2 | 2.8 | 1.7 | 1.8 |
| 10. வங்கித்தொழில், காப்புறுதி, மற்றும் உண்மைச் சொத்துக்கள், ஏனையவை. | 5.7 | 7.5 | 14.1 | 8.4 | 8.9 | 8.9 |
| 11. வதிவிட சொத்துரிமை | 1.3 | 0.9 | 1.1 | 0.3 | 3.0 | 2.8 |
| 12. அரச பணிகள் | 5.9 | 5.4 | 12.8 | 5.3 | 7.8 | 7.6 |
| 13. தனியார் பணிகள் | 5.8 | 5.8 | 3.9 | 1.8 | 2.4 | 2.4 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | 3.5 | 8.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |
| வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் | - 49.8 | 20.1 | | | | |
| **மொத்த தேசிய உற்பத்தி** | 4.8 | 7.9 | | | | |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்


விற்பனை மற்றும் சில்லறை விற்பனை துணைத்துறை அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியாலும் உலகப் பொருளாதாரத்திலான படிப்படியான மீட்சியாலும் வளர்ச்சியடைந்தது. பொருளாதாரச் செயற்பாட்டிலான வளர்ச்சியுடன் இணைந்து போக்குவரத்துச் செயற்பாடுகள் விரிவடைந்ததுடன் நிதியியல் பணிகளும் இவ்வாணடில் உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்தன.

**2009இன் 3.2 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் உள்நாட்டுக் கேள்வியில் 10.2 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியானது ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைவதில் உள்நாட்டு பொருளாதாரச் செயற்பாட்டின் பங்களிப்பை எடுத்துக்காட்டுகிறது.** உள்நாட்டு நுகர்வுக் கேள்வி 2009இன் 3.6 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 8.4 சதவீதம் கொண்ட உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்ததுடன் நுகர்வோர் கேள்வியின் அதிகரிப்பானது பொருளாதாரச் செயற்பாட்டில் ஏற்பட்ட பொதுவான முன்னேற்றத்தினால் குறிப்பாக மோதலால் பாதிப்படைந்தவர்கள் வழமையான நிலைக்கு

## சிறப்புக்குறிப்பு 3 தலைக்குரிய வருமானத்தை இரட்டிப்பாக்கல்

தலைக்குரிய மொஉஉற்பத்தி (தமொஉஉ) என்பது நாட்டின் குடித்தொகையின் சிறப்பான வாழ்க்கைத் தரத்தின் அளவுகோல் ஆகும். இது சந்தை விலைகளில் பெறுமதியிடப்பட்ட மொஉஉற்பத்தியை நாட்டின் நடு ஆண்டு குடித்தொகையால் வகுப்பதன் மூலம் மதிப்பிடப்படுகிறது[1]. பன்னாட்டு ஒப்பீட்டுக்காக இது வழமையாக ஐ.அ.டொலர் நியதிகளில் வெளிப்படுத்தப்படுகிறது. 1960[2]இல் இலங்கையில் தமொஉ உற்பத்தி ஐ.அ.டொலர் 142ஆக மதிப்பிடப்பட்டதுடன் இது 1975இல் ஐ.அ.டொலர் 281 ஆக இரட்டிப்பதற்கு மேலும் 15 ஆண்டுகள் எடுத்தது. மீண்டும் 1991உம், 2004உம் த.மொ.உ உற்பத்தி நியதிகளில் மைல்கல் ஆண்டுகளாகும். இது ஐ.அ.டொலர் 547 மற்றும் ஐ.அ.டொலர் 1,062ஐ முறையே 16 ஆண்டுகள் மற்றும் 13 ஆண்டுகளில் அடைந்தது. எனினும், உறுதியான பேரண்டப் பொருளாதார நிலைமைகளுடன் ஆறு சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சி வீதச் சூழலில் தமொஉ உற்பத்தி சார்பு ரீதியில் நாலு ஆண்டுகள் கொண்ட குறுகிய கால இடைவெளியில் (2004இற்கும் 2008இற்கும் இடையே) 2008இல் ஐ.அ.டொலர் 2,014 இற்கு இரு மடங்காகியது. மேலும், இலங்கை குறைந்த நடுத்தர வருமான நாடாக உலக வங்கியால் வகைப்படுத்தப்பட்டுள்ளது[3].

வரைபடம் சி.கு. 3.1 தலைக்குரிய மொ.உ.உற்பத்தி: 1960 - 2010 (ஐ.அ.டொ)




[1] த.மொ.உ.உ = மொஉஉற்பத்தி (நடைமுறைச்சந்தை விலைகளில்) / நடு ஆண்டுக் குடித்தொகை

[2] மத்திய வங்கி 1959 இலிருந்து மொஉஉ உற்பத்தியை வெளியிட ஆரம்பித்தது.

[3] உலக வங்கியின் ஆகப் பிந்திய வகைப்படுத்தலின்படி வருமானக் குழுக்கள் குறைந்த வருமானம் (ஐ.அ.டொலர் 995 இற்கும் குறைவானவை), குறைந்த நடுத்தர வருமானம் (ஐ.அ.டொலர் 996 - ஐ.அ.டொலர் 3,946), உயர்ந்த நடுத்தர வருமானம் (ஐ.அ.டொலர் 3,946 - ஐ.அ.டொலர் 12,195) மற்றும் உயர் வருமானம் (ஐ.அ.டொலர்12,196 அல்லது அதற்கு அதிகமானது)

அட்டவணை சி.கு. 3.1 தலைக்குரிய மொ.உ.உற்பத்தியை இரட்டிப்பாக்குவதற்கு எடுத்த காலம் (1960 - 2008)

| ஆண்டு | 1960 | 1975 | 1991 | 2004 | 2008 |
|---|---|---|---|---|---|
| தலைக்குரிய மொ.உ.உ. ஐ.அ.டொலரில் | 142 | 281 | 547 | 1,062 | 2,014 |
| இரட்டிப்பாக்குவதற்கான ஆண்டுகளின் எண்ணிக்கை (அண்ணளவாக) | - | 15 | 16 | 13 | 4 |

மூன்று தசாப்தங்கள் கொண்ட நீண்ட மோதல் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமை, அதிகரித்த முதலீட்டாளர் நம்பிக்கை, நாட்டின் உற்பத்தி இயலளவை உயர்த்தும் பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் உலகப் பொருளாதாரத்திலான மீட்சி என்பவற்றுடன் நாட்டின் வளர்ச்சியின் உள்ளார்ந்த வளம் பெருமளவில் முன்னேற்றமடைந்தது. மேம்பாடடைந்த உள்நாட்டு வேளாண்மை மற்றும் பொருத்தமான கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளுடன் எதிர்வரும் ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க விலை அழுத்தம் இராது என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன் இறைத்திரட்சி செயல் முறையும் கோள்வி முகாமைத்துவத்தை அடைவதில் பங்களிப்புச் செய்யும் அதேவேளை முன்னேற்றமடைந்த முதலீட்டாளர் நம்பிக்கை வெளிநாட்டுச் செலாவணி வீத உறுதிப்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்யும் வெளிநாட்டு முதலீட்டின் பாய்ச்சலைத் தூண்டும். பேரண்டப் பொருளாதாரச் சூழலிலான இப் பின்னணி இருக்குமிடத்து நாடு நடுத்தர காலத்தில் 8 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சிவீதத்தை அடையக் கூடியதாக இருக்கும்.

2011-2014 காலப்பகுதிக்கான தலைக்குரிய மொத்த உள்நாட்டு உற்பத்தியை மதிப்பீடுகள் கீழ் வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இந் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட எடுகோள்கள்கள் அட்டவணை 1.5 இல் தரப்பட்டுள்ளன


அட்டவணை சி3.2 தலைக்குரிய மொ.உ.உற்பத்தியின் எறிவுகள்

| ஆண்டு | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|
| எறிவு செய்யப்பட்ட தலைக்குரிய மொ.உ.உ ஐ.அ.டொலரில் | 2,794 | 3,200 | 3,660 | 4,190 |

வந்ததன் மூலம் ஏற்பட்டதாகும். மேலும், முதலீடு மீதான செலவினம் நடுத்தர காலத்தில் உயர் வளர்ச்சிப் பாதையை அடைவதற்குத் தேவையான உள்ளீடாக இருக்கக் கூடிய வளர்ச்சி உத்வேகத்துடன் 2010இல் 15.5 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வீதத்தில் வளர்ச்சியடைந்தது. இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் நியதிகளில் உலகப் பொருளாதார மெதுவடைவுடன் 2009இல் சுருங்கிய வெளிநாட்டுத்துறை 2010இல் குறிப்பிடத்தக்களவில் வளர்ச்சியடைந்தது. தேறிய வெளிநாட்டுக் கேள்வியானது அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியுடன் இறக்குமதிகள் மீதான உயர் கேள்வி காரணமாக தொடர்ந்து விரிவாக்கமடைந்தது.

**வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்துக்காக சீராக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி என வரைவிலக்கணம் செய்யப்பட்ட மொத்தத் தேசிய உற்பத்தி 2010இல் 7.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** பன்னாட்டு வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்தமை, மற்றும் வெளிநாட்டு ஒதுக்குகளிலிருந்தான உயர்வருவாய் என்பன காரணமாக

வரைபடம் 2.1 ஆண்டு வளர்ச்சி வீதம்




2009இல் முன்னேற்றம் கண்ட மொத்த தேசிய உற்பத்தியானது 2010இல் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும் வெளிநாட்டிலிருந்தான காரணி வருமானத்தின் பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் ஆகிய இரண்டும் 2010 காலப்பகுதியில் வளர்ச்சியடைந்ததுடன் பின்னர் வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தின் எதிர்மறையான அபிவிருத்தி காரணமாக உயர்வளர்ச்சியை பதிவு செய்தது.

**தலைக்குரிய மொ.உ.உற்பத்தி 2009இன் ரூ.236,445 இலிருந்து 2010இல் ரூ.271,259 இற்கு 14.7 சதவீதத்தால் அதிகரித்து பணவீக்க வீதத்தை விஞ்சியது (5.9 சதவீதம்).** மேலும், ஐ.அ.டொலர் நியதிகளில் தலைக்குரிய வருமானம் 2009இன் ஐ.அ.டொலர் 2,057 உடன் ஒப்பிடுகையில் ஐ.அ.டொலர் 2,399 இற்கு 16.6 சதவீதத்தில் அதிகரித்தது.

**2010இல் நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உற்பத்தி ரூ.5,602 பில்லியனை (ஐ.அ.டொலர் 49.5 பில்லியன்) அடையும் வகையில் 15.9 சதவீதத்தால் விரிவடைந்தது.** மொ.உ.உற்பத்தியின் பெயரளவிலான வளர்ச்சி 8.0 சதவீதம் கொண்ட உண்மையான மொ.உ.உற்பத்தி வளர்ச்சியையும் 2009இன் 5.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 7.3 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்த மொ.உ.உற்பத்திச் சுருக்கியால் அளவிடப்படும் பொது விலை மட்டங்களிலான அதிகரிப்பையும் உள்ளடக்குகிறது.

**2010இல் உள்நாட்டு சேமிப்புக்கள் 2009இன் 41.8 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 20.5 சதவீதம் கொண்ட குறைவான வீதத்தில் வளர்ச்சியடைந்து ரூ.1,045 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளன.** உள்நாட்டுச் சேமிப்புக்களிலான குறைந்த வளர்ச்சியானது நுகர்வு மற்றும் முதலீடு இரண்டிலுமான அதிகரித்த வளர்ச்சி காரணமாக இறக்குமதிப் பொருட்களுக்கான அதிகரித்த கேள்வியால் ஏற்பட்டிருக்கலாம். நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்களை உள்ளடக்கும், பொருட்களின் இறக்குமதிப் பெறுமதி 2009இலான 23.1 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் ரூபா நியதிகளில் 2010இல் 30.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, 2009இல் 17.9 சதவீதமாகக் காணப்பட்ட உள்நாட்டுச் சேமிப்பு விகிதம் 2010இல் 18.7 சதவீதத்தால் அதிகரித்தது.

**2010இல் தேசிய சேமிப்புக்கள் ரூ.1,381 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 2009 உடன் ஒப்பிடுகையில் 20.3 சதவீத வளர்ச்சியாகும்.** இருப்பினும் தனியார் நடைமுறை மாற்றல்களில் ஏற்பட்ட 21.2 சதவீத வளர்ச்சி தேசிய சேமிப்புக்களுக்குச் சாதகமாக பங்களிப்புச் செய்த அதேவேளை வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானத்தின் பாதகமான நிலைமை வளர்ச்சியின் உற்பத்தியினை பாதித்தது. 2010இல் தேறிய தனியார் மாற்றல்கள் 2009இன் ரூ.337 பில்லியனிலிருந்து ரூ.408 பில்லியனுக்கு அதிகரித்தன. இதற்கிணங்க, தேசிய சேமிப்பு விகிதம் முன்னைய ஆண்டின் 23.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 24.7 சதவீதமாக விளங்கியது.

## 2.2 துறைவாரியான வெளியீடு, கொள்கைகள், நிறுவன ரீதியான உதவி மற்றும் பிரச்சனைகள்

### வேளாண்மை

**வேளாண்மைத்துறை முன்னைய ஆண்டின் 3.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 7.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இது பெரும்பாலும் மீன்பிடித் துறையிலான குறிப்பிடத்தக்க முன்னேற்றத்துடன் சேர்ந்து நெல், தேயிலை மற்றும் சிறு ஏற்றுமதிப் பயிர்களிலான சாதகமான வளர்ச்சியால் ஏற்பட்டது. எனினும், எதிர்பார்த்ததைவிடக் குறைவான தெங்கு மற்றும் விலங்கு வளர்ப்பு உற்பத்தி இத் துறையின் வளர்ச்சி உத்வேகத்தை ஓரளவிற்கு மெதுவடையச் செய்தது. இதேவேளை, மொ.உ.உற்பத்தியில் வேளாண்மைத் துறையின் பங்கு பொருளாதாரத்தில் ஏனைய துறைகளின் வளர்ச்சிச் செழிப்பால் வெளிப்படுத்தப்பட்டவாறு 11.9 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

### ஏற்றுமதி பயிர்கள்

**2010இல் மொத்தத் தேயிலை உற்பத்தி முன்னெப்போதுமில்லாத அதிகூடிய ஆண்டு உற்பத்தியைப் பதிவு செய்து 329 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு 13 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இது 2009இன் முதலாம் காலாண்டில் உலர் வானிலை நிலைமைகள் காரணமாக 2009இலான தளர்வுற்று வெளியீட்டிலிருந்து குறிப்பிடத்தக்க மீட்சிக்கு மாறியதை வெளிப்படுத்தியது. அதேவேளை, எக்டேயர் ஒன்றுக்கான தேசிய சராசரி விளைச்சல் 2008இன் 1,435 கிலோக்கிறாம்களிலிருந்து 2010இல் 1,484 கிலோக்கிறாம்களுக்கு அதிகரித்தது. 2010இலான வளர்ச்சி இறுதி இரண்டு மாதங்களைத் தவிர

அட்டவணை 2.2 வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் (1997-2000 =100)

| விடயம் | 2009(அ) | 2010(ஆ) | மாற்றம் (%) 2009/10 |
|---|---|---|---|
| வேளாண்மை, மீன்பிடி | 122.4 | 131.6 | 7.5 |
| 1 வேளாண்மை | 122.1 | 130.3 | 6.8 |
| 1.1 வேளாண்மை பயிர்கள் | 119.3 | 128.1 | 7.3 |
| தேயிலை | 101.4 | 114.7 | 13.1 |
| இறப்பர் | 141.9 | 158.7 | 11.8 |
| தெங்கு | 102.7 | 83.4 | -18.8 |
| நெல் | 137.0 | 161.4 | 17.8 |
| ஏனைய பயிர்கள் | 122.5 | 129.1 | 5.4 |
| 1.2 கால்நடை வளர்ப்பு | 146.6 | 150.3 | 2.6 |
| 2 மீன்பிடி | 124.4 | 139.7 | 12.3 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தேயிலை பயிரிடப்படும் அனைத்து மாவட்டங்களிலும் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளால் பெருமளவில் ஏற்பட்டது. இது சிறந்த வேளாண்மை மற்றும் தயாரிப்பு நடைமுறைகளில் கூடியளவு கவனம் செலுத்துவதற்கு பயிர் செய்வோரைத் தூண்டிய முன்னைய ஆண்டிலிருந்து தொடர்ந்த உயர் விலைகளால் உதவப்பட்டது. தேயிலைச் சிறு உடைமையாளர்களுக்கான வளமாக்கி உதவி நிகழ்ச்சித்திட்டம் தொடர்ந்து செயற்பட்டமையும் உற்பத்தித்திறனை அதிகரிக்க உதவியது. தேயிலையின் தேசிய உற்பத்திக்கான 60 சதவீதம் கொண்ட ஆகக்கூடிய பங்களிப்பு 2010இல் 196 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கு 13 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த தாழ்நிலத் தேயிலையிலிருந்து ஏற்பட்டது. இதேவேளை, மத்திய நில மற்றும் உயர் நிலத் தேயிலை உற்பத்தி முறையே 55 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கும் 78 மில்லியன் கிலோக்கிறாம்களுக்கும் 22 சதவீதத்தாலும் 7 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தது. இலங்கையின் மொத்தத் தேயிலை உற்பத்தியில் தேயிலை சிறு உடமையாளர்துறை தொடர்ந்து முக்கிய பங்கை வகித்ததுடன் 2010இல் மொத்த தேயிலை உற்பத்திக்கு 76.4 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது.

**2010இல் கொழும்பு தேயிலை ஏலம் அனைத்து ஏனைய பன்னாட்டு தேயிலை ஏலங்களுடன் ஒப்பிடுகையில் உயர் விலைகளைப் பதிவு செய்தது.** 2010இல் கொழும்பு தேயிலை ஏலத்தில் அனைத்துத் தேயிலை விலைகளின் ஆண்டுச் சராசரி 2009இன் கிலோக்கிறாம் ஒன்றுக்கான ரூ.361 இலிருந்து 2010இல் கிலோக்கிறாம் ஒன்றுககு ரூ.372 இற்கு 3 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் சராசரி ஏற்றுமதி விலை கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.494 இற்கு 5.0 சதவீதத்தாலும் அதிகரித்தது. 2010இல் தேயிலை விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு கருந் தேயிலையின் உலக வழங்கலின் பற்றாக்குறைக்கு மத்தியில் கூடிய விலைகளைப் பெறும் இலங்கையிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மரபுவழித் தேயிலைக்கான பன்னாட்டுக் கேள்வி அதிகரித்துச் சென்றமையால் பெரும்பாலும் ஏற்பட்டது.

**2010இல் இறப்பர் உற்பத்தி 153 மில்லியன் கிலோக்கிறாம்களை அடைந்து முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இரண்டாம் மற்றும் நான்காம் காலாண்டுகளில் ஏற்பட்ட அதிக மழைவீழ்ச்சியின் மத்தியிலும் ஆண்டு முழுவதும் அனைத்து வகைகளுக்கும் பெறப்பட்ட கவர்ச்சிகரமான விலைகளின் பெருமளவு காரணமாக அனைத்து வகையான இறப்பர் வகைகளின் உற்பத்தியும் தொடர்ச்சியாக அதிகரித்தது. மேலும், நாட்டில் கிட்டத்தட்ட 127,200 சிறு உடமையாளர்களையும் இறப்பர் பயிரிடப்படும் மொத்தப் பரப்பளவில் 54 சதவீதத்தையும் கொண்டுள்ள இறப்பர் சிறு உடமையாளர்துறை இயற்கை இறப்பரின் உயர் விலைகளுக்கு அவற்றின் உடனடிப் பதிலிறுப்பைப் பெருமளவில் பிரதிபலிக்கிறது. மேலும், அண்மைக் காலங்களில் இறப்பர் பெருந்தோட்டத்தில் பாலெடுக்கும் பரப்பளவில் ஏற்பட்ட அதிகரிப்பும் உற்பத்தியிலான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது. இதன் விளைவாக, இறப்பரின் மொத்தத் தேசிய விளைச்சல் 2010இல் எக்டேயர் ஒன்றுக்கு 1,607 கிலோக்கிறாம்களுக்கு 11.8 சதவீதத்தால் அதிகரித்தது. வளமாக்கிப் பயன்பாடுகள், லேற்றெக்ஸ் பால் எடுத்தலிலான முன்னேற்றமடைந்த தொழில்நுட்பங்கள் மற்றும் சாதகமான விலைகளுக்குப் பதிலிறுத்தும் வகையில் பயிரிடுவோர்களால் பின்பற்றப்பட்ட மழைத் தடைகளின் பாவனை போன்ற சிறந்த வேளாண்மை நடைமுறைகள் காரணமாகவும் உயர் வளர்ச்சி ஏற்பட்டது. இது, இறப்பர் பயிர்ச்செய்கைச் சபை மற்றும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் போன்ற தொடர்பான அதிகாரசபைகளின் முன்னேற்றங்கண்ட விரிவாக்கப் பணிகளால் மேலும் உதவப்பட்டது.

**2010இல் இறப்பரின் அனைத்து வகைகளின் சராசரி விலைகள் தொடர்ந்தும் உயர்வாக விளங்கின.** ஆர்எஸ்எஸ் 1இன் ஆண்டுச் சராசரி விலை கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.403இற்கு 91 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் கிறேப் இறப்பர் இல.1இன் ஆண்டுச் சராசரி விலையும் 2009 உடன் ஒப்பிடுகையில் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.453இற்கு 113 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை, இறப்பரை அடிப்படையாகக் கொண்ட பொருட்களின் அதிகரித்த உற்பத்தி காரணமாக இயற்கை இறப்பரின் உள்நாட்டு நுகர்வு 2009இன் 84,941 மெற்றிக் தொன்களிலிருந்து 2010இல் 107,225 மெற்றிக் தொன்களுக்கு (மொத்த உற்பத்தியில் 70 சதவீதம்) அதிகரித்தது. தாய்லாந்து போன்ற இறப்பர் உற்பத்தி செய்யப்படும் முக்கிய நாடுகளிலான பாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக பன்னாட்டுச் சந்தையில் இயற்கை இறப்பரின் குறிப்பிடத்தக்க வழங்கல் பற்றாக்குறை, உலகப் பொருளாதார மீட்சியுடன் குறிப்பாக, சீனா, இந்தியா மற்றும் மலேசியாவிலிருந்தான, உறுதியான கேள்வி மற்றும் உயர் எண்ணெய் விலைகள் இயற்கை இறப்பரின் விலைகள் பெருமளவில் அதிகரிப்பதற்கு கூடியளவில் உதவின.

**அட்டவணை 2.3 முதன்மை வேளாண்மைப் பயிர்களின் போக்குகள**

| வகைகள் | அலகு | 2009(அ) | 2010(ஆ) |
|---|---|---|---|
| **1. தேயிலை** | | | |
| 1.1 உற்பத்தி (இ) | மில் கி.கி | 291.0 | 329.0 |
| 1.2 மொத்த நிலப்பரப்பு | ‘000 எக்டேயர்கள் | 222 | 222 |
| 1.3 பயிரிடப்பட்ட நிலப்பரப்பு | ‘000 எக்டேயர்கள் | 192 | 190 |
| 1.4 உற்பத்திச் செலவு (ஈ) | ரூபா/கி.கி | 269.01 | 313.17 |
| 1.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி | 360.85 | 371.54 |
| - ஏற்றுமதிகள் (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 470.11 | 494.39 |
| 1.6 மீள்நடுகை | எக்டேயர்கள் | 1,126 | 1,274 |
| 1.7 புதிய பயிரிடுகை | எக்டேயர்கள் | 12 | 3 |
| 1.8 மொ.உ.உ.இன் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 1.7 | 1.6 |
| **2. இறப்பர்** | | | |
| 2.1 உற்பத்தி | மில் கி.கி | 136.9 | 153.0 |
| 2.2 மொத்த நிலப்பரப்பு (ஊ) | ‘000 எக்டேயர்கள் | 124 | 126 |
| 2.3 பாலெடுக்கப்பட்ட நிலப்பரப்பு (ஊ) | ‘000 எக்டேயர்கள் | 95 | 95 |
| 2.4 உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி | 115.50 | 119.83 |
| 2.5 சராசரி விலை | | | |
| - கொழும்பு ஏலம் (ஆர்எஸ்எஸ்1) | ரூபா/கி.கி | 211.65 | 403.02 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) | ரூபா/கி.கி | 202.23 | 373.87 |
| 2.6 மீள்நடுகை (எ)) | எக்டேயர்கள் | 1,002 | 1493 |
| 2.7 புதிய பயிரிடுகை (எ) | எக்டேயர்கள் | 715 | 1537 |
| 2.8 மொ.உ.உவின் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 0.5 | 1.0 |
| **3. தெங்கு** | | | |
| 3.1 உற்பத்தி | காய்கள் மில் | 2,853 | 2,317 |
| 3.2 மொத்த நிலப்பரப்பு | ‘000 எக்டேயர்கள் | 395 | 395 |
| 3.3 உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 9.53 | 11.27 |
| 3.4 சராசரி விலை | | | |
| - உற்பத்தியாளர் விலை | காய்க்கு ரூபா | 18.28 | 23.82 |
| - ஏற்றுமதி (க.ஏ.பெ) (ஏ) | காய்க்கு ரூபா | 18.23 | 25.67 |
| 3.5 மீள்நடுகை / கீழ்பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 3,545 | 2,684 |
| 3.6 புதிய பயிரிடுகை (ஐ) | எக்டேயர்கள் | 3,998 | 2,920 |
| 3.7 மொஉ.உ.வின் சதவீதமாக கூட்டப்பட்ட பெறுமதி (உ) | | 1.4 | 1.4 |

(அ) திருத்தப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) பச்சைத் தேயிலை உட்பட
(ஈ) பச்சைத் தேயிலை வழங்குனர்களின் இலாபம் உட்பட
(உ) வளர்த்தல் மற்றும் பதனிடுதல் மட்டும்
(ஊ) தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தால் 2003இல் நடாத்தப்பட்ட இறப்பரின் நிலப்பரப்பு அளவீட்டை அடிப்படையாகக் கொண்டது.
(எ) இறப்பர் அபிவிருத்தித்தித் திணைக்களத்தின் பயிர்செய்கைஉதவித் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஏ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஐ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயர்ச்செய்கை உதவித் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச்சபை
தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை
தொகை மதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் இறப்பர் அபிவிருத்தி திணைக்களம்
தெங்குப் பயர்ச்செய்கைச் சபை
தெங்கு அபிவிருத்தி அதிகார சபை
பெருந்தோட்டக் கம்பனிகள்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

**2010இல் தெங்கு உற்பத்தி 2,317 மில்லியன் காய்களுக்கு 19 சதவீதம் கூர்மையான வீழ்ச்சியைக் காட்டியது.** தெங்கு உற்பத்தியிலான வீழ்ச்சியானது தெங்கு உற்பத்தி செய்யப்படும் முக்கிய பிரதேசங்களில் 2009இல் ஏற்பட்ட குறைந்த மழைவீழ்ச்சி, குறைந்த ஈரப்பதன் மற்றும் உயர் வெப்பநிலையின் காலம் தாழ்த்திய விளைவால் பெருமளவு ஏற்பட்டது. தெங்கு உற்பத்தியிலான வீழ்ச்சி குறிப்பாக 2010இன் இறுதிக் காலாண்டில் கணிசமானதாக விளங்கியதுடன் உற்பத்தி 2009இன் தொடர்பான காலாண்டுடன் ஒப்பிடுகையில் 429 மில்லியன் காய்களுக்கு 32 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. நாட்டில் தெங்கு பயிரிடப்படும் மொத்தப் பிரதேசத்தில், குறிப்பாக கிட்டத்தட்ட 80 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறு உடமையாளர் துறையினுள் அண்மைய ஆண்டுகளில் தெங்குக்கான வளமாக்கியின் பயன்பாடும் வீழ்ச்சியைக் காட்டியது. 2010இல் தெங்கு முக்கோணப் பிரதேசத்திலான (புத்தளம், கம்பகா மற்றும் குருணாகல்) மொத்த உற்பத்தியில் உற்பத்தியிலான அதியுயர் வீழ்ச்சி (34 சதவீதம்) 2009இல் ஆகக் குறைந்த மழை வீழ்ச்சயைப் பதிவு செய்த புத்தளம் மாவட்டத்திலிருந்து பதிவு செய்யப்பட்டது. மேலும், குருனாகல் மற்றும் கம்பகா மாவட்டங்களின் மொத்த தெங்கு உற்பத்தியும் 2010இல் 24 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பல பெருந்தோட்டங்கள் மற்றும் சிறு உடமையாளர்களின் நிலங்களின் மேற்பகுதி மண் தரம் குறைந்து செல்வதால் உற்பத்தித்திறனிலான வீழ்ச்சி, குறைந்த வளமாக்கிப் பயன்பாடு, நோய்களின் பரவல், காணியின் மாற்றீட்டுப் பயன்பாடுகளுக்காக தென்னை நிலங்கள் துண்டாடப்படுதல் ஆகிய காரணிகள் தேசிய தெங்கு உற்பத்தியிலான இவ் வீழ்ச்சிக்கு பங்களித்துள்ளன போல் தோன்றுகிறது.

**2010இல் வீழ்ச்சியடைந்த தெங்கு உற்பத்தியானது நுகர்வுக்கான காய்களின் பற்றாக்குறை அதுபோல் கைத்தொழில் பயன்பாடு என்பவற்றின் விளைவால் விலைகள் முன்னேப்போதும் எதிர்பாராத கடுமையான மட்டங்களுக்கு அதிகரித்து செல்வதை விளைவித்தது.** தேங்காய் எண்ணெய் உற்பத்தி 2010இல் 65,130 மெற்றிக்தொன்களுக்கு 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது தேங்காய் எண்ணெய் ஆலையாளர்களிடமிருந்து உலர்த்திய தேங்காய்க்கான கேள்வி உயர் இறக்குமதித் தீர்வைக் காரணமாக தாவர எண்ணெயின் குறைந்த இறக்குமதிகள் மற்றும் பன்னாட்டு சந்தையில் சமையல் எண்ணெயின் தொடர்ச்சியான அதிகரித்துச் செல்லும் போக்கு மற்றும் இதன் விளைவாக கொழும்பு தெங்கு ஏலத்தில் தேங்காயின் சராசரி மொத்த விற்பனை விலை 2009 திசெம்பரில் காய் ஒன்றின் விலை ரூ. 23.50 உடன் ஒப்பிடுகையில் 2010 திசெம்பரில் காய் ஒன்றுக்கு ரூ.41 இற்கு அதிகரித்தது. இது தேங்காய் விலைகள் மேலும் அதிகரிக்காது இருப்பதைத் தடுக்கும் வழிமுறைகளை எடுப்பதற்கு அரசாங்கத்தைக் கட்டாயப்படுத்தியது. இதன்படி, காய்கள் வடிவில் தெங்கு ஏற்றுமதி செய்வதற்கான செஸ் தீர்வையை காய் ஒன்றுக்கு ரூ.2 இலிருந்து காயொன்றுக்கு ரூ.30 அதிகரித்ததற்கு மேலதிகமாக அரசாங்கம் 2010 நவெம்பரில் சமயல் எண்ணெயின் இறக்குமதி மீதான தீர்வையை கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.15 இற்குக் குறைத்தது. இத்துடன், தெங்கு உற்பத்தியை அதிகரிப்பதற்கு காணியின் அளவைக் கவனத்தில் கொள்ளாது தெங்கு சிறு உடமையாளர்களுக்கு வளமாக்கி உதவித் திட்டத்தை விரிவாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானமொன்றை எடுத்தது.


பல **ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தி 2010இல் சாதகமான போக்கைக் காட்டியது.** கராம்பின் உற்பத்தி 215 சதவீதத்தாலும் மிளகின் உற்பத்தி 10 சதவீதத்தால் இவ் ஆண்டு காலப்பகுதியில் அதிகரித்தது. 2010இலும் ஆன கராம்பு

உற்பத்தியானது 2009இல் கராம்பு பூக்கும் காலப்பகுதியில் நிலவிய சாதகமான வானிலை நிலைமைகளின் உதவியுடன் முன்னெப்போதுமில்லாத அதியுயர் உற்பத்தியைப் பதிவு செய்தது. மிளகு உற்பத்தி செய்யப்படும் பிரதான மாவட்டங்களில் மிளகின் அறுவடை பலத்த மழை காரணமாக 2009 யூலையிலிருந்து 2010 சனவரி - பெப்புருவரி காலப்பகுதிக்கு தாமதமானதால் 2010இல் மிளகு உற்பத்தி அதிகரித்தது. எனினும், மிளகின் பண்ணை விலைகள் 19 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் ஏல விலைகள் 2010இல் 24 சதவீதத்தால் அதிகரித்தன. இதேவேளை, கறுவா உற்பத்தி அதிகரித்த பண்ணை விலைகள் மற்றும் ஏல விலைகள் காரணமாக 4 சதவீதத்தால் அதிகரித்தது. குறிப்பாக, கறுவா எண்ணெய் ஏற்றுமதிகள் 2009இன் 16.8 மெற்றிக் தொன்களிலிருந்து 2010இல் 26 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தன. மேலும், இவ்வாண்டில் ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம் அவற்றின் தொழில்நுட்பப் பணிகளை விரிவாக்கல் மற்றும் உதவுதொகைகளை வழங்குவதனூடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்களை விரிவாக்குவதற்கு பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

## உள்நாட்டு வேளாண்மை

**2010இல் மொத்த நெல் உற்பத்தி 2009 உடன் ஒப்பிடுகையில் 4.3 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 17.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** 2009/2010 பெரும்போக உற்பத்தி 2.6 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 10 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் 2010 சிறுபோக உற்பத்தி 1.6 மில்லியன் மெற்றிக் தொன்களுக்கு 31.8 சதவீதத்தால் அதிகரித்தது. 2010இல் நெல் உற்பத்தியிலான அதிகரிப்பு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலான அதிகரித்த பயிர்செய் பரப்பளவு மற்றும் போதிய மழை வீழ்ச்சி, பயிர்ச் செய்கைக்கான நீரை உரிய நேரத்தில் விடுவித்தமை, பயிரிடப்படாத காணிகளை பயிர்ச் செய்கைக்குக் கீழ் கொண்டு வரும் அரசாங்கத்தின் கொள்கை என்பவற்றால் ஏற்பட்டது. இதேவேளை, 2010இல்

வரைபடம் 2.2 அரிசி : நிரம்பலும் கேள்வியும்




நெல் உற்பத்தி வளமாக்கி உதவித் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டமையாலும் அரசாங்கத்தின் நெற் கொள்வனவுத் திட்டத்தாலும் மேலும் உறுதிப்பட்டது. 2010இல் இரு பருவ காலங்களிலும் அதிகரித்த உற்பத்தி 2009 உடன் ஒப்பிடுகையில் நெல்லின் சராசரி பண்ணை விலைகளில் வீழ்ச்சியை ஏற்படுத்திய போதிலும் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித்திட்டத்தினூடாக மேற்கொள்ளப்பட்ட தலையீடு விலைகளை உறுதிப்படுத்த உதவியது. அரசாங்கம் பெரும்போகம் மற்றும் சிறுபோகங்களில் நாடு கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.28 வீதப்படியும் சம்பா கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.30 வீதப்படியும் 182,000 மெற்றிக்தொன் நெல்லைக் கொள்வனவு செய்தது. மேலும், 2009இல் எந்தவொரு அரிசிப் பற்றாக்குறையை பூர்த்தி செய்யும் முகமாக முன்னைய ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட 125,780 மெற்றிக் தொன்கள் கொண்ட அரிசியின் இருப்பும் 2010இல் சந்தையில் கிடைக்கத்தக்கதாக இருந்தது.

அட்டவணை 2.4 நெல்துறை மீதான புள்ளி விபரங்கள்

| விடயம் | அலகு | 2009(அ) | | | 2010(ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் | பெரும்போகம் | சிறுபோகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 632 | 345 | 978 | 646 | 419 | 1,065 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 605 | 338 | 943 | 643 | 416 | 1,060 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 539 | 303 | 842 | 574 | 376 | 950 |
| உற்பத்தி | '000 மெ.தொ | 2,384 | 1,268 | 3,652 | 2,630 | 1,671 | 4,301 |
| | '000 புசல்கள் | 114,241 | 60,763 | 175,004 | 126,029 | 80,074 | 206,103 |
| விளைச்சல் (இ) | கி.கி/ எக்டேயர்கள் | 4,421 | 4,187 | 4,336 | 4,583 | 4,444 | 4,528 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ.மில்லியன். | 1,158 | 760 | 1,918 | 1,402 | 1,139 | 2,541 |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெ.தொ. | | | 52 | | | 126 |
| நெல்லிற்குச் சமமான இறக்குமதிகள் | '000 மெ.தொ. | | | 76 | | | 185 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது அதே வேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன்மூலம் மொத்த விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

**ஏனைய களப்பயிர்களின் உற்பத்திகள் 2010இல் கலப்பான செயலாற்றத்தைக் காட்டின.** முன்னோக்கிய ஒப்பந்தகளூடான உறுதிப்படுத்தப்பட்ட சந்தை மற்றும் விலைகள், அதிகரித்த செஸ்வரி மற்றும் சோளம் மீது இறக்குமதி உரிமம் பெறும் தேவைப்பாட்டை அறிமுகப்படுத்துவதனூடாக உள்ளூர் பயிர்ச் செய்கையாளர்களைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் கடப்பாடு காரணமாக சோளத்தின் உற்பத்தி 2010இல் 161,694 மெற்றிக் தொன்களுக்கு 25 சதவீதத்தால் அதிகரித்தது. இதேவேளை, சின்ன வெங்காயம், சோயா அவரை, பச்சை மிளகாய் மற்றும் உழுந்தின் உற்பத்தி முறையே 34 சதவீதம் (61,811 மெற்றிக்தொன்கள்), 97 சதவீதம் (7,521 மெற்றிக் தொன்கள்), 6 சதவீதம் (49,003 மெற்றிக் தொன்கள்) மற்றும் 41 சதவீதத்தால் (9,991 மெற்றிக் தொன்கள்) அதிகரித்தன. எனினும், உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், தட்டைப் பயறின் உற்பத்தி முறையே 16 சதவீதம் (51,933 மெற்றிக் தொன்கள்) 28 சதவீதம் (58,930 மெற்றிக் தொன்கள்), 14 சதவீதத்தால் (11,609 மெற்றிக் தொன்கள்) வீழ்ச்சியடைந்தன. புத்தளம் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு சின்னவெங்காயத்தின் உற்பத்தி அதிகரிப்புக்கு பெரிதும் உதவிய அதேவேளை மாத்தளை மாவட்டத்தில் அதிக மழைவீழ்ச்சியின் காரணமாக பயிரிடுவோர் நெற் செய்கைக்கு மாறியதால் ஏற்பட்ட பயிரிடும் பிரதேசத்தின் வீழ்ச்சி காரணமாக பெரிய வெங்காயத்தின் உற்பத்தி கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. சோயாவை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் அதிகரித்து வரும் கேள்வியுடன் சோயா அவரையின் அதிகரித்த உற்பத்தி அண்மைக் காலத்தில் சோயா அவரைக்கான ஆதாயமான விலைகளின் விளைவைக் காட்டியுள்ளது. உண்மையிலேயே, அளவுக்கதிகமான உற்பத்தி காரணமாக விலைகளை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கமும் 2010இல் சோயா அவரையைக் கொள்வனவு செய்வதற்கு நெல் சந்தைப்படுத்தும் சபையூடாகத் தலையிட்டது. பெரும் போகத்தில் நாட்டில் உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு பயிர்ச்செய்கை செய்யும் நேரத்தில் தரமான உருளைக்கிழங்கு விதைகளின் பற்றாக்குறை மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட விதைகளின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பால் விளைவிக்கப்பட்டது.

**சீனி உற்பத்தி 2010இல் 31,335 மெற்றிக் தொன்களுக்கு 2.6 சதவீதத்தால் சிறிதளவு வீழ்ச்சியடைந்தது.** இது, வேளாண்மையாளர்கள் நெல் மற்றும் வாழை போன்ற ஏனைய பயிர்களுக்கு நகர்ந்தமையால் 2010இல் கரும்புச் செய்கை மேற்கொள்ளப்பட்ட பிரதேசம் 2 சதவீதமளவில் வீழ்ச்சியடைந்தமையால் பெரும்பாலும் ஏற்பட்டது. தற்போதைய உள்நாட்டு உற்பத்தி நாட்டின் வருடாந்த சீனித் தேவையின் 6 சதவீதத்தை மட்டுமே பூர்த்தி செய்யப் போதுமானது. தற்போது, செயலிழந்த ஹிங்குரான சீனித் தொழிற்சாலைக்குப் புத்துயிரளிக்கும் செயல்முறை தற்போது நடைபெறுவதுடன் கரும்புப் பயிர்ச்செய்கை ஆரம்பித்திருக்கும் அதேவேளை வர்த்தகத் தொழிற்பாடுகள் 2012இல் ஆரம்பிக்கப்படும். பயிர்ச்செய்கை மேற்கொள்வோர் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு உயர் விளைச்சலைக் கொண்ட கரும்புக்கு மாறுதல் மற்றும் வளமாக்கிப் பிரயோகம் உள்ளிட்ட முன்னேற்றமடைந்த வேளாண்மை நடைமுறைகளைப் பின்பற்றுவது இன்றியமையாததாகும். கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் 3 வகையான உயர் விளைவுகளை தரக்கூடிய கரும்புகளை 2010இல் அறிமுகப்படுத்தியது.

## மீன்பிடி

**2010இல் மீன் உற்பத்தி 381,630 மெற்றிக் தொன்களுக்கு 12 சதவீதத்தால் அதிகரித்தது.** மொத்த மீன் உற்பத்தியில் கடல் மீன்துறை 87 சதவீதத்துக்குப் பங்களிப்புச் செய்ததுடன் எஞ்சியவை நன்னீர் மீன்பிடித் துறையிலிருந்து வந்தது. இவ்வாண்டு காலப்பகுதியில் கடல் மீன் உற்பத்தி 13 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் நன்னீர் மீன் 10 சதவீதத்தால் அதிகரித்தது. 2010இல் கரைகடந்த ஆழ்கடல் மீன் உற்பத்தி ஆழ்கடலில் நிலவிய பாதகமான காலநிலைமைகளின் தாக்கம் மற்றும் இலக்கிடப்பட்ட மீன்பிடித் தலங்களிலான மெதுவான வளர்ச்சி காரணமாக எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியைவிடக் குறைவாக விளங்கியது. எனினும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலான மீன்பிடிச் செயற்பாடுகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு 2010இல் கடல் மீன் உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பெரிதும் பங்களிப்புச் செய்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலான மீன் உற்பத்தி 2010இல் 125,840 மெற்றிக் தொன்களுக்கு 40 சதவீதத்தால் அதிகரித்தது. “கிழக்கின் உதயம்” மற்றும் “வடக்கின் வசந்தம்” இன் கீழ் படகுகள் மற்றும் மீன்பிடிக் கருவிகளின் பகிர்ந்தளிப்பு மற்றும் மீன்பிடியாளர்களின் தேர்ச்சி அபிவிருத்தி உள்ளிட்ட பல எண்ணிக்கையான மீன்பிடி நிகழ்ச்சித்திட்டங்கள் இம் மாகாணங்களில் மீன்பிடித் துறையின் விரிவான மீட்சிக்கு உதவியது. சமூகப் பங்கேற்புடன் நீர் நிலைகளின் உரிய முகாமைத்துவம், சமூகத்தின் அடிப்படையிலான மீன் குஞ்சுகள் பெருகுவதற்கான இடங்களை நிறுவுதல், மீன் முட்டை உற்பத்தியை அதிகரித்தல், இவ்வாண்டில் மீன் குஞ்சுகளை இலவசமாக வழங்கல் என்பன 2010இல் நன்னீர் மற்றும்

**அட்டவணை 2.5 மீன் உற்பத்தி**

'000 மெற்றிக்தொன்கள்

| துணைத்துறை | 2009(அ) | 2010(ஆ) |
|---|---|---|
| கடல் (இ) | 293 | 330 |
| பண்ணை மீன் வளர்ப்பும் நன்னீர் மீன்பிடியும் | 47 | 51 |
| மொத்தம் | 340 | 381 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல் துறை

மூலம் : கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அமைச்சு

அலங்கார மீன்பிடியை அதிகரிக்க உதவியது. மொத்த மீன் உற்பத்தியிலான அதிகரிப்புக்கு மத்தியிலும் பாதகமான வானிலை நிலைமைகள் காரணமாக தெற்கு, மேல் மற்றும் வடமத்திய மாகாணங்களில் எதிர்பார்த்ததைவிடக் குறைந்த செயலாற்றம் மற்றும் மோதலுக்குப் பின்னரான காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட அதிகரித்த மீன் நுகர்வு காரணமாக அநேகமான வகை மீன்களின் சராசரி விலைகள் 2010இல் உயர்ந்து காணப்பட்டன.

## விலங்கு வளர்ப்பு

**2010இல் மொத்த பால் உற்பத்தி 247 மில்லியன் லீற்றர்களுக்கு அண்ணளவாக 6 சதவீதத்தால் அதிகரித்தது.** நாட்டில் பால் சேகரிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை 2009இன் 2,673 இலிருந்து 2010இல் 2,895 இற்கு அதிகரித்தமையால் உதவப்பட்டு முறைசார்ந்த பால் சந்தையில் பால் சேகரிப்பு 2009இன் 125.4 மில்லியன் லீற்றர்களிலிருந்து 2010இல் 137.6 மில்லியன் லீற்றர்களுக்கு 10 சதவீதத்தால் அதிகரித்தது. அத்துடன் போரிற்கு பின்னரான காலத்தில் பிரதான பால் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களின் குளிரூட்டும் நிலையங்களின் எண்ணிக்கையிலான அதிகரிப்பு, பெறுமதி சேர்க்கப்பட்ட பால் உற்பத்திகளை உற்பத்தி செய்யும் நிலையங்களின் அதிகரிப்பு, மற்றும் தனியார் மற்றும் அரசு திரவப்பால் விற்பனை நிலையங்களில் அதிகரிப்பு என்பன பால்த்துறையின் அண்மைய செயற்பாட்டில் பிரதிபலித்தது. அதன்படி பால் உற்பத்திகளின் மொத்தத் தேசிய தேவைப்பாட்டில் உள்நாட்டுப் பால் உற்பத்தி 2009இன் 28 சதவீதத்திலிருந்து 2010இல் 30 சதவீதத்திற்கு அதிகரித்தது. 2020 அளவில் பால் உற்பத்தியில் தன்னிறைவடைவது அரசாங்கத்தின் இலக்காகும். 2010இல் பாலின் சராசரி உற்பத்தியாளர் விலை 2009இன் லீற்றர் ஒன்றுக்கு ரூ.29.50 உடன் ஒப்பிடுகையில் லீற்றர் ஒன்று ரூ. 32.50 (கொழுப்பு/ கிருமியகற்றப்பட்ட கொழுப்பு இல்லாத = 3.8/8.3) ஆக விளங்கியமையும் பால் உற்பத்தியை ஊக்கமளிக்க உதவியது.

**அட்டவணை 2.6**

**கால்நடை வளர்ப்புத்துறை புள்ளி விபரங்கள்**

| துணைத்துறை | 2009(அ) | 2010ஆ |
|---|---|---|
| 1. தேசிய விலங்கு (எண்ணிக்கை) (மில்) | 1.5 | 1.6 |
| கறவைப் பசுக்கள் | 1.1 | 1.2 |
| எருமைகள் | 0.4 | 0.4 |
| 2. தேசிய பால் உற்பத்தி (மில். லீற்றர்கள்) | 233.4 | 247.6 |
| பசும்பால் | 184.1 | 191.9 |
| எருமைப்பால் | 49.3 | 55.6 |
| 3. பால் உற்பத்திகள் (மில். லீற்றர்கள்) | 23.3 | 17.8 |
| 4. உற்பத்தியாளர் விலை - பசும்பால் (ரூ./லீற்றர்) | 29.53 | 32.48 |
| 5. தேசிய முட்டை உற்பத்தி (எண்ணிக்கை) (மில்) | 1,142.2 | 1,139.9 |
| 6. தேசிய கோழி இறைச்சி உற்பத்தி('000 மெ.தொ) | 99.28 | 104.16 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : கால்நடைவளர்ப்பு அபிவிருத்தி அமைச்சு

**2010இல் கோழி இறைச்சி உற்பத்தி 5 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் முட்டை உற்பத்தி 2009 உடன் ஒப்பிடுகையில் 0.2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.** சோளம் இறக்குமதிகள் மீதான கட்டுப்பாட்டிற்கு மத்தியில் 2009 சிறுபோகத்தில் சோளம் வழங்கலின் பற்றாக்குறை காரணமாக சோளத்தின் விலைகள் அதிகரித்தன. இது கோழித்தீனின் விலைகளை அதிகரிக்கச் செய்தமையால் கோழி இறைச்சி மற்றும் முட்டையின் உற்பத்திச் செலவை அதிகரித்தன. பண்டிகைக் கால கேள்வியின் காரணமாக 2010 திசெம்பர் மற்றும் 2011 சனவரி கோழி இறைச்சி மற்றும் முட்டையின் விலைகள் கணிசமானளவில் அதிகரித்தமையால் விலைகளை உறுதிப்படுத்துவதற்கு 2010 திசெம்பரில் பண்டிகைக் கேள்வியின் மத்தியில் பத்து மில்லியன் முட்டைகள் மற்றும் 500 மெற்றிக் தொன்கள் கோழி இறைச்சி "லக் சதோச" இனால் இறக்குமதி செய்யப்பட்டன.

## காடாக்கல்

**காட்டுத் திணைக்களத்தால் இலங்கையில் அடையாளம் காட்டப்பட்டவாறு 2010 இறுதியில் மொத்தக் காட்டினால் சூழப்பட்ட அளவு 1,934,062 எக்டேயர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது.** அடையாளம் காணப்பட்ட கண்டல் காடுகளின் அளவு 2009இன் 8,815 எக்டேயர்களிலிருந்து 2010இல் 15,545 எக்டேயர்களாக காணப்பட்டது. இவ்வாண்டில் காடாக்கல் திணைக்களம் 873 எக்டேயர்களில் மீள்காடாக்கலினை மேற்கொண்டது. அத்துடன் 2009இல் ஆரம்பிக்கப்பட்ட உலக உணவுத்திட்டத்தின் மீள்பயிரிடலுக்கான உதவி 2010இலும் வெற்றிகரமாக தொடர்ந்தது. அதன்படி அம்பாறை, திருகோணமலை மட்டக்களப்பு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் வீட்டுத்தோட்ட அபிவிருத்தி, வேளாண்சார் காட்டு மரக்குத்திகள், குளக்கரை ஓரங்களில் மரநடுகை கால்வாய் ஓரங்களில் மர நடுகை, குள நீரேந்து புனருத்தாரணம் மற்றும் அழிவிற்குட்பட்ட கண்டல் காடுகளினுடைய புனருத்தாரணம் என்பவை இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கொண்டு நடாத்தப்பட்டன.

**"எதிர்காலத்துக்கான மகிந்த சிந்தனை தொலைநோக்கு" இல் எதிர்பார்க்கப்பட்டவாறு வேளாண்மை தொடர்பாக அரசாங்கத்தின் கொள்கை பல இலக்குகளில் கவனஞ் செலுத்துகிறது.** இது மக்களின் உணவுப் பாதுகாப்பை அடைதல், வேளாண்மையாளர்களுக்கு உயர்ந்த மற்றும் நீடித்து நிலைத்திருக்கக்கூடிய வருமானம் மற்றும் ஆதாயமான விலைகளை உறுதிப்படுத்தல், இலங்கையிலும் வெளிநாட்டிலும் உள்ள போட்டிச்சந்தைகளில் தடையற்ற நுழைவை ஏற்படுத்திக் கொடுத்தல், பண்ணையைப் பொறிமுறைப்படுத்தல், பயிர்ச்செய்கையின் கீழ்வரும் பரப்பளவை விரிவாக்கல், பண்டங்களை இடம்மாற்றும் போதான சேதத்தைக் குறைத்தல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பை உறுதிப்படுத்தல், வினைத்திறன்மிக்க பண்ணை முகாமைத் தொழில்நுட்பங்களை

அறிமுகப்படுத்தல் மற்றும் உயர் விளைச்சலைக் கொடுக்கும் விதைகளைப் பயன்படுத்தல், முன்னேற்றகரமான நீர் முகாமைத்துவம் என்பவற்றை உள்ளடக்குகிறது. இப் பணிப்புரையுடன் இணங்கிச் செல்லும் வகையில் நெல்லை தேசிய பயிராக ஊக்குவித்தல், ஏனைய களப் பயிர்களின் சுயதேவையை அடைதல், பழங்கள் மற்றும் மரக்கறிகளின் முழு உள்ளார்ந்த வளத்தை ஆராய்தல் மற்றும் பாதுகாக்கப்பட்ட பழங்கள் மற்றும் மரக்கறிகளை ஏற்றுமதி செய்தல், மலர்ச்செடிகளுக்கான திறந்த தரமான உற்பத்தி நிலையங்கள், சிறந்த நலனுக்கான மூலிகைப் பண்ணைகள், வலுவடைந்த உள்ளீட்டு வழங்கல் முறைமை, வேளாண்மையாளர் சிநேக பூர்வமான வேளாண்மைக் கடன் வழங்கல், உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்குமிடையேயான இணைப்புக்கள், பல பயிர் மற்றும் ஊடு பயிர் ஊடான பயிர்களின் பன்முகப்படுத்தல், உள்நாட்டில் குறைந்த செலவில் உற்பத்தி செய்யப்பட்ட வளமாக்கி, இயற்கைப் பானங்களை ஊக்குவித்தல் என்பன உள்ளிட்ட பல உபாயங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் அரசாங்கம் அடையாளம் கண்டுள்ளது.

**இலங்கைத் தேயிலைச் சபை, தேயிலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் செயற்பாடுகள் முக்கியமாக 2010இல் இலங்கைத் தேயிலையின் உற்பத்தித்திறன், தரம் மற்றும் பெறுமதிகூட்டலை மேம்படுத்துவதில் நெறிப்படுத்தப்பட்டுள்ளன.** தேயிலை உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன், கம்பனி மற்றும் சிறு உடமையாளர் துறைகளில் புதிய பயிரிடல், மீள்பயிரிடல் மற்றும் இடைவெளி நிரப்பல் ஊக்குவிக்கப்பட்டதுடன் சிறு உடமையாளர்களுக்கான வளமாக்கி உதவுதொகை தொடர்ந்து வழங்கப்பட்டது. மீள் பயிரிடல் மற்றும் புதிய பயிரிடலை ஊக்குவிப்பதற்கு தேயிலை சிறு உடமையாளர்களுக்கான தீர்வை எக்டேயர் ஒன்றுக்கு ரூ. 50,000 ஆல் அதிகரிக்கப்பட்டது. இதேவேளை, தேயிலை சிறு உடமையாளர் காணி புனருத்தாபன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 1,972 எக்டேயர்கள் மீள் நடுகை செய்யப்பட்டன. இலங்கைத் தேயிலைச் சபையின் கீழ் “தேயிலை ஊக்குவிப்பு மற்றும் சந்தைப்படுத்தல்” இற்கான நிதியம் 2010 நவெம்பரில் நிறுவப்பட்டதுடன் உலகளாவிய ரீதியில் இலங்கைத் தேயிலையை ஊக்குவிப்பதற்கு கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.3.50 கொண்ட ஏற்றுமதி செஸ் வரியூடாக நிதியங்கள் திரட்டப்படும். மீள் நடுகை மற்றும் புதிய நடுகையை ஊக்குவிக்கும் பொருட்டு சிறு உடமையாளர் தேயிலை பயிர்ச்செய்வோருக்கான உதவுதொகை எக்டேயர் ஒன்றுக்கு ரூ.50,000ஆல் அதிகரிக்கப்பட்டது. இலங்கை வர்த்தக அடையாளப் பெயர்களின் கீழ் உயர் பெறுமதிகூட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளை அதிகரிக்கும் பொருட்டு தொகை வடிவிலான தேயிலை ஏற்றுமதி மீதான செஸ் வரியும் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.4 இலிருந்து கிலோக்கிறாமொன்றுக்கு ரூ.10 இற்கும் அதிகரிக்கப்பட்டது. பிரதேச பெருந்தோட்ட கம்பனிகளின் கீழ் வரும் பெருமளவு தேயிலை நிலங்களை மீள் பயிரிடுதலுக்கு பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**தெங்கு ஆராய்ச்சி நிறுவனம், தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை 2010இல் தெங்குத் துறையில் அவற்றின் அபிவிருத்திச் செயற்பாடுகளை தொடர்ந்து மேற்கொண்டது.** தென் மாகாணத்தில் வெலிகம தென்னோலை வாடல் நோய் என்ற மாற்றமுடியாத நோய் தோற்றம் பெற்றமை நாட்டின் தெங்குக் கைத்தொழிலுக்குச் சாத்தியமான அச்சுறுத்தலாக இருக்கக்கூடிய அச்சம் விளைவிக்கக்கூடிய நிலையை உருவாக்கியுள்ளது. இது தொடர்பாக, பாதிப்புக்குள்ளான 18,109 தென்னை மரங்கள் இவ்வாண்டு அழிக்கப்பட்ட வேளையில் மேற்கூறிய நோயால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் தாக்குப்பிடிக்கக் கூடிய எதிர்த்து நிற்கக் கூடியதுமான கொள்ளக்கூடிய தென்னை வகைகளை அறிமுகப்படுத்தும் முதல் படிமுறையாக தென்னம் விதைகளைப் பகிர்ந்தளிப்பதற்கான ஒழுங்குமுறைகளும் மேற்கொள்ளப்பட்டன. பாம் மரங்களை வளர்க்கும் பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு உதவுவதற்கு தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தில் பாம் மரம் ஆராய்ச்சிக்கான புதிய பிரிவொன்று நிறுவப்பட்டது. இது சமையல் எண்ணெயின் கேள்விக்கும் வழங்கலுக்கும் இடையேயான இடைவெளியை நிரப்புவதற்கு பாம் தாவரத்தின் பயிர்ச்செய்கையை உள்நாட்டில் மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கும். தெங்குப் பெருந்தோட்ட உதவுதொகைத் திட்டத்துக்குத் தேவையான காணியின் குறைந்தபட்ச அளவு அரை ஏக்கரிலிருந்து கால் ஏக்கருக்குக் குறைக்கப்பட்டது. இதேவேளை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அடையாளம் காணப்பட்ட 70,000 ஏக்கரில் தெங்குப் பயிர்ச்செய்கையை அதிகரிக்கும் பொருட்டு கிளிநொச்சியில் நாற்றுமேடையை நிறுவுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், தெங்குத்துறை அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் தெங்குத்துறை அபிவிருத்திக்காக புதிய அமைச்சை நிறுவியுள்ளது. இதேவேளை, தற்போதைய மட்டத்திலிருந்து நடுத்தர காலத்தில் ஆண்டொன்றுக்கு 3,500 மில்லியன் காய்களுக்கு தெங்கு உற்பத்தியை உயர்த்தும் பொருட்டு மீள்நடுகை மற்றும் புதிய நடுகைக்கான உதவுதொகைகள், ஊடு பயிர்ச்செய்கையும் தெங்குத் துறையில் உற்பத்தித்திறன் மேம்பாடுகளையும் ஊக்குவித்தல் போன்ற வழிமுறைகள் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன. இவ் இலக்கை வசதிப்படுத்துவதற்கு தென்னம்பிள்ளைகளின் உற்பத்தி 4 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது. “கப்புறுக கிராமிய சமூகம்” என்பது மக்களிடையே தெங்குப் பயிர்ச்செய்கை மற்றும் உற்பத்திகள் பற்றிய விழிப்பூட்டலை ஏற்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட இன்னுமொரு படிமுறையாகும்.

**இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் இவ்வாண்டில் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை முன்னேற்றுவதற்கு பல வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.** நாட்டில் இறப்பர் பதியங்களின் தற்போதைய அமைப்பை மதிப்பிடப்பட்ட பின்பு மரத்தின் உயர் அளவு மற்றும் நோய்க்குத் தாக்குப்பிடிக்குத் தன்மை போன்ற முன்னேற்றமடைந்த இரண்டாந்தரப் பண்புகளுடன் உயர் விளைச்சலைக் கொண்ட பதியங்களை நடுவதற்கு இறப்பர் ஆராய்ச்சி நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டது. பாரம்பரியமற்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர்ச்செய்கையை விரிவுபடுத்தும் பொருட்டு வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் இறப்பர் பயிர்ச்செய்கை தொடர்பான முன்னோடிச் செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதுடன் ஊவா வெலஸவில் இறப்பர் பயிரிடுவோரின் வசதிக்காக மொனராகலவில் புதிய துணை நிலையம் நிறுவப்பட்டது. இதேவேளை ஆண்டு முழுவதும் பயனுறுதிமிக்க, நெருக்கமான மற்றும் தொடர்ச்சியான விரிவாக்கப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மொனராகலை, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் போன்ற பிரதேசங்களில் இறப்பர் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதற்காக இறப்பரின் மீள்நடுகை மற்றும் புதிய நடுகைக்கான உதவுதொகையும் அதிகரிக்கப்பட்டது. இறப்பரின் பெறுமதிகூட்டப்பட்ட ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கு மூல இறப்பர் மீதான ஏற்றுமதி செஸ் வரியும் 2010இல் கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.4 இலிருந்து, கிலோக்கிறாம் ஒன்றுக்கு ரூ.8 இற்கு அதிகரிக்கப்பட்டது.

**ஏனைய வேளாண்மைப் பயிர்களின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு வரவு செலவுத்திட்டம் 2011இல் பல வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன.** உயர்தரமுடைய விதைகள் மற்றும் பயிரிடற் பொருட்களின் வழங்கலை அதிகரிப்பது தொடர்பான வலியுறுத்தலுடன் அரச - தனியார் பங்குடமை அடிப்படையின் கீழ் 2011இலிருந்து மூன்று ஆண்டு விதைப் பண்ணை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய முன்னுரிமையாக தற்போதைய பத்தொன்பது அரச விதைப் பண்ணைகளையும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களிலுள்ள பயன்படுத்தப்படாத அனைத்துக் காணிகளையம் அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. மேலும், குறிப்பாக, அவிசாவளை, கம்பாகா மற்றும் கேகாலை மாவட்டங்களில் மலர்ச்செடி வளர்ப்பை ஊக்குவிக்கும் பொருட்டு உயர்தரமுடைய பூக்களையும் அலங்கார தாவரங்களையும் உருவாக்க கூடிய தோட்டம் நிறுவுவதற்கு விசேட ஊக்குவிப்பு பொதி ஒன்றினை உருவாக்குவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

**2007இல் அறிமுகப்படுத்தப்பட்ட "அபி வவெமு றட்ட நகெமு" என்ற வேளாண்மை தொடர்பான தேசியப் பிரசாரம் 2010இலும் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது.** 2009இல் 75,752 ஏக்கர் தரிசு நிலம் பயிரிடப்பட்டமைக்கு மேலதிகமாக 2010இல் மொத்தமாக 18,511 ஏக்கர் தரிசு நிலம் பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டு வரப்பட்டது. 2010இல், வீட்டுத்தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 375,000 வீட்டுத்தோட்டங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட விதை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சோளம், சின்ன வெங்காயம், தட்டைப் பயறு, மிளகாய் போன்ற ஏனைய களப் பயிர்களின் விதைகள் 42,325 கிலோக்கிறாம் 2010இல் வேளாண்மையாளர்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டன. மரக்கறிகள் மற்றும் பழங்களின் அறுவடைக்குப் பின்பான இழப்புக்கள் இலங்கையில் 30 இலிருந்து 40 சதவீதம் வரை காணப்படுகின்றன. அறுவடைக்குப் பின்பான இவ் இழப்பைக் குறைக்கும் பொருட்டு கடந்த மூன்று ஆண்டுகளில் கழிவு விலையில் வேளாண்மையாளர்கள், வர்த்தகர்கள் மற்றும் சேகரிப்பாளர்களிடையே 142,500 பிளாத்திக்குக் கூடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் இது 2010இல் பகிர்ந்தளிக்கப்பட்ட 20,700 கூடைகளையும் உள்ளடக்குகிறது. மேலும், தொடர்பான அதிகாரசபைகளால் மேற்கொள்ளப்பட்ட தீவிர பயிற்சிகள்/ விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் இவ்வாண்டில் அத்தகைய வளமாக்கிக்கான ஆதாயமான விலைகள் காரணமாக 2010இல் கலப்புப் பசளையின் உற்பத்தியில் குறிப்பிடத்தக்க மேம்பாடு காணப்பட்டது.

**இவ்வாண்டில், நாட்டில் உள்நாட்டு வேளாண்மைத் துறையை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தின் கொள்கையுடன் இணங்கிச் செல்லும் வகையில் கமத்தொழில் திணைக்களத்தின் கீழ்வரும் நிறுவனங்கள் தொடர்ந்து நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தின.** பூச்சித்தாக்கம் மற்றும் நோய்களுக்கு கூடியளவு தாக்குப்பிடிக்கக் கூடியதும் 9 மெற்றிக்தொன்/ எக்டேயர், 7 மெற்றிக் தொன்/ எக்டேயர் கொண்ட அடையத்தக்க விளைச்சலைக் கொண்ட உள்ளார்ந்த வளத்தைக் கொண்ட முறையே பிஜீ 366 மற்றும் எல்டி 408 ஆகிய உயர் விளைச்சலைக் கொண்ட இரண்டு புதிய அரிசி வகைகளை அரிசி ஆராய்ச்சி நிறுவனம் இவ்வாண்டு அறிமுகப்படுத்தியது. இரசாயனக் கட்டுப்பாடு செலவுடையதாகவும் சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதால் பூச்சி மற்றும் நோய்களுக்குத் தாக்குப்பிடிக்கக் கூடிய வகைகளை அபிவிருத்தி செய்வதே சிறந்த தேர்வாகும். ஏனெனில், இது சூழல் சிநேகபூர்வமானதாகவும் அத்தகைய நிகழ்வுகளை முகாமை செய்வதில் எதுவிதமான மேலதிக செலவும் ஏற்படாது. ஏனைய களப் பயிர்த்துறை "பிந்திய நுண்ணறிவு" உள்ளடங்கலாக நோய்களுக்குத் தாக்குப்பிடிக்கத்தக்க உருளைக்கிழங்கின் புதிய வகையை வெளியிட்டமை (கோல்டன் ஸ்ரார்) இவ்வாண்டில் பதிவு செய்யப்பட்ட குறிப்பிட்டத்தக்க முன்னேற்றமாகும். மேலும், மலர்ச்செய்கைத் துறையில் செரி வகையைச் சேர்ந்த தக்காளியின் புதிய வகை (லங்கா செரி) மற்றும் புதிய வாழைப்பழ வகையும் (மில்லேவ) வர்த்தகப் பயிர்ச் செய்கைக்காக வெளியிடப்பட்டது. மேலும், 2010இல் வேளாண்மை விரிவாக்கத்தின் உதவியுடன் வேளாண்மை

திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்ட அடிப்படை விதை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டமும் 2010இல் முன்னேற்றத்தைக் காட்டின. மேலும், கமத் தொழில் திணைக்களத்தின் கீழான நெல் விதைகளின் உற்பத்தி நிகழ்ச்சித் திட்டம் 2010இல் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தைக் காட்டிய அதே வேளையில் 2010இல் கமத் தொழிலின் விரிவாக்கத்திற்கும் உதவியது. இதன்படி கமத் தொழில் திணைக்களத்தின் கீழான நெல் விதைகளின் உற்பத்தி 2009இலிருந்து 2010இற்கு முறையே 2,900 மெற்றிக் தொன்களிலிருந்து 4,476 மெற்றிக் தொன்களாக உயர்வடைந்தது.

**பாற் பண்ணைத் துறையை முன்னேற்றுவது அரசாங்கத்தின் வேளாண்மைக் கொள்கையின் முன்னுரிமை வாய்ந்த பகுதியாகும்.** பெரும்பாலும் பன்னாட்டுச் சந்தை விலைகளிலான அதிகரிப்பு காரணமாக பால் மற்றும் பால் உற்பத்திகளின் இறக்குமதி செலவும் 2009இல் ஐ.அ.டொலர் 165.67 மில்லியனில் (65,246 மெற்றிக் தொன்கள்) இருந்து 2010இல் ஐ.அ.டொலர் 258.75 மில்லியனுக்கு (76,010 மெற்றிக் தொன்கள்) அதிகரித்தது. இப் பின்னணியில், உள்நாட்டுப் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கு அரசாங்கம் பாலின் உற்பத்தியாளர் விலையை 2010 யூனிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் லீற்றர் ஒன்றுக்கு ரூ.33 இற்கு 3 ரூபாவால் அதிகரித்தது. 2011 மாச்சில், மில்க்கோ அதன் கொள்வனவு விலையை ரூ.50/லீற்றர் இற்கு அதிகரித்தமை நாட்டில் பால் சேகரிப்பினை அதிகரிப்பதற்கான வலுவான உதவியை வழங்கும். மேலும், 2010இல் விலங்குகளை அடையாளம் காணல் விலங்குகளின் நலன்புரி மற்றும் விலங்குகளின் போக்குவரத்து போன்றவை தொடர்பான விடயங்களைக் கையாள்வதற்கு 1958ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க விலங்குகள் சட்டத்திற்கு 2010இல் சில திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. இத்துடன் இன விருத்திக்கான பண்ணை விலங்குகள் மற்றும் பால் பதனிடல் தொடர்பான பண்ணைக் கருவிகள் மீதான தீர்வைகள் நீக்கப்பட்டமையும் பால் பண்ணையைப் பலப்படுத்தும் அரசாங்கத்தின் கொள்கையுடன் இணங்கிச் செல்லும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் இடம்பெயர்ந்த கால்நடைகளை ஒன்று திரட்டல் மற்றும் அத்தகைய கால்நடைகளை குறிப்பாக மோதலால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள வேளாண்மையாளர்களுக்குக் கையளித்தல், பாற்பண்ணைக் கிராமங்களை விரிவுபடுத்தல் மற்றும் செயற்கை முறையிலான கருத்தரிப்பு மற்றும் புல்வெளிகளை அபிவிருத்தி செய்தல் போன்ற செயற்பாடுகள் நாட்டில் பால்பண்ணை விலங்குகளின் குடித்தொகையை அதிகரிக்க உதவியது. 2010இல் மொத்தமாக 190,771 செயற்கை முறையிலான கருத்தரிப்புக்கள் மாடு மற்றும் எருமைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் இது 2009 உடன் ஒப்பிடுகையில் 10 சதவீத அதிகரிப்பாகும். 2010இல் தேசிய கால்நடைகளின் குடித்தொகை 2009இன் 1,136,860 உடன் ஒப்பிடுகையில் 1,169,670 இற்கு 3 சதவீதத்தால் அதிகரித்தது.

**நாட்டின் வேளாண்மைத்துறை வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கு பல்வேறு துறைகளில் விசேட கவனம் செலுத்தல் வேண்டும்.** வேளாண்மைத் துறையின் போட்டித்தன்மையை அதிகரிப்பதற்கான வழிமுறைகள் எதிர்காலத்தில் வர்த்தக உடன்படிக்கைகளூடாக உலகத்துடன் நாட்டை மேலும் ஒருங்கிணைக்கும் எதிர்பார்ப்புக்கு அவசியமானதாகும். எனவே, உற்பத்தித்திறனிலான மேம்பாடு மற்றும் உள்நாட்டு வேளாண்மை மற்றும் ஏற்றுமதி வேளாண்மையில் பெறுமதிகூட்டலிலான அதிகரிப்பினூடாக போட்டித்தன்மையில் கவனம் செலுத்த வேண்டும். இது சம்பந்தமாக, முன்னேற்றமடைந்த வேளாண்மை மற்றும் தயாரிப்பு நடைமுறைகளைப் பின்பற்றல், சாத்தியமானளவிற்கு மூலதனத்தைக் கூடுதலாகக் கொண்ட முறைகளைப் பின்பற்றல் மற்றும் அறுவடைக்குப் பின்பான இழப்புக்கள் மற்றும் பொருத்தமான தொழில்நுட்பப் பணிகளை வழங்கல் என்பன மேம்பாட்டுக்கான துறைகளாக காட்டப்படலாம். இதற்கும் மேலாக, நாட்டில் உணவு பதனிடலில் முதலீடுகளையும் ஊக்குவிக்க பாரிய அளவிலான பண்ணைத் தொழிலில் தனியார்துறை முதலீட்டை ஊக்கப்படுத்துவதற்கான வழிமுறைகளைக் கொண்டு வருவதும் இன்றியமையாததாகும்.

## கைத்தொழில்

**கைத்தொழில்துறை முன்னைய ஆண்டின் 4.2 சதவீத கொண்ட மீதமான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 8.4 சதவீதம் கொண்ட ஆகக் கூடிய துறைவாரியான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** கைத்தொழில் துறையில் இச் சாதகமான செயலாற்றத்தை அடைவதில் அனைத்துத் துணைத் துறைகளும் சாதகமாகப் பங்களிப்புச் செய்தன. கட்டடவாக்க துணைத்துறையின் விரிவாக்கத்துடன் சேர்ந்து கைத்தொழில் துறையின் ஆகக் கூடிய பங்குக்கு வகைகூறிய தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத் துறையிலான உயர் வளர்ச்சி இத் துறையின் வளர்ச்சிக்கான முக்கிய பங்களிப்புக்களாக விளங்கின. மொ.உ.உற்பத்திக்கு கைத்தொழில் துறையின் பங்கு 2009இன் 28.6 சதவீதத்திலிருந்து 2010இல் 28.7 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது.

**தொழிற்சாலைக் கைத்தொழில் மொத்த கைத்தொழில் வெளியீட்டில் அண்ணளவாக 55 சதவீதமளவிற்கு வகைகூறி, 2009இன் 3.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 7.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இவ் வளர்ச்சி 2010இல் உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளில் நிலவிய அதிகரித்த பொருளாதாரச் செயற்பாட்டினால் ஏற்பட்ட தொழிற்சாலைக் கைத்தொழிலின் அனைத்து முக்கிய வகைகளிலான முன்னேற்றமடைந்த செயலாற்றத்தால் அடையப்பட்டது. மோதலுக்குப் பின்னரான வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலிருந்தான அதிகரித்த கேள்வி, குறிப்பிடத்தக்களவிலான கருத்தில் கொள்ளக்கூடிய

**அட்டவணை 2.7 கைத்தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதி (நிலையான 2002 விலைகளில்)**

| வகை | ரூபா. மில்லியன் | | மாற்றம் (%) | |
|---|---|---|---|---|
| | 2009 | 2010(அ) | 2009 | 2010(அ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 185,142 | 197,731 | 5.9 | 6.8 |
| 2. புடவைகள் அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 87,762 | 92,293 | 0.6 | 5.2 |
| 3. மரம், மர உற்பத்திகள் | 1,125 | 1,193 | 3.7 | 6.0 |
| 4. தாள் உற்பத்திகள், வெளியீடு, அச்சுப்பதிப்பு | 1,635 | 1,742 | 2.3 | 6.5 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர்,பிளாத்திக்கு உற்பத்திகள் | 59,706 | 66,990 | 1.8 | 12.2 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 14,794 | 16,328 | -3.3 | 10.4 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 965 | 1,028 | 0.7 | 6.5 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள்,பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் | 32,794 | 35,482 | 3.4 | 8.2 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 2,004 | 2,138 | 5.1 | 6.7 |
| **மொத்தம்** | **385,927** | **414,925** | **3.4** | **7.5** |

(அ) தற்காலிகமானவை

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

குறைந்த வட்டி வீதங்கள், குறைந்த பணவீக்கம் மற்றும் அதிகரித்துச் செல்லும் வியாபார மற்றும் நுகர்வோர் நம்பிக்கை 2010இல் உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களிலான வளர்ச்சிக்குத் தேவையான பொருத்தமான பொருளாதாரச் சூழலை உருவாக்கியது. உலகப் பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்தமையினால், நன்கு இணைக்கப்பட்ட வியாபார வர்த்தக அடையாளமிடல் உபாயங்கள், சந்தையைப் பன்முகப்படுத்தும் உபாயங்கள், உற்பத்தியின் சொத்துப்பட்டியலிலான விரிவாக்கம் என்பவற்றுடன் முக்கிய வர்த்தகப் பங்காளர்களிடமிருந்தான அதிகரித்த கேள்வியால் ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்கள் நன்மையடைந்தன. ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழிலாளர்களால் பின்பற்றப்பட்ட இப் போட்டித்தன்மை வாய்ந்த வழிமுறைகள் அவர்கள் தற்போதைய சந்தைப் பங்கைத் தக்க வைப்பதற்கும் அது போல் பன்னாட்டுச் சந்தையில் புதிய சந்தைப் பிரிவுகளை கைப்பற்றுவதற்கும் உதவியது. ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களினுள், புடவை, அணியும் ஆடை மற்றும் தோல் உற்பத்திகள் வகை பிரதான ஆடை மற்றும் புடவை தயாரிப்பாளர்களால் பின்பற்றப்பட்ட உற்பத்தி மேம்பாடு மற்றும் செலவைச் சேமிக்கும் உபாயங்கள் காரணமாக 2010 ஓகத்திலிருந்து ஆரம்பிக்கும் ஜிஎஸ்பி + சலுகை நிறுத்தப்பட்டதற்கு வெற்றிகரமாக முகங் கொடுக்கக் கூடியதாக இருந்தது.

**தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீட்டிலான வளர்ச்சி உள்நாட்டு மற்றும் ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களில் பிரதிபலிக்கப்பட்டது.** மொத்தத் தொழிற்சாலைக் கைத்தொழில் வெளியீட்டில் கிட்டத்தட்ட 48 சதவீதத்திற்கு வகைகூறும் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் வகையிலான வளர்ச்சி மோதலுக்குப் பின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சந்தைகளின் விரிவாக்கம் மற்றும் இவ்வாண்டில் அதிகரித்த சுற்றுலாச் செயற்பாட்டினால் பெரிதும் உந்தப்பட்டது. உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்தி வகையும் சீமெந்து மற்றும் கட்டடப் பொருட்களுக்கான உயர் கேள்வியுடன் வெளியீட்டு வளர்ச்சிக்கான பிரதான உந்து சக்தியாக விளங்கியது. கண்ணாடி, மட்பாண்டப் பொருட்கள், கம்பிகள், தடங்கள், இரும்பு, உருக்குத் தகடுகள் மற்றும் பூச்சுக்கள் உள்ளிட்ட உள்நாட்டுச் சந்தையை நோக்காகக் கொண்ட பல கைத்தொழில்கள் 2010இல் சாதகமான வளர்ச்சி வீதங்களைப் பிரதிபலித்தன. ஏற்றுமதிச் சந்தையை நோக்காகக் கொண்ட கைத்தொழில்களிலான வளர்ச்சி புடவை, ஆடை, பெற்றோலியம், இறப்பர், பொறி மற்றும் கருவி வகைகளால் ஏற்பட்டன. புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகை உலகப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சியடைவதற்கு எதிர்பார்த்ததைவிடக் கூடிய காலம் எடுத்தபோதிலும் 2010இன் நான்காம் காலாண்டு இறுதியில் மீட்சிக்கான அறிகுறியை வெளிபடுத்தியது. ஏற்றுமதிச் சந்தையை நோக்காக் கொண்ட கைத்தொழில்களில் அதிகரித்த வெளியீட்டுககுப் பங்களிப்புச் செய்த ஏனைய முக்கிய துறைகளாக வைரம் பட்டை தீட்டல், மேசைப் பொருட்கள், தளம் மற்றும் சுவர் ஓடுகள், கப்பல் கட்டல் மற்றும் திருத்த வேலை, போக்குவரத்துக் கருவி மற்றும் பொறி விளங்கின.

**உள்நாட்டுச் சந்தையிலான விரிவாக்கத்தின் மூலம் நன்மையடைந்த உணவு, பானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி வகை 2009இன் 5.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 6.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.** வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த முக்கிய துணை வகைகள் பதனிடப்பட்ட உணவு, குடிபானங்கள், வெதுப்பகப் பொருட்கள் மற்றும் கோழித்தீன் என்பவற்றை உள்ளடக்குகின்றன. தனியார் துறையில் உற்பத்தி இயலளவிலான அதிகரிப்பு பாற்பண்ணை, சீனி மற்றும் உப்புத் துறைகளிலுள்ள தயாரிப்பாளர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை உற்பத்தியும் 2010இல் பன்னாட்டுச் சந்தைகளில் 'இலங்கைத் தேயிலை' இற்கான உயர் விலைகளால் உதவப்பட்டு கணிசமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. இலங்கைத் தேயிலைத் தயாரிப்பாளர்கள் பாரிய அளவிலான தேயிலைப் பொதிகள், உறைகள், உடன் தேயிலைத் தூள், பச்சைத் தேயிலை மற்றும் சுவையூட்டப்பட்ட தேயிலையை பன்னாட்டுச் சந்தைகளுக்கு வழங்குவதன் மூலம் தொடர்ந்து பெறுமதிகூட்டப்பட்ட தேயிலைக்கு நகர்கின்றனர்.

**பதனிடப்பட்ட உணவு தயாரிப்புத் துணைத்துறை ஏற்றுமதி மற்றும் உள்நாட்டுச் சந்தைகள் இரண்டிலுமான விரிவாக்கத்துடன் உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் வகையில் முக்கிய பங்கை வகித்தது.** ஏற்றுமதிச் சந்தையிலான விரிவாக்கம் உலர்வலயப் பழங்கள், மரக்கறிகள், தானியங்கள்,


வாசனைத் திரவியங்கள், சரக்குச் சாமான்கள், கடல் உணவு என்பவற்றை உள்ளடக்கிய பதனிடப்பட்ட உணவிலான உயர்ந்த வெளியீட்டால் அதிகரிக்கப்பட்டது. உள்நாட்டில் பதனிடப்பட்ட உணவுச் சந்தையும் அதிகரித்த சுற்றுலாச் செயற்பாடுகள், வாடிக்கையாளர்களின் மாறுபடும் நுகர்வுப் பாங்கு மற்றும் நாடு பூராவுமுள்ள பிரதான சிறப்பு அங்காடித் தொடர்கள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்களின் விரிவாக்கம் என்பனவற்றின் மூலம் நன்மையடைந்தது. உணவு பதனிடும் தயாரிப்பாளர்கள் பன்னாட்டு ரீதியாக இனங் காணப்பட்ட பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்களைப் பெறுவதன் மூலமும் தேர்ச்சி பெற்ற தொழில்நுட்பத் தர ஊழியர்களுக்கான பயிற்சியை வழங்குவதன் மூலமும் பன்னாட்டுச் சந்தைகளைத் தொடர்ந்து கவர்ந்தன. இலங்கை உலகின் வாசனைத் திரவியச் சந்தைக்கு கறுவா மற்றும் ஏனைய பல வாசனைத் திரவியங்களின் மிகப் பெரிய வழங்குநராக விளங்கிய போதிலும் வாசனைத் திரவியங்களின் பெறுமதிகூட்டல் தொடர்ந்தும் குறிப்பிடத்தக்களவான குறைந்த மட்டங்களிலேயே காணப்படுகிறது. எனினும், பெறுமதிகூட்டப்பட்ட வாசனைத் திரவியங்களைத் தயாரிக்கும் கைத்தொழில் உற்பத்திச் செயல்முறையில் பொறிமுறைப்படுத்தப்பட்ட உலர்த்தல் மற்றும் அரைத்தலை உள்ளடக்குவதன் மூலமும் ஐரோப்பா, யப்பான் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளிலுள்ள புதிய சந்தைகளைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமும் தொடர்ந்து புதியதைப் புகுத்திக் கொண்டிருந்தது.

**புடவை, அணியும் ஆடை மற்றும் தோல் உற்பத்திகள் வகை 2009இன் 0.6 சதவீதம் கொண்ட சிறு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 5.2 சதவீதத்தினால வளர்ச்சியடைந்தது.** இக் கைத்தொழிலுக்கு பிராந்திய தயாரிப்பாளர்களிடமிருந்தான உயர்மட்டப் போட்டி, ஜீஎஸ்பி+ சலுகை இடைநிறுத்தப்பட்டமை, உயர் தேர்ச்சியுள்ள தொழிலாளர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப் பொருட்களின் உயர் செலவு போன்ற பல சவால்களுக்கு மத்தியிலும் கைத்தொழில் முக்கிய மேற்கத்தைய ஆடை வர்த்தக அடையாளங்களுக்கு உயர்தரமானதும், நவீனமயமான உற்பத்திகளைத் தயாரிப்பதன் மூலம் ஏற்றுமதிச் சந்தைகளில் தொடர்ந்தும் போட்டி வாய்ந்ததாக விளங்கியது. “ஒழுக்க நெறியில் தயாரிக்கப்பட்ட ஆடைகள்”, “குற்றமற்ற சான்றபடுத்தலுடனான ஆடைகள்” மற்றும் ‘நீடித்து நிலைத்திருக்கக்கூடிய சூழல் சிநேகபூர்வமான தயாரிப்பு’ ஆகிய தொனிப்பொருளில் பிரசாரங்களை ஆரம்பித்ததன் மூலம் பின்பற்றப்பட்ட உபாயங்கள் பன்னாட்டுச் சந்தைக்கு உயர் தரமுடைய முடிவுப் பொருட்களை வழங்குவதற்கான நற்பெயரைப் பேணுவதற்கு பிரதான ஆடை தயாரிக்கும் கைத்தொழிலுக்கு உதவின.

**ஆற்றல்வாய்ந்த முகாமைத் தேர்ச்சிகள், உயர் உற்பத்தித்திறன் மற்றும் தர முகாமைத்துவம் மீது அதிகரித்தளவில் கவனம் செலுத்தியமை 2010இல் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகையிலான வளர்ச்சிக்கு முதன்மைக் காரணிகளாக விளங்கின.** ஆடைக் கைத்தொழில் அவற்றின் ஏற்றுமதி சேரிடங்களைப் பன்முகப்படுத்தும் பொருட்டு ஆசியப் பிராந்தியத்திலுள்ள பெறுமதிகூடிய சந்தைகளை ஆராய்வதிலும் கவனம் செலுத்தியது. உள்நாட்டு ஆடைக் கைத்தொழில்களின் கழிவுத் துணிகளைப் பயன்படுத்தி மீள் பொறியப்படுத்தப்பட்ட வடிவமைப்பு உற்பத்திகளை ஆரம்பித்தல், அவற்றை மேற்கத்தைய ஆடை வர்த்தக அடையாளங்களுக்கு வழங்கும் விதத்தில் நவீனத்துவ ஆடையாக மீள் சுழற்சி செய்தல் மற்றும் மாற்றுதல் என்பவற்றை ஆடைக் கைத்தொழிலுள்ள புதிய கண்டுபிடிப்புக்கள் உள்ளடக்குகின்றன. 2010 ஓகத்திலிருந்து ஜீஎஸ்பி + சலுகை இடைநிறுத்தப்படுவதன் மூலம் ஏற்றுமதிகள் எதிர்மறையாகப் பாதிக்கப்படக் கூடும் என்ற கரிசனை இருந்த போதிலும் ஐரோப்பா மற்றும் ஐக்கிய அமெரிக்க ஆடைகளின் சில்லறை விற்பனையாளர்களுடன் புடவைத் துறையிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதுடன் 2010இன் இறுதிக் காலாண்டில் அதிகரித்த கட்டளைகளை அவர்கள் முன்வைத்தனர்.

**இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் வகை 2009இன் 1.8 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 12.2 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.** மிகப் பெரிய துணை வகையான இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் இயற்கை மற்றும் செயற்கை இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளுக்கான அதிகரித்த கேள்வியுடன் இவ்வாண்டில் உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது. உந்து ஊர்திக் கைத்தொழில் ஏற்பட்ட பெருஞ்சிறப்பு வாய்ந்த மீட்சி உலக சந்தையில் இயற்கை இறப்பரின் விலை மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்தியது. ஐரோப்பிய மற்றும் ஐக்கிய அமெரிக்க உந்து ஊர்திக் கைத்தொழில்களிலான பலமான மீட்சியும் திண்ம டயர்களின் உற்பத்தியில் கணிசமான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது. இவ்வாண்டில் பிவிசி மற்றும் தீந்தைக் கைத்தொழில்கள் உள்நாட்டுச் சந்தையிலான அதிகரித்த கட்டடவாக்கச் செயற்பாடுகளால் நன்மையடைந்தன.

வரைபடம் 2.3 கைத்தொழிலில் கூட்டப்பட்ட பெறுமதியின் உள்ளடக்கம் - 2010 (2002 நிலையான விலைகளில்)



**அட்டவணை 2.8 முதலீட்டுச் சபையல்லா தனியார்துறைக் கைத்தொழில்களின் தொழிற்சாலை இலாப விகிதங்கள் (அ)**

| வகை | மொத்த உற்பத்திச் செலவு (ரூபா.மில்லியன்) | | உற்பத்தியின் மொத்தப் பெறுமதி (ரூபா மில்லியன்) | | தொழிற்சாலை இலாப விகிதம் (சதவீதம்) | |
|---|---|---|---|---|---|---|
| | 2009 (ஆ) | 2010 (இ) | 2009 (ஆ) | 2010 (இ) | 2009(ஆ) | 2010 (இ) |
| 1. உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்திகள் | 132,956 | 146,456 | 155,992 | 172,283 | 14.8 | 15.0 |
| 2. புடவைகள், அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் | 36,214 | 41,236 | 40,885 | 46,965 | 11.4 | 12.2 |
| 3. மரம், மர உற்பத்திகள் | 2,835 | 3,205 | 3,216 | 3,642 | 11.8 | 12.0 |
| 4. தாள் உற்பத்திகள், வெளியீடு, அச்சுப்பதிப்பு | 9,123 | 10,273 | 10,415 | 11,742 | 12.4 | 12.5 |
| 5. இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 72,273 | 83,398 | 85,106 | 98,563 | 15.1 | 15.4 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 45,628 | 53,621 | 52,747 | 62,161 | 13.5 | 13.7 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 4,498 | 5,042 | 5,220 | 5,864 | 13.8 | 14.0 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் | 28,206 | 32,356 | 32,678 | 37,578 | 13.7 | 13.9 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 5,514 | 6,411 | 6,295 | 7,335 | 12.4 | 12.6 |
| மொத்தம் | 337,247 | 381,998 | 392,554 | 446,133 | 14.1 | 14.4 |

(அ) 510 முதலீட்டுச் சபையல்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) திருத்தியமைக்கப்பட்டவை
(இ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

**உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்தி வகைகளின் வெளியீடு 2009இன் 3.3 சதவீதம் கொண்ட எதிர்க்கணிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 10.4 சதவீதத்தால் அதிகரித்தது.** சீமெந்து, ஓடுகள் மற்றும் கூரைத் துணை வகைகளிலான வளர்ச்சி தனியார் துறையிலான அதிகரித்த கட்டடவாக்கச் செயற்பாடு அது போல் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலான புனருத்தாபனம் மற்றும் மீள்கட்டடவாக்கச் செயற்பாடுகளுடன் இணைந்த அரச உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்கள் தொடர்ந்து இடம்பெற்றமை என்பவற்றால் ஏற்பட்டது. உயர் தரமுள்ள போசிலின் உற்பத்திகள் மற்றும் ஓடுகளுக்கான ஏற்றுமதிக் கேள்வி ஐரோப்பா மற்றும் ஐக்கிய அமெரிக்கச் சந்தைகளிலுள்ள பிரதான ஏற்றுமதி முடிவிடங்களின் பொருளாதாரச் செயற்பாடுகளிலான படிப்படியான மீட்சியுடன் மேலும் அதிகரித்தது. உலகில் மிகவும் விலையுயர்ந்த மேசைப் பொருளாகக் கருதப்படும் 'போன் சீனா மேசைப்பொருள்' போன்ற உயர் பெறுமதியுடைய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் உலக சந்தையில் அவற்றின் நிலையை மேலும் பலப்படுத்தினர். போசிலின் தயாரிப்பாளர்கள் புதிய மேற்பரப்பு வடிவமைப்பு மற்றும் தோற்றங்களை விருத்தி செய்வதற்கு பன்னாட்டு மேசைப் பொருள் வடிவமைப்பாளர்களுக்கு அதிகாரமளித்ததன் மூலம் அவர்களின் உற்பத்தி வகைகளை மேலும் அதிகரித்தனர். ஏற்கனவேயுள்ள சுற்றுலா விடுதிகளைப் புத்தாக்கம் செய்தல் மற்றும் புதிய சுற்றுலா விடுதிகளை நிர்மாணித்தல் என்பவற்றுடன் இணைந்த சுற்றுலாச் செயற்பாடுகள் உள்நாட்டுச் சந்தையில் உயர் தரமுள்ள மேசைப் பொருட்களுக்கான கேள்வியை அதிகரிக்கச் செய்வதில் பங்களிப்பாற்றின. உலகில் இரத்தினக் கற்களைக் கொண்ட முக்கிய ஐந்து நாடுகளில் ஒன்றாகவும் வைரத்தைப் பட்டை தீட்டுதலில் பெறுமதிகூட்டப்பட்ட நிபுணராகவும் விளங்குகிறது. உலகம் முழுவதும் பட்டை தீட்டப்பட்ட வைரங்களுக்கான கேள்வி அதிகரித்தமையால் இவ்வாண்டில் இவ்விரு துணை வகைகளிலான ஏற்றுமதிகள் அதிகரித்தன. பானம் துறையிலிலான அதிகரித்த கேள்வி உள்நாட்டுச் சந்தையில் கண்ணாடிக் குவளைத் தயாரிப்புத் துறையில் 2010இல் கணிசமான வளர்ச்சியை ஏற்படுத்தியது.

**உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி வகை 2009இல் பதிவு செய்யப்பட்ட 3.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 8.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** உருவமைக்கப்பட்ட உலோகப் பொருட்கள் வகையினுள் குறிப்பிடத்தக்க பங்கிற்கு வகைகூறும் கப்பல் மற்றும் படகு கட்டும் துணை வகை உலகளாவிய கப்பல்படுத்தல் கைத்தொழிலிலான தொடர்ச்சியான மந்த நிலைக்கு மத்தியிலும் 2010இல் ஓர் உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது. இலங்கையின் கப்பல் மற்றும் படகு கட்டுபவர்கள் குறிப்பக பாரிய மற்றும் நடுத்தர அளவு கலம்களை வழங்குவதில் இவ்வாண்டினுள் அதிக எண்ணிக்கையான பன்னாட்டுக் கட்டளைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. உள்நாட்டுக் கப்பல் கட்டும் கம்பனிகள் அதன் முதலாவதும் பெரியதுமான ஆழ்கடல் பயணிகள் கலத்தை 2010இல் கட்டியதுடன் பாரிய இழுவைக் கலன்கள், சேறுவாரும் இயந்திரம் பொருத்தப்பட்ட படகு மற்றும் பல்புடை கலன்களைக் கட்டுதல் மற்றும் திருத்த வேலைகளில் துணிகர முயற்சியில் ஈடுபட்டன.

**வடக்கு மற்றும் கிழக்குக் கடல் பிரதேசங்கள் மீன்பிடிக்காக திறந்து விடப்பட்டமையினால், படகு கட்டும் கைத்தொழில் குறிப்பிடத்தக்க மீட்சியடையும் அறிகுறிகளைக் காட்டியது.** 2010இல் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட கப்பல்கள், பொழுதுபோக்குப் படகுகள், சிறிய மற்றும் நடுத்தரளவிலான ஆடம்பர பந்தயப் படகுகளுக்கு அதிகரித்த கேள்வி காணப்பட்டது. மேலும், பொழுதுபோக்குப் படகின் முக்கிய தயாரிப்பாளர்கள் குறிப்பாக ஐரோப்பா, மொறீசியஸ், சொலமன் தீவுகள், சிங்கப்பூர் மற்றும் மத்திய கிழக்கு உள்ளிட்ட பன்னாட்டுச் சந்தைகளில் அதன் பிரசன்னத்தைத் தொடர்ந்தது. விசேடமாக வடக்கு மற்றும்

அட்டவணை 2.9

**முதலீட்டுச் சபையல்லா தனியார்துறைக் கைத்தொழிலின் உள்நாட்டுச் செலவு அமைப்பு (அ)**
**(மொத்த உற்பத்திச் செலவின் சதவீதமாக)**

| வகை | வலுவும் எரிபொருளும் | | கூலி | | மூலப்பொருட்கள் | | வட்டி | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2009 | 2010 (ஆ) | 2009 | 2010 (ஆ) | 2009 | 2010 (ஆ) | 2009 | 2010 (ஆ) |
| 1. உணவு, குடிபாணங்கள், புகையிலை உற்பத்திகள் | 3.8 | 3.8 | 10.7 | 10.8 | 40.8 | 41.2 | 2.1 | 1.6 |
| 2. புடவைகள், அணியும், ஆடைகள், தோல் உற்பத்திகள் | 5.2 | 5.4 | 15.5 | 15.6 | 13.8 | 14.1 | 3.4 | 2.8 |
| 3. மரம், மர உற்பத்திகள் | 10.2 | 10.5 | 16.7 | 17.2 | 33.6 | 34.0 | 5.0 | 3.8 |
| 4. தாள் உற்பத்திகள், வெளியீடு, அச்சுப்பதிப்பு | 4.9 | 5.1 | 13.3 | 13.6 | 20.2 | 20.7 | 4.2 | 3.2 |
| 5. இரசாயணம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் | 7.1 | 7.3 | 13.9 | 14.3 | 31.5 | 32.3 | 4.4 | 3.0 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 21.4 | 21.6 | 15.5 | 15.9 | 30.1 | 31.0 | 4.5 | 3.0 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 10.3 | 10.6 | 11.1 | 11.4 | 36.4 | 36.8 | 2.9 | 1.9 |
| 8. உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 5.7 | 5.8 | 12.9 | 13.0 | 27.6 | 29.2 | 5.2 | 3.4 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடாத தயாரிப்பு உற்பத்திகள் | 5.8 | 6.0 | 12.2 | 12.3 | 35.0 | 35.3 | 2.1 | 1.5 |
| மொத்தம் | 7.0 | 7.2 | 12.8 | 13.0 | 33.5 | 33.8 | 3.3 | 2.6 |

(அ) 510 முதலீட்டுச் சபையில்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

கிழக்கு மாகாணங்களிலுள்ள கடற் பிரதேசங்களில் தோற்றம் பெற்றுவரும் சுற்றுலா கைத்தொழில் பொழுதுபோக்குப் படகுகள் மற்றும் கடல் சுற்றுலா பயணத்துக்காக கலங்களின் கேள்வியை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**2010இல் அரச துறை வெளியீட்டில் 95 சதவீதத்திற்கும் கூடுதலானதைப் பங்களிப்புச் செய்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் குறைந்த உற்பத்தியின் முக்கிய காரணமாக அரசதுறை வெளியீடு மேலும் வீழ்ச்சியடைந்தது.** பெற்றோலியத் தூய்மி இரண்டு மாதங்களுக்கு முன்கூட்டியே அட்டவணையிடப்பட்டவாறு மூடப்பட்டமையால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி 13 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இலங்கை கனிப்பொருள் மணல்களின் உற்பத்தி 53 சதவீதத்தால் அதிகரித்து இவ்வாண்டினுள் 39 சதவீத இயலளவுப் பயன்பாட்டை அடைந்தது. லங்காசோவ்ற் லிமிடெட் மற்றும் லங்கா பொசுபேற்று லிமிடெட் என்பனவும் 2010இல் சாதகமான வளர்ச்சிகளைப் பதிவு செய்தன. எதிர்க்கணிய வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்த ஏனைய அரச தொழில் முயற்சிகள் இலங்கை இறப்பர் தயாரிப்பு மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனம் லிமிடெட், அரச மரக்கூட்டுத்தாபனம், தேசிய தாள் கம்பனி லமிட்டட் மற்றும் இலங்கை ஆயுள்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் என்பவற்றை உள்ளடக்குகின்றன. அரச வளங்கள் மற்றும் அபிவிருத்தி அமைச்சு நட்டங்களை ஏற்படுத்தும் மற்றும் செயலிழந்த அரசுக்குச் சொந்தமான கைத்தொழில்களை நீடித்து நிலைத்திருக்கக் கூடிய தொழில் முயற்சிகளாக மாற்றுவதற்கு அமைப்பு ரீதியிலான மாற்றங்களூடாக பல வழிமுறைகளை ஏற்கனவே எடுத்துள்ளது.

**முதலீட்டுச் சபையல்லாத தனியார்துறைக் கைத்தொழில்களின் தொழிற்சாலை இலாப விகிதம் முன்னைய ஆண்டின் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 2.1 சதவீதத்தால் அதிகரித்தது.** இலாபகரத்தன்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு 2010இல் நிலவிய பொருத்தமான வியாபாரச் சூழல் காரணமாக ஏற்பட்டது. சாதகமான உள்நாட்டுக் காரணிகளிலிருந்து ஏற்பட்ட அதிகரித்த விற்பனைகள் உயர் விற்பனை வருமானத்துக்குப் பங்களிப்புச் செய்திருக்கையில் வட்டிச் செலவுகளிலான குறைப்பு, மாற்று வலு மூலங்களின் பயன்பாடு, உற்பத்தித்திறனிலான அதிகரிப்பு, தொழிற்சாலை இலாப விகிதங்களை மேம்படுத்துவதில் சாதகமாக பங்களிப்புச் செய்தன. இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு மூலப்பொருட்கள் இரண்டினதும் செலவு உலகளாவிய அது போல் உள்ளூர்க் கேள்வியின் அதிகரிப்பால் அதிகரித்தது. வட்டிச் செலவில் குறிப்பிடத்தக்களவு ஓர் வீழ்ச்சியானது 2009இன் 3.3 சதவீதத்திலிருந்து 2010இன் 2.6 சதவீதத்திற்கு அவதானிக்கப்பட்டது. புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்திகள் வகை என்பவற்றில் 2009இல் நிலவிய குறைந்த கேள்வி காரணமாக உற்பத்தித்திறனில் ஏற்பட்ட வீழ்ச்சி 2010இன் இறுதிக் காலாண்டில் அநேகமான புடவைத் தொழிற்சாலைகள் முழு இயலளவில் தொழிற்பட்டமையால் குறிப்பிடத்தக்க மீட்சியை எடுத்துக் காட்டியது.

அட்டவணை 2.10

**முதலீட்டுச் சபையல்லா தனியார்துறைக் கைத்தொழில்களின் தொழிலாளர் உற்பத்தித்திறன் சுட்டெண் (அ)**

1995=100

| வகை | 2009 | 2010 (ஆ) | மாற்றம் (%) |
|---|---|---|---|
| 1. உணவு, குடிபாணங்கள், புகையிலை உற்பத்திகள் | 146.0 | 150.1 | 2.8 |
| 2. புடவைகள் அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 127.6 | 132.2 | 3.6 |
| 3. மரம், மர உற்பத்திகள் | 114.0 | 117.1 | 2.7 |
| 4. தாள் உற்பத்திகள், வெளியீடு, அச்சுப்பதிப்பு | 114.0 | 116.8 | 2.5 |
| 5. இராசாயணம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர் பிளாத்திக்கு உற்பத்திகள் | 159.4 | 165.6 | 3.9 |
| 6. உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் | 123.8 | 127.3 | 2.8 |
| 7. அடிப்படை உலோக உற்பத்திகள் | 110.8 | 113.6 | 2.5 |
| 8. உருவமைக்கப்பட்ட உலோக உற்பத்திகள் பொறிகள் மற்றும் போக்குவரத்துக் கருவி | 139.1 | 144.2 | 3.7 |
| 9. வேறு எங்கும் குறிப்பிடப்படாத தயாரிப்பு உற்பத்திகள் | 122.9 | 125.9 | 2.2 |
| மொத்தம் | 134.7 | 138.8 | 3.0 |

(அ) 510 முதலீட்டுச் சபையில்லாத் தனியார்துறை நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டது.
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## சிறப்புக்குறிப்பு 4 கைத்தொழில் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு நானோ தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துதல்

நானோ தொழில்நுட்பம் என்பது ஏற்கனவேயுள்ள உற்பத்திகளின் வடிவத்தினை மாற்றுவதன் மூலம் புதிய பண்புகளுடன் அத்தகைய உற்பத்திகளை தனிச் சிறப்பான உற்பத்திகளாக மாற்றியமைக்கக் கூடிய ஆற்றலைக் கொண்டுள்ள புதியதொரு கண்டுபிடிப்பாகும். இது மூலக்கூறுகளின் மட்டத்தில் உள்ளமைப்பினை மீள பொறியியற்படுத்துவதனூடாக பொருட்களின் இயல்பான பண்புகளை மாற்றுவதன் வாயிலாக அணுவின் அளவு மற்றும் மூலக்கூறுகள் தொடர்பான விடயங்களை ஆராய்வதுடன் தொடர்புடையதாக விளங்குகிறது. அதேபோன்று நானோ தொழில்நுட்பங்களின் பிரயோகங்களை கைத்தொழில் துறையின் பல்வேறு விடயங்களிலும் காண முடிகிறது.

### நானோ பிரயோகத்தின் உதாரணம்

இன்று அநேகமான நாடுகள் செலவுச் சிக்கனமான முறையில் புதியதும் நவீனத்துவமுமான உற்பத்திகளைத் தயாரிப்பதற்கேற்ற விதத்தில் கைத்தொழில் துறையினை அபிவிருத்தி செய்வதில் நானோ தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி வருகின்றன. உதாரணமாக சாதாரணமான புடவை மற்றும் துணிகள், திரவங்களையோ அல்லது வேறு ஏதேனும் பொருட்களையோ ஈர்த்துக் கொள்ளாத முறையில், பழுது மற்றும் கறைபடியும் தன்மைகளைத் தாங்கக்கூடியன. புடவைகளாக மாற்றப்படுகின்ற தாமரை விளைவு என்று அறியப்படும், தாமரை மலரில் காணப்படும் மிக உயர்ந்த நீர் விலக்குத் திறனானது, நானோ தொழில்நுட்பத்தின் உதவியுடன் தீந்தைகளில் அபிவிருத்தி செய்யப்பட்டு, கட்டடங்களின் சுவர்களில் நீர் மற்றும் தூசு என்பவை விலக்கப்பட்டு அவை நீண்ட காலம் சுத்தமாக இருப்பதை உறுதிப்படுத்தியது. அதேபோன்று வானுயர்ந்த கட்டடங்களின் யன்னல்களைச் சுத்தப்படுத்துவதிலுள்ள சிரமமானது, நானோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுயமாகவே சுத்தப்படுத்தக்கூடிய மேற்பரப்பில் தூசுகளோ அல்லது வேறு ஏதேனும் துகள்களோ படியாத விதத்திலான கண்ணாடிகளைத் தயாரிப்பதன் மூலம் தீர்க்கப்பட்டது. இவை கைத்தொழில் துறையில் நானோ தொழில்நுட்பங்களை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதற்கு ஒரு சில உதாரணங்கள் மட்டுமே.

### தேசிய நானோ தொழில்நுட்ப முனைவுகள்

கைத்தொழில் அபிவிருத்தியில் நானோ தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தினைப் பரிசீலனையில் கொண்டு அரசாங்கம் 2007இல் நானோ தொழில்நுட்ப பூங்காவினைக் கட்டுவதற்கு தீர்மானித்தது. இம் முனைவானது உலகம் முழுவதும் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்ற நானோ தொழில்நுட்பத்தின் அநுகூலங்களை பெற்றுக் கொள்வதற்கான ஆராய்ச்சிக்கு வசதியமைப்பதனை இலக்காகக் கொண்டதாகும். 2008இல் இத்தொழில்நுட்பத்தினை நேர காலத்துடன் பயன்படுத்திக் கொள்வதிலுள்ள உள்ளார்ந்த நன்மைகளை அடையாளம் கண்டு கொண்ட தனியார்துறை இத்துறையினை நுணுகி ஆராய்வதில் பெரும் ஈடுபாட்டினைக் காட்டியதுடன் அதன் விளைவாக, இலங்கை நானோ தொழில்நுட்பவியல் நிறுவனமொன்றினை நிறுவுவதில் அரசாங்கத்துடன் பங்கேற்றுக் கொண்டது. அரச தனியார் பங்குடமையான இலங்கை நானோ தொழில்நுட்பவியல் நிறுவகம் பொருளாதார ரீதியாக, சூழல் ரீதியாக மற்றும் சமூக ரீதியாகப் பயன்தரக்கூடிய ஆற்றல் வாய்ந்த செயற்றிட்டங்கள் மீதான ஆராய்ச்சிகளில் கவனம் செலுத்தியது. அதன் முதலாவது ஆண்டுத் தொழிற்பாட்டில், இலங்கை நானோ தொழில்நுட்பவியல் நிறுவகம், இலங்கையின் ஆண்டொன்றிற்கான கடந்த கால பதிவு வீதமான 1-1.5 கொண்ட பன்னாட்டு ஆக்க உரிமையுடன் ஒப்பிடுகையில் 5 பன்னாட்டு ஆக்க உரிமைகளை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. 2010இல் பெற்றுக்கொண்ட பன்னாட்டு ஆக்க உரிமைகள் கார்பன் நானோ ரியூப்புக்கள், நானோ வளமாக்கி, நானோ இறப்பர் என்பனவற்றை உள்ளடக்கியிருந்த வேளையில், இவ்வுற்பத்திகளில் சிலவற்றை வர்த்தக மயப்படுத்துவதற்கான முதல் நடவடிக்கையாக கள பரீட்சிப்புக்கள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட்ட துறைகளாக புடவை மற்றும் ஆடை உற்பத்திகள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், வளமாக்கிகள் மற்றும் காரியம், இல்மனைட் போன்ற கனிப்பொருள் உற்பத்தித் துறைகள் காணப்பட்டன.

### நானோ பிரயோகங்களுக்கான உள்ளார்ந்த வளமும் அவற்றின் செயற்பாடும்

முக்கிய ஏற்றுமதி சந்தை சார்ந்த தொழிற்சாலைக் கைத்தொழிலான புடவை மற்றும் அணியும் ஆடைகள் துறை அதன் உற்பத்திகளிலும் அதேபோன்று உற்பத்திப் பொறிமுறைகளிலும் நானோ தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் புரட்சிகரமான இலாபங்களை பெற்றுக் கொள்வதற்கான அளப்பரிய உள்ளார்ந்த வளங்களைக் கொண்டுள்ளது. இதற்கமைய, இலங்கையில் தயாரிக்கப்படுவதற்காக நானோ புடவைகளின் மீது ஆராய்ச்சிகளும் அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்பட்டதுடன், தற்பொழுது சில உற்பத்திகள் வர்த்தக மயப்படுத்தக்கூடிய கட்டடத்திற்கு அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. தற்பொழுது நானோ தொழில்நுட்பமானது ஆடைத் தயாரிப்பின் கார்பன் அடிச்சுவடுகளைக் குறைப்பதிலும் ஆடைகளின் நிறமூட்டல், பதனிடல் என்பனவற்றிலும் பயன்படுத்தப்படுவதுடன், இலங்கை ஆடை ஏற்றுமதிகளுடன் இணைந்த “பசுமை ஆடைகள்” இற்கு குறிப்பிடத்தக்களவு கூட்டப்பட்ட பெறுமதியினை வழங்கக்கூடிய வர்த்தக மயப்படுத்தலை அபிவிருத்தி செய்யக்கூடிய கட்டத்தில் தற்பொழுது இருந்து வருகின்றது. இலங்கைக்கு சாதகமான பொருளாதார தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடியது என எடுத்துக் காட்டப்படுகின்ற நானோ தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தக்கூடிய இன்னொரு விடயம் நானோ வளமாக்கியாகும். இதனை வர்த்தகப் பயிர்களுக்குப் பயன்படுத்த முடியும். தற்பொழுது களங்களில் பரீட்சிக்கப்பட்டு வரும் நானோ வளமாக்கி உயர்ந்த வினைத்திறனை ஈர்த்துக் கொள்ளக்கூடிய தனிச் சிறப்பான பண்பினைக் கொண்டிருப்பதுடன் இது குறைந்தளவு வளமாக்கியுடன் ஒரு அலகு நிலத்தில் கூடியளவு விளைச்சலைப் பெற உதவும். அதேபோன்று தற்பொழுது ஏற்றுமதி செய்யப்படுகின்ற மூலப்பொருள் வடிவிலான கனிப்பொருட்களுக்குப் பதிலாக நானோ கார்பன், டியூப்புக்கள் மற்றும் நானோ டிட்டேனியம் ஈரொட்சைட் என்பனவற்றை ஏற்றுமதி செய்வது எமது ஏற்றுமதி வருவாய்களை குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கும். இலங்கையின் இரண்டாவது பெரிய ஏற்றுமதி சார்ந்த தொழிற்சாலைக் கைத்தொழிலான இறப்பரை அடிப்படையாகக்கொண்ட உற்பத்திகளின் கைத்தொழிலும் திண்ம டயர்கள், இறப்பர் கையுறைகள் போன்ற அதன் உற்பத்திகளை நானோ இறப்பருக்கு படிப்படியாக மாற்றுவதன் மூலம் அதன் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களை அதிகரிப்பதற்கான அளப்பரிய உள்ளார்ந்த வளங்களைக் கொண்டுள்ளது.

### முன்னோக்கிய பாதை

இத்தகைய துணிகர முயற்சியை முன்னெடுப்பதிலுள்ள பிரதானமாக பிரதிகூலம் நிதிகளின் பற்றாக்குறையாகும். எனினும், நானோ தொழில்நுட்ப இயந்திரங்களை நிறுவுவதற்குத் தேவைப்படும் உயர்ந்த ஆரம்ப முதலீடானது, உயர்ந்த பொருளாதார நன்மைகள் மற்றும் குறுகிய முதலீட்டைத் திரும்பப் பெறும் காலத்தின் மூலம் நியாயப்படுத்தப்படலாம். இதனால், சரியானதும் உரிய காலத்திலுமான முதலீடுகளை மேற்கொள்வதற்கு தனியார் துறையின் பங்கேற்பு பெரியளவில் ஊக்குவிக்கப்பட்டது. அரச தனியார் பங்குடமைகளின் உருவாக்கமானது அரசு மீதான வரவு செலவுத்திட்டச் சுமையைக் குறைக்க உதவ முடியும் என்பதுடன் இத் துணிகர முயற்சிகளில் கண்டறியப்பட்ட ஆராய்ச்சி விடயங்களை வர்த்தகமயப்படுத்துவதையும் விரைவுபடுத்தும்.

**அரசாங்கம் “கமற்ற கர்மாந்த” நிகழ்ச்சித்திட்டத்தினூடாக பிரதேசக் கைத்தொழில்களின் அபிவிருத்தியை நோக்கிய அதன் கடப்பாட்டைத் தொடர்ந்து மேற்கொண்டு பிரதேசப் பகுதிகளில் அமைந்துள்ள கைத்தொழில்களுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குகிறது.** கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு “கமற்ற கர்மாந்த” நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு கிராமியப் பிரதேசங்களில் தொழில் வாய்ப்பை உருவாக்கியதுடன் கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களில் மேலும் கைத்தொழில்கள் செறிந்திருப்பதை தவிர்த்தது. இவ் அமைச்சின் உள்நாட்டுக் கைத்தொழில்கள் ஒப்புதல் குழு 2010இல் III செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்ததுடன் இவற்றில் 58 செயற்றிட்டங்கள் தொழிற்பாட்டிலிருந்ததுடன் 11 செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தலின் வெவ்வேறு கட்டங்களில் காணப்பட்டன.

**கைத்தொழில் வணிக அமைச்சின் கைத்தொழில் பேட்டை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் பிராந்தியங்களில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக 2010இல் தொடர்ந்து செயற்பட்டது.** 2010இல் மொத்தம் 608 நிலத் துண்டுகளில் 451 நிலத் துண்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதுடன் இவற்றில் 270 கைத்தொழில்கள் வர்த்தகத் தொழிற்பாட்டிலும் 33 கைத்தொழில்கள் நிர்மாணத்தின் கீழும் காணப்பட்டன புத்தள கைத்தொழில் பேட்டை மற்றும் எம்பிலிப்பிட்டி மற்றும் கலிகமுவவிலுள்ள கைத்தொழில் பேட்டைகளின் அபிவிருத்தி வேலை புதிய தொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்காக பூர்த்தி செய்யப்பட்டிருக்கையில் பல்லேகொடவத்த மற்றும் மாதம்ப கைத்தொழில் பேட்டைகளின் அபிவிருத்தி வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. மேலும், கட்டானை, பல்லேகல மற்றும் குருணாகலையிலுள்ள உத்தேச கைத்தொழில் பேட்டைகள் தொடர்பான ஆரம்ப வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந் நிகழ்ச்சித்திட்டம் “கிழக்கின் உதயம்” மற்றும் “வடக்கின் வசந்தம்” நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணையாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களையும் அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்டுள்ளதுடன் மட்டக்களப்பு, மன்னார் மற்றும் வவுனியாவிலுள்ள உத்தேச கைத்தொழில் பேட்டைளின் ஆரம்ப வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ள அதேவேளை திருகோணமலையில் (கப்பல்துறை) ஆறு மாதிரிக் கைத்தொழில் கட்டடங்களின் நிர்மாண வேலை பூர்த்தியடையும் நிலையில் காணப்பட்டது.

**முதலீட்டுச் சபை “நிபயும் - இலங்கையின் 300 தொழில் முயற்சிகள் நிகழ்ச்சித்திட்டம்” என்பதைத் தொடர்ந்து மேற்கொண்டதுடன் 2010இல் நாட்டின் கைத்தொழில் அடிப்படையை ஒழுங்குமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தியது.** இந் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 260 செயற்றிட்டங்கள் ஒப்புதல்களைப் பெற்றுக்கொண்டதுடன் இதில் 224 செயற்றிட்டங்களுக்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. மேலும், 132 செயற்றிட்டங்கள் வர்த்தகத் தொழிற்பாட்டை ஆரம்பித்திருக்கையில் 36 செயற்றிட்டங்கள் நிர்மாணத்தின் கீழ் காணப்பட்டன. முதலீடுகளில் பெரும்பாலானவை சுற்றுலா, அணியும் ஆடைகள் மற்றும் ஆடை உற்பத்தி வகைகளுள் காணப்பட்டன.

**அரசாங்கம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சித் துறையை ஊக்குவிப்பதற்கு அதன் முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டதுடன் தொழில்நிலை மற்றும் வருமானத்தை உருவாக்கும் வாய்ப்புக்களை உருவாக்கியது.** சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் உச்ச அரசாங்க நிறுவனமான தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை இத் துறையின் அபிவிருத்திக்கான கொள்கைகளை உருவாக்குவதில் அதன் முயற்சிகளைத் தொடர்ந்தது. உலக வங்கி “முன்னோடி நெருக்கடி பதிலிறுக்கும் வசதி” இன் கீழ் சிறிய நடுத்தர தொழில் முயற்சித் துறைக்கு 2010இலும் தொடர்ந்து உதவியது. இத் திட்டத்தின் கீழ், சிறிய, நடுத்தர தொழில் முயற்சித்துறை நிதியிடல் வசதிகளை வழங்கும் போது அரச மற்றும் தனியார் வர்த்தகர்களுக்கு மீள்நிதியிடல், கடன்களின் பகுதியளவிலான கொடுகடன் உத்தரவாதம் மற்றும் தொழில்நுட்ப உதவி என்பவற்றுக்கு வசதியளிக்கப்பட்டது. உலகளாவிய நிதியியல் நெருக்கடியால் மோசமாகப் பாதிக்கப்பட்ட சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கு துணை ஒப்பந்த அடிப்படையில் தொழிற்படும் சிறிய நடுத்தர தொழில் முயற்சிகளை பொருளாதார சேவைக் கட்டணத்திலிருந்து விலக்களிப்பதன் மூலமும் 10 சதவீதம் கொண்ட சலுகை ரீதியிலான வருமான வரி வீதத்தை வழங்குவதன் மூலமும் வரவு செலவுத்திட்டம் 2011இல் முன்மொழியப்பட்டுள்ளது.

**தொழிற்சாலைக் கைத்தொழில் துணைத் துறையில் பெறுமதிகூட்டலை அடைவதில் குறிப்பிடத்தக்களவில் பங்களிப்புச் செய்த பிரதான வெளிநாட்டுச் செலாவணியைச் சம்பாதிக்கும் துறைகளுக்கு வரவு செலவுத்திட்டம் 2011இல் பல ஊக்குவிப்புக்கள் முன்மொழியப்பட்டுள்ளன.** ஆடை, தோல், பாதணி மற்றும் பைகள் என்பவற்றைத் தயாரிப்பதற்கு மற்றும் தானியம் கலந்த வெதுப்பக உற்பத்திகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பொறி மற்றும் கருவிக்கு இறக்குமதித் தீர்வைகளிலிருந்தும் பெறுமதிசேர் வரியிலிருந்தும் விலக்களிக்கப்பட்டிருக்கையில் வெதுப்பக உற்பத்தி வகையின் தெரிந்தெடுக்கப்பட்ட மூலப் பொருட்கள் மீதான சுங்கத் தீர்வை குறைக்கப்பட்டது. இறக்குமதி, செயல்முறைப்படுத்தல், மீள் ஏற்றுமதி அது போல் மாற்றிக் கப்பலேற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் துறைமுகத்திலேயே நிகழும் வர்த்தகத்தைத் தூண்டுவதற்கும் ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆடைத் துறையில் தொடர்ச்சியான வளர்ச்சியை வசதிப்படுத்துவதற்கு வெளிநாட்டுச் செலாவணி

வருவாய்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிப்பதன் மூலம் ஆடைக் கைத்தொழிலிலுள்ள முன்னணி வாங்குநர்கள் அவர்களின் தலைமை அலுவலகத்தை இலங்கையில் நிறுவுவதற்கு ஊக்கமளிக்கப்பட்டனர்.

**வரவு செலவுத்திட்டம் 2011 உள்ளூர் வர்த்தக அடையாளப் பெயர்கள் மற்றும் உயர் உள்நாட்டு பெறுமதிகூட்டலைக் கொண்ட கைத்தொழில்களுக்கும் ஊக்குவிப்புக்களை முன்மொழிந்திருக்கையில் பொருளாதார ரீதியில் முக்கியம் வாய்ந்ததும் தோற்றும் பெற்றுவரும் கைத்தொழில்களுக்கும் பல ஏனைய ஊக்குவிப்புக்களை வழங்கியது.** இலங்கையிலிருந்து பெறுமதிகூட்டப்பட்ட ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்காக மூலப்பொருள் மற்றும் ஓரளவு பதனிடப்பட்ட வடிவிலான அனைத்து ஏற்றுமதிகள் மீது செஸ் வரியை விதிப்பதற்கு முன்மொழியப்பட்ட வேளையில் இறுதிப்படுத்தப்பட்ட பொருட்களின் ஏற்றுமதிகளுக்கு செஸ்வரி விதிக்கப்படமாட்டாது. 65 சதவீதத்திற்கும் கூடுதலான உள்நாட்டு பெறுமதிகூட்டலைக் கொண்டுள்ள கைத்தொழில்களுக்கும் இலங்கையில் ஒதுக்குப்பட்டுள்ள தனிக் காப்புரிமைகளுடன் இலங்கை வர்த்தக அடையாளப் பெயர்களுக்கும் வருமான வரி 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்துக்குக் குறைக்கப்படும். ஆயுள்வேதத் தயாரிப்புக்கள் உள்ளிட்ட மருந்தாக்கள் பொருட்களைப் பொதியிடுவதற்காக பயன்படுத்தப்படும் கண்ணாடி மற்றும் பிளாத்திக்குப் போத்தல்கள் மீதான சுங்கத் தீர்வை குறைக்கப்பட்ட வேளையில் மருந்தாக்கற் பொருட்களைத் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்களின் இறக்குமதி தேசிய புரள்வு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது. எனினும், புகையிலை மற்றும் வெறியக் குடிவகைகளைத் தயாரித்துப் பகிர்ந்தளிப்பதில் ஈடுபடும் நிறுவனங்களின் இலாபம் மீதான வரி 40 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது.

**நாட்டில் வியாபாரம் செய்வதை இலகுபடுத்தும் விதத்தில் முன்னேற்றுவதற்கு பல நிறுவன ரீதியிலான சீர்திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன.** அரசாங்கம் இலத்திரனியல் வடிவிலான தரவு மாற்றல் முறைமையை நிறுவுவதன் மூலம் சுங்கம் மற்றும் முதலீட்டுச் சபையை நவீனப்படுத்துவதற்கு ஏற்கனவே நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இது போலவே, முதலீட்டாளர்களுக்கு துறைவாரியான வழிகாட்டலை வழங்குதல் அது போல் ஒப்புதலளிக்கும் செயல்முறை மற்றும் வியாபாரத்தை ஆரம்பித்தல் என்பனவற்றை விரைவுபடுத்துவதற்கும் அதன் முன்னைய கொள்கையான நாட்டை அடிப்படையாகக் கொண்ட முதலீடுகளிலிருந்து துறையை அடிப்படையாகக் கொண்ட முதலீடுகளுக்கு நகர்வதற்காகவும் அடையாளம் காணப்பட்ட வலுவான துறைகளுக்கு "ஒரே இடத்தில் அனைத்து வசதிகளையும் பெற்றுக் கொள்ளல்" மற்றும் "துறை வாரியான குழுக்கள்" என்பவற்றை முதலீட்டுச் சபை நிறுவியது.

**அரசாங்கம் பல தொடர்பான அமைச்சுக்களூடாக 2010இல் அதன் கைத்தொழில் கொள்கையைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்தியதுடன் வரவு செலவுத்திட்டம் 2011 இலிருந்து பல நிறுவன ரீதியிலான சீர்திருத்தங்களை முன்மொழிந்தது.** அரசாங்கம் நடைமுறையிலுள்ள ஏற்றுமதிப் பதனிடல் வலயங்களின் வினைத்திறன்மிக்க பயன்பாட்டை அடைவதில் முதலீட்டுச் சபையூடாக புதிய முதலீடுகளைக் கவர்வதற்கு ஏற்கனவே முன்னெடுப்புக்களை எடுத்துள்ளது. இதன்படி, தற்போதுள்ள 12 ஏற்றுமதிப் பதனிடல் வலயங்களிலுள்ள வெற்றிடங்களை ஒதுக்கீடு செய்வதில் பெறுமதிகூட்டப்பட்ட தரமுள்ள முதலீடுகள், பெரிய அளவிலான முதலீடுகள் மற்றம் முன்னுரிமை வாய்ந்த துறைகளிலான முதலீடுகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டது. அதேவேளை வெளிநாட்டுக் கம்பனிகள் மற்றும் உள்நாட்டுக் கம்பனிகள் 2010 நவெம்பரிலிருந்து வெளிநாட்டு மூலங்களிலிருந்து கடன் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**உலகளாவிய அபிவிருத்திகளுடன் இணைந்து செல்லும் தேவையை அடையாளம் கண்ட பின்பு அரசாங்கம் பல நிறுவனங்களுடன் இணைந்து பன்னாட்டுச் சந்தைக்கு புதுமை வாய்ந்த கைத்தொழில் உற்பத்திகளை வசதிப்படுத்துவதற்கு பல வழிமுறைகளை மேற்கொண்டது.** இவ் வழிமுறைகளில் சில பசுமை உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கு சூழல் சிநேகபூர்வமான கைத்தொழில் அபிவிருத்திக் கொள்கைகள் அதுபோல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை நடத்துவதன் மூலம் உள்ளூர் மற்றும் பன்னாட்டுக் காப்புரிமைகள் மீதான வலியுறுத்தலை உள்ளடக்குகிறது. அரசாங்கம் "ஹந்த லங்கா" என்ற நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்ததுடன் இதன் கீழ் கைத்தொழில்கள் சிக்கனமான மூலவளத்தைப் பயன்படுத்துமாறும், சூழல் சிநேகபூர்வமாக இருக்குமாறும், சமூகப் பொறுப்புடன் நடந்துகொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. உலக சந்தையில் போட்டி வாய்ந்ததாக இருக்கும் பொருட்டு அரசாங்கம் "பசுமைக் கைத்தொழில் அறிவிப்பு" இலும் கைச்சாத்திட்டுள்ளது. உணவு மற்றும் பானம் கைத்தொழில் வகையில் சிறிய, நடுத்தர தொழில் முயற்சிகளின் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய நுகர்வு மற்றும் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு 'ஆசியாவுக்குத் திருப்பிவிடு' என்ற செயற்றிட்டத்துடன் இலங்கை வர்த்தக சம்மேளனம் தொடர்ந்து பணியாற்றியது. பன்னாட்டுச் சந்தைக்கு பசுமை உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு ஆடைத் துறையிலுள்ள பிரதான பங்கேற்பாளர்களால் எடுக்கப்பட்ட முன்னெடுப்புக்களும் புடவை மற்றும் ஆடைக் கைத்தொழிலால் பசுமை உற்பத்திகளை ஊக்குவிப்பதில் அதிகரித்துச் செல்லும் போக்குக்கான சான்றுகளாக அமைகின்றன.

**அரசாங்கம் தனியார் துறையின் பங்கேற்புடன் நானோ தொழில்நுட்பப் பூங்காவை நிறுவுவதற்கான ஆரம்ப**

**வழிமுறைகளை எடுத்ததுடன் இலங்கை நானோ தொழில்நுட்ப நிறுவனத்தை நிறுவுவதன் மூலம் ஆரம்பப் படிமுறைகளைப் பூர்த்தி செய்தது.** இது சூழலிலும் பொருளாதார ரீதியிலும் மற்றும் சமூக ரீதியிலும் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய புலமைச் சொத்து உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஆராய்ச்சியாளர்களின் செயற்றிறனைப் பயன்படுத்தும் கொள்கையைப் பின்பற்றுகிறது. வருமான வரியை 15 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்குக் குறைத்ததன் மூலம் உள்ளூர் காப்புரிமைச் சொத்துக்களுடன் கைத்தொழில்களுக்கான ஊக்குவிப்புக்களையும் வரவு செலவுத்திட்டம் 2011 வழங்கும் அதேவேளை அரச மற்றும் தனியார் துறைகளில் தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செலவினத்தை மொ.உ.உற்பத்தியின் 2 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு இலக்கிடுகிறது.

**ஏற்றுமதி அபிவிருத்திச் சபை ஏனைய அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் சேர்ந்து இலங்கை தயாரிப்பாளர்களின் கைத்தொழில் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதில் தீவிரமாக பங்காற்றியது.** உயர் பெறுமதியுடைய சிறிய சந்தைகளைக் கவர்வதற்கு "நன்னெறியுடன் பதனிடப்பட்டது", 'மழைக் காட்டு உடன்பாடு', 'ஓசோன் சிநேகபூர்வமானது' மற்றும் ' பூகோள குறிகாட்டி' திட்டங்கள் தொடர்பாக பதனிடப்பட்ட உணவுப் பொருட்களின் வர்த்தக அடையாளங்களூடாக கூட்டப்பட்ட பெறுமதியில் ஏற்றுமதிச் சந்தைகளிலான கைத்தொழில் ஊக்குவிப்புக்கள் கவனம் செலுத்தின. ஏற்றுமதி அபிவிருத்திச் சபை 'வர்த்தகச் சந்தைப் பங்கேற்புகள்' ஊடாக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உற்பத்திகளை தொடர்ந்து ஊக்குவித்த வேளையில் முதலீட்டுச் சபை மற்றும் ஏனைய அரசாங்க அமைச்சுக்கள் வெளிநாட்டு முதலீட்டு ஊக்குவிப்புப் பணிகளையும் ஏற்பாடு செய்தது போல் இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு பிரதிநிதிகள் குழுக்கள் உபசரித்து வசதிப்படுத்தியது.

**சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் துணைத்துறை முன்னைய ஆண்டின் 8.2 சதவீதம் கொண்ட குறைந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 15.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இரத்தினக்கல் மற்றும் ஏனைய சுரங்கமகழ்தல் இரண்டிலுமான வளர்ச்சி இத் துறையில் விரிவாக்கத்தை அடைவதற்குப் பங்களிப்புச் செய்தது. 2009இன் 18.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஏனைய சுரங்கமகழ்தல் துணைத் துறையிலான 17.5 சதவீதம் கொண்ட தொடர்ச்சியான வளர்ச்சி இத் துறையின் வளர்ச்சியை அடைவதற்கான பிரதான பங்களிப்பாகும். அதிகரித்த கட்டடவாக்கச் செயற்பாடுகளிலிருந்து எழும் கேள்வி உயர் வளர்ச்சியை வலுப்படுத்திய வேளையில் கனிப்பொருள் மணல்கள், காரீயம் மற்றும் பொசுபேற்றலிருந்தான அதிகரித்த வெளியீடு ஏனைய சுரங்கமகழ்தல் செயற்பாடுகளில் பிரதிபலிக்கப்பட்டது. இதேவேளை, 2009இல் 17.2 சதவீதத்தால் சுருக்கமடைந்த இரத்தினக்கல் அகழ்தல் துணைத்துறை 2010இல் 7.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இம் மீட்சி இரத்தினக்கற்களின் ஏற்றுமதிகளின் அளவிலான 2.6 சதவீத வளர்ச்சியால் பிரதிபலிக்கப்பட்டவாறு இரத்தினக்கற்களுக்கான செழிப்பான கேள்வியின் அதிகரிப்பால் உதவப்பட்டது.

**பதனிடும் துணைத்துறை 2009இன் 0.7 சதவீதம் கொண்ட சிறு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 5.8 சதவீதம் கொண்ட சாதகமான வளர்ச்சியைக் காட்டியது.** இது, பெரும்பாலும் இறப்பர் உற்பத்தியிலான அதிகரித்த வெளியீட்டுடன் சேர்ந்து பதனிடல் துணைத் துறையில் பெறுமதிகூட்டப்பட்ட வளர்ச்சி தொடர்பாக சாதகமான விளைவை ஏற்படுத்திய குறிப்பாக, 2010இன் முதல் ஒன்பது மாதங்களில் தேயிலை உற்பத்தியிலான சாதகமான முன்னேற்றத்தால் ஏற்பட்டது. ஆனால் தெங்கு உற்பத்தியிலான சுருக்கம் வளர்ச்சியில் எதிர்க்கணியத் தாக்கத்தை ஏற்படுத்தியது.

**குடிசைக் கைத்தொழில் துணைத் துறையின் வளர்ச்சி வீதம் 2009இன் 3.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 5.5 சதவீதமாக விளங்கியது.** இத் துணைத் துறையிலான வளர்ச்சி உயர் நெல் உற்பத்தியுடனான நெல் குற்றல் செயற்பாடுகளுக்கான அதிகரித்த கேள்வி, சிறிய அளவிலான கட்டடப் பொருட்களுக்கான, முன்னேற்றமடைந்த கேள்வி மற்றும் சுயதொழில் செயற்பாடுகளிலான விரிவாக்கத்தால் ஏற்பட்டது.

**மின்வலு, வாயு மற்றும் நீர் துணைத்துறை 2009இன் 3.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 7.8 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இக் குறிப்பிடத்தக்க வளர்ச்சி அனைத்து மூன்று துணைத்துறைகளிலான செயற்பாடுகள் விரைவாக்கத்துடன் அடையப்பட்டது. மிகப் பெரிய துறையான மின்வலு அதிகரித்த நீர் மின்வலு உருவாக்கம் காரணமாக 8.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. முன்னேற்றமடைந்த வானிலை நிலைமைகள் வெப்ப மின்வலு உருவாக்கத்துக்கான கேள்வியைக் குறைப்பதைச் சாத்தியமாக்கியது. இச் செயலாற்றம் மொத்த மின்வலுவில் நீர் மின்வலுவின் பங்கு முன்னைய ஆண்டின் 39.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 52.6 சதவீதத்திற்கு அதிகரித்ததன் மூலம் புலனாகிறது. இதேவேளை, வீட்டுப்பாவனை, வர்த்தகம் மற்றும் கைத்தொழில் துறைகளிலிருந்து மின்வலுவிற்கான கள்வி அதிகரித்தமை பொருளாதாரத்தின் விருத்தியடைந்து வரும் இயலளவை எடுத்துக்காட்டுகிறது. வாயு துணைத்துறை 2009இன் 5.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 4.6 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. 2009இல் 2.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த நீர் துணைத்துறை 2010இல் தொடர்ந்து 4.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

**கட்டடவாக்கத்துறை 2009இன் 5.6 சதவீதம் கொண்ட குறைவான வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 9.3 சதவீதத்தால் கணிசமானளவில் விரிவடைந்தது.** கட்டடவாக்கத்திலான அதிகரித்த செயற்பாடு இவ்வாண்டில் கட்டடவாக்கப்

பொருட்களின் உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட 12.0 சதவீத வளர்ச்சியால் வெளிப்படுத்தப்பட்டது. மேலும், சீமெந்தின் கிடைப்பனவு முன்னைய ஆண்டின் 11.1 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 18.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. தனியார் துறையிலான அதிகரித்த ஈடுபாடு கட்டடவாக்க நோக்கங்களுக்கான தனியார்துறை கொடுகடனில் ஏற்பட்ட 19.3 சதவீத வளர்ச்சியில் பிரதிபலிக்கப்படுகிறது. இதேவேளை, வீதிகள், துறைமுகங்கள், வலுத்துறை, நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் வீடமைப்பு தொடர்பான அரசின் கட்டடவாக்கச் செயற்பாடுகளும் ஏனைய சிறிய அளவிலான கட்டடவாக்கத்துடன் சேர்ந்து கட்டடவாக்கத்துறையில் பெறுமதிகூட்டலிலான வளர்ச்சிக்கு சாதகமாகப் பங்களிப்புச் செய்தன. தற்போது இடம்பெற்று வரும் அதிவிரைவுப் பாதைகள், பிராந்தியங்களுக்குள்ளேயான தேசிய நெடுஞ்சாலைகள் போன்ற வீதித்துறை அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் மற்றும் மின்வலுவிற்காக அதிகரித்துச் செல்லும் கேள்வியைப் பூர்த்தி செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட வலுத்துறை பாரிய செயற்றிட்டங்கள் விரைவுபடுத்தலுடன் கட்டடவாக்கத்துறை விரிவடைந்தது. மேலும், புதிதாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட வீடுகள் மற்றும் கட்டடவாக்கப் பணிகளுடன் சேர்ந்து துறைமுக அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் கட்டடவாக்கச் செயற்பாடுகளை அதிகரித்தன.

### பணிகள்

**பணிகள்துறை 2010இல் 8.0 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்ததுடன் மொ.உ.உற்பத்தியில் 59.3 சதவீதத்திற்கு வகைகூறியது.** இத் துறையிலான உயர் வளர்ச்சி பெரும்பாலும் 2009இன் சுருக்கத்திலிருந்து மீண்ட வர்த்தகச் செயற்பாடுகளின் மீட்சியால் ஏற்பட்டது. இதேவேளை, சுற்றுலா விடுதிகள் மற்றும் உணவகங்கள் மற்றும் போக்குவரத்துத் துணைத் துறைகளும் இவ்வாண்டில் கவர்ச்சிகரமான வளர்ச்சியைப் பதிவு செய்தன.

**மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகச் செயற்பாடுகளிலான விரிவாக்கம் இவ்வாண்டில் 7.5 சதவீத வளர்ச்சி மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.** மேலும், முன்னைய ஆண்டில் வளர்ச்சிக்கு எதிர்க்கணியப் பங்களிப்பைக் கொண்டிருந்த இத் துறை 2010இல் மீளெழுச்சியடைந்து மொ.உ.உற்பத்தி வளர்ச்சிக்கு 21.7 சதவீதத்தைப் பங்களிப்புச் செய்தது. உள்நாட்டு வர்த்தகத்தில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் சேர்ந்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதிச் செயற்பாடுகளின் விரிவடைவு முன்னைய ஆண்டின் பின்னடைவுக்குப் பின் பன்னாட்டுச் சந்தைகளில் ஏற்பட்ட படிப்படியான மீட்சியுடன் வெளிநாட்டு வர்த்தகச் செயற்பாடுகளில் ஏற்பட்ட அபிவிருத்தியை அடைவதில் சாதகமான விளைவை ஏற்படுத்தின.

**இறக்குமதி வர்த்தகம் 2009இன் 8.2 சதவீத சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் பெறுமதிகூட்டப்பட்ட நியதிகளில் 9.5 சதவீதம் கொண்ட உயர் வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இது உணவுப் பொருட்கள் மற்றும் உந்து ஊர்திகள் ஏனைய நுகர்வுப் பொருட்களை உள்ளடக்கும் நுகர்வுப் பொருட்கள் வகையில் 20.6 சதவீதம் கொண்ட அளவு வளர்ச்சியால் எடுத்துக் காட்டப்பட்டது. புடவை மற்றும் மசகெண்ணெய் இறக்குமதிகளிலான வீழ்ச்சிக்கு மத்தியிலும் இடைநிலைப் பொருட்களின் வளர்ச்சி வீதம் 13.0 சதவீதத்தில் காணப்பட்டது. இவ் வகையிலான வளர்ச்சி இவ்வாண்டில் வளமாக்கி இறக்குமதிகள் மற்றும் ஏனைய இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பால் உதவப்பட்டது. இதேவேளை, இவ்வாண்டில் போக்குவரத்து மற்றும் பொறி கருவியின் பங்களிப்புடன் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் அளவு நியதிகளில் 7.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.

**ஏற்றுமதித் துணைத்துறை முன்னைய ஆண்டின் 2.2 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் பன்னாட்டுச் சந்தையில் நிலவிய அபிவிருத்திகளிலிருந்து நன்மையடைந்து 2010இல் 3.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** தேயிலை மற்றும் ஏனைய வேளாண்மைப் பொருட்கள் முறையே பெரும்பாலும் 11.4 சதவீதத்தாலும் 20.1 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்ததன் காரணமாக இத் துணைத் துறையில் வேளாண்மை ஏற்றுமதிகள் 9.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. கைத்தொழில் ஏற்றுமதிகளிலான சிறு வளர்ச்சி பெற்றோலியம் மற்றும் ஏனைய கைத்தொழில் உற்பத்திகளால் நிலைநாட்டப்பட்டிருக்கையில் புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகள் இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்தன. மேலும், கனிப்பொருள் ஏற்றுமதிகள் அளவு நியதிகளில் முன்னைய ஆண்டின் 8.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 3.0 சதவீதத்தால் விரிவடைந்தன.

**உள்நாட்டு வர்த்தகச் செயற்பாடுகள் முன்னைய ஆண்டின் 7.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 7.6 சதவீதம் கொண்ட செழிப்பான வளர்ச்சியைப் பதிவு செய்தன.** இது, நாட்டில் சமாதானம் மீள ஏற்படுத்தப்பட்டதால் அனைத்துப் பிராந்தியங்களிலும் தோற்றம் பெற்றுவரும் பொருளாதாரச் செயற்பாடுகளின் சூழலில் உள்நாட்டுக் கேள்வி விரைவடைந்தமையால் ஏற்பட்டது.

**சுற்றுலா விடுதி மற்றும் உணவகங்கள் துறை நாட்டில் நிலவிய சமாதானச் சூழ்நிலை காரணமாக 2009இன் 13.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 39.8 சதவீதம் கொண்ட பாரிய வளர்ச்சியைப் பதிவு செய்தது.** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் செயற்பாடுகள் 2009இன் 2.1 சதவீதம் கொண்ட சிறு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 46.1 சதவீதத்தால் வளர்ச்சியடைந்த சுற்றுலாப் பயணிகளின்

வருகைகள் போன்ற சுற்றுலாக் கைத்தொழில் தொடர்பான குறிக்காட்டிகளிலான மேம்பட்டால் எடுத்துக்காட்டப்பட்டவாறு விரைவடைந்தன. மேலும், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் இருபாலாரையும் உள்ளடக்கும் மொத்த விருந்தினர் இரவுகளும் 2010இல் 42.3 சதவீதத்தால் உயர்ந்தன.

**போக்குவரத்து மற்றும் தொடர்பூட்டல் முன்னைய ஆண்டின் 6.3 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 11.9 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இது போக்குவரத்து, சரக்குக் கையாளல் - துறைமுகங்கள் மற்றும் வான் போக்குவரத்து, அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல் ஆகிய அனைத்து மூன்று துறைகளிலுமான செழிப்பான வளர்ச்சியால் நன்மையடைந்தது.

**போக்குவரத்துத் துணைத் துறையிலான வளர்ச்சி 2010இல் 11.4 சதவீதமாக விளங்கியதுடன் இது கடந்த மூன்று ஆண்டுகளில் காணப்பட்ட அதியுயர் வீதமாகும்.** இக் குறிப்பிடத்தக்க வளர்ச்சி கொத்தணி பஸ் கம்பனிகளால் தொழிற்படுத்தப்பட்ட பயணிகள் கிலோமீற்றர்களில் காட்டப்பட்ட விரிவாக்கத்தில் பிரதிபலிக்கப்பட்டது. இவ்வாண்டில் நிலவிய சார்பு ரீதியில் உறுதியான விலைகளுக்கு மத்தியில் எரிபொருள் நுகர்வு போக்குவரத்துப் பணிகளுக்கான அதிகரித்த கேள்வியுடன் வளர்ச்சியடைந்தது. இது 2010இல் பெற்றோல் விற்பனை 14.3 சதவீதத்தாலும் டீசல் விற்பனை 1.2 சதவீதத்தாலும் அதிகரித்தமையால் பிரதிபலிக்கப்பட்டது. இதேவேளை, 2010இல் புதிய ஊர்திகளின் பதிவும் ஊர்திகள் இறக்குமதி மீது அரசாங்கத் தீர்வையில் மேற்கொள்ளப்பட்ட கீழ் நோக்கிய திருத்தம் காரணமாக 76.0 சதவீதத்தால் அதிகரித்தது. வான் பயணத் துணைத் துறையும் சுற்றுலாத் துறையின் குறிப்பிடத்தக்க எழுச்சியால் தூண்டப்பட்டது.

**சரக்குக் கையாளல் - துறைமுகங்கள் மற்றும் வான் போக்குவரத்துத் துணைத்துறை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 0.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 16.8 சதவீத வளர்ச்சியுடன் கணிசமானளவில் விரிவடைந்தது.** இவ் விரிவாக்கம் 2010இல் முறையே 18.0 சதவீதத்தாலும் 26.7 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்த மாற்றிக் கப்பலேற்றல் மற்றும் உள்நாட்டில் சரக்குக் கையாளல் இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்பால் முன்னெடுக்கப்பட்டது. மேலும் சவுத் ஏசியன் கேற்வே ரேமினல் உள்ளிட்ட கொழும்புத் துறைமுகம் இவ்வாண்டில் 4.1 மில்லியன் இருபது அடிக்குச் சமனான கொள்கலன் அலகுகளைக் கையாண்டது.

**அஞ்சல் மற்றும் தொலைத் தொடர்பூட்டல்துறை 2010இல் 13.2 சதவீதத்தால் வளர்ச்சியடைந்து ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைவதில் அதன் சாதகமான பங்களிப்பைத் தொடர்ந்து மேற்கொண்டது.** இவ் வளர்ச்சி 2010இல் தொலைத் தொடர்பூட்டல் வாடிக்கையாளர்கள் தளத்தில் ஏற்பட்ட 17.6 சதவீத வளர்ச்சியால் பிரதிபலிக்கப்பட்டது. சிடிஎம்ஏ இணைப்புக்கள் உள்ளிட்ட நிலையான இணைப்புக்களைக் கொண்ட வாடிக்கையாளர் தளம் 3.9 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை 17.2 மில்லியனுக்கு 20.9 சதவீதத்தால் அதிகரித்தமை இத் துறையின் விரிவாக்கம் காரணமாக அடையக் கூடிய தன்மை மற்றும் தாங்கக்கூடிய தன்மையை குறித்துக்காட்டுகிறது. இதேவேளை, ஏனைய தொலைத்தொடர்பு பணிகளின் புதிய தொழில்நுட்பத்தின் அபிவிருத்தியால் அஞ்சல் பணிகளின் செயற்பாடு இவ்வாண்டில் வீழ்ச்சியடைந்தது.

**வங்கித்தொழில், காப்புறுதி மற்றும் உண்மைச் சொத்துத் துணைத் துறை 2009இன் 5.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 7.5 சதவீதத்தால் விரிவடைந்தது.** மிதமான வட்டி வீதங்கள் காரணமாக முற்பணங்கள் மற்றும் ஏனைய முதலீடுகளூடான இலாபகரத்தன்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு இவ்வாண்டில் தனியார் துறைக்கு கொடுகடன் பாய்ச்சல்களை அதிகரித்ததுடன் வங்கித்தொழில் துறையில் வெளிநாட்டு செலாவணிச் சந்தைச் செயற்பாடுகளிலிலான சிறந்த செயலாற்றத்துடன் துறை வாரியான வளர்ச்சிக்கு உதவியது. இத்துடன், புதிய கிளைகள் மற்றும் பணி வழங்கும் நிலையங்களைத் திறப்பதனூடாக நிதியியல் பணிகளின் விரிவாக்கமும் ஏனைய பணிகளும் தொடர்ந்து இடம்பெற்றன. இதேவேளை, காப்புறுதி மற்றும் குத்தகைக்குவிடல் துறையும் புதிய ஊர்திகள் பதிவு போன்ற துறைகளிலான அபிவிருத்தியுடன் இணைந்து செல்லும் வகையில் கணிசமானளவில் வளர்ச்சியடைந்தது. உண்மைச் சொத்துச் செயற்பாடுகள் இக் காலப்பகுதியில் அதன் போட்டி வாய்ந்த நிலையைத் தக்க வைத்தது.

**அரச பணிகள் துணைத்துறை 2009இன் 5.9 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 5.4 சதவீதம் கொண்ட மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது.** அரச பணிகளின் மேம்பாடு மற்றும் விரிவாக்கம் பெரும்பாலும் இத் துறையிலான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தது.

**தனியார் பணிகள் துணைத்துறை முன்னைய ஆண்டைப் போன்றே 5.8 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.** இத் துறையின் வளர்ச்சி பெரும்பாலும் தனியார் கல்வி மற்றும் நலப் பணிகளிடமிருந்து ஏற்பட்டிருக்கையில் ஏனைய தனியார் துறைப் பணிகளும் பொருளாதாரச் செயற்பாட்டின் மீளெழுச்சியுடன் தோற்றம் பெற்றன.

## 2.3 செலவினம்

**நுகர்வு மற்றும் முதலீடு நியதிகளில் உள்நாட்டுப் பொருளாதாரச் செயற்பாட்டால் உருவாக்கப்படும் மொத்தக் கேள்வியை அளவிடும் 2010இற்கான மொத்த உள்நாட்டுச் செலவினம் ரூ.6,114 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது.**

இதன் விளைவாக, மொத்த உள்நாட்டுச் செலவினத்தால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் மொ்தத உள்நாட்டுச் செலவினம் 2009இன் 2.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 18.7 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. மொத்த உள்நாட்டுச் செலவினத்திலான உயர் வளர்ச்சி உத்வேகம் முன்னைய ஆண்டின் நுகர்வு மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகள் இரண்டிலுமான மெதுவடைவுடன் ஒப்பிடுகையில் 2010இல் பொருளாதாரச் செயற்பாடுகளில் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டியது. நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினம் ஆகிய இரு நியதிகளிலும் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்து அடக்கி வைக்கப்பட்ட கேள்வியுடன் சேர்ந்து சமாதானச் சூழலின் சாதகமான தாக்கம் உள்நாட்டுக் கேள்வியிலான விரிவாக்கத்திற்குக் காரணமாக இருந்தது. தேறிய ஏற்றுமதிகளுக்குச் சீராக்கப்பட்ட மொத்த உள்நாட்டுச் செலவினத்தால் தரப்படும் சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2010இல் ரூ.5,602 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 2009 உடன் ஒப்பிடுகையில் 15.9 சதவீத அதிகரிப்பாகும். மொ.உ.உற்பத்தியிலான இவ் அதிகரிப்பு 8.0 சதவீதம் கொண்ட உண்மை வளர்ச்சியையும் மொ.உ. உற்பத்தி உள்ளடக்கச் சுருக்கியால் அளவிடப்பட்டவாறு 7.3 சதவீதம் கொண்ட விலை வளர்ச்சியையும் உள்ளடக்கியுள்ளது.

### நுகர்வு

**தனியார் மற்றும் அரசதுறை இரண்டையும் உள்ளடக்கும் நுகர்வுச் செலவினம் 2010இல் ரூ.4,557 பில்லியனுக்கு 14.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** நுகர்வுச் செலவினத்திலான உயர் வளர்ச்சி 2009இன் பின்னடைவிலிருந்து மீண்டு பொருளாதாரச் செயற்பாடுளில் மீட்சியைப் பிரதிபலித்ததுடன் மொத்த நுகர்வுச் செலவினத்தில் 4.4 சதவீதம் கொண்ட பெயரளவு வளர்ச்சியைக் காட்டியது. இதேவேளை, தனியார் மற்றும் அரச நுகர்வுச் செலவினம் 2010இல் முறையே 18.2 சதவீதத்தாலும் 2.5 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தது. இதேவேளை மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக தனியார் நுகர்வுச் செலவினம் 65.8 சதவீதப் பங்குக்கு வகைகூறியது. இது 2009இன் 64.4 சதவீதத்தை விடக் கூடியதாகும். இதன் விளைவாக, மொ.உ.உற்பத்தியில் 17.6 சதவீத பங்கைக் கொண்டிருக்கும் அரச நுகர்வுச் செலவினம் 2010இல் 15.6 சதவீதத்திற்கு வீழ்ச்சயடைந்து தனியார் துறையில் உயர் வளர்ச்சி உத்வேகத்தை எடுத்துக்காட்டியது.

**தனியார்துறைச் செலவினத்தினுள் மிகப் பெரிய நுகர்வு வகையாக 2010இல் 39.6 சதவீதப் பங்குக்கு வகைகூறிய உணவு, பானம் மற்றும் புகையிலை விளங்கியது.** மேலும், இவ் வகை மீதான செலவிடல் முன்னைய ஆண்டின் 2.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 22.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. அதிகரித்த கெள்வி குறிப்பாக விடுவிக்கப்பட்ட பிரதேசங்களிலிருந்தான அடக்கப்பட்ட கேள்வியால் ஏற்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் (கொநுவிசு) துணைச் சுட்டெண்ணால் எடுத்துக்காட்டப்பட்டவாறு இந் நுகர்வோர் வகையிலான சராசரி விலை அதிகரிப்பு 2009இன் சார்பு ரீதியிலான 2.8 சதவீதம் கொண்ட குறைந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 6.8 சதவீதமாகக் காணப்பட்டது. இதேவேளை புடவை மற்றும் பாதணி மீதான செலவினமும் 2009இன் 1.1சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 26.2 சதவீதத்தால் அதிகரித்தது.

**வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருள்கள் மீதான தனியார் செலவினம் முன்னைய ஆண்டின் 4.7 சதவீதச் சுருக்கத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் 10.7 சதவீதத்தால் அதிகரித்தது.** பொருளாதாரச் செயற்பாடுகளிலான பொதுவான

**அட்டவணை 2.11 கூட்டுக் கேள்வி**

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ரூ.மில்) | | | நிலையான (2002) விலைகள் (ரூ.மில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | 2008 | 2009(அ) | 2010(ஆ) | 2008 | 2009(அ) | 2010(ஆ) |
| **அ. உள்நாட்டுக் கேள்வி** | | | | | | |
| நுகர்வு | 3,799,084 | 3,967,770 | 4,517,348 | 1,922,863 | 1,992,820 | 2,167,814 |
| ( % மாற்றம் ) | 28.8 | 4.4 | 13.9 | 7.9 | 3.6 | 8.8 |
| மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் | 1,215,247 | 1,181,449 | 1,596,769 | 657,377 | 671,191 | 768,400 |
| ( % மாற்றம் ) | 21.5 | -2.8 | 31.8 | 4.2 | 2.1 | 14.5 |
| **மொத்த உள்நாட்டு கேள்வி** | **5,014,331** | **5,149,220** | **6,114,117** | **2,580,240** | **2,664,011** | **2,936,214** |
| ( % மாற்றம் ) | 26.9 | 2.7 | 18.7 | 6.9 | 3.2 | 10.2 |
| **ஆ. வெளிநாட்டுக் கேள்வி** | | | | | | |
| பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள் | 1,095,679 | 1,031,289 | 1,215,007 | 758,972 | 665,575 | 703,917 |
| ( % மாற்றம் ) | 5.2 | -5.9 | 17.8 | 0.4 | -12.3 | 5.8 |
| பொருட்களினதும் பணிகளினதும் இறக்குமதிகள் | 1,699,328 | 1,345,216 | 1,726,803 | 973,711 | 880,372 | 994,699 |
| ( % மாற்றம் ) | 20.2 | -20.8 | 28.4 | 4.0 | -9.6 | 13.0 |
| **தேறிய வெளிநாட்டுக் கேள்வி** | **-603,649** | **-313,927** | **-511,796** | **-214,739** | **-214,797** | **-290,782** |
| **இ. மொத்த கேள்வி** | **4,410,682** | **4,835,293** | **5,602,321** | **2,365,501** | **2,449,214** | **2,645,432** |
| ( % மாற்றம் ) | 23.2 | 9.6 | 15.9 | 6.0 | 3.5 | 8.0 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 2.12 நடைமுறைச் சந்தை விலைகளில் தனியார் நுகர்வுச் செலவினத்தின் உள்ளமைப்பு

| விடயம் | மொத்த தனியார் நுகர்வுச் செலவினத்தின் பங்கு (%) | | | சதவீத மாற்றம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 2008 | 2009(அ) | 2010(ஆ) | 09/08 | 10/09 |
| 1. உணவு, குடிபாணங்கள் மற்றும் புகையிலை | 37.8 | 38.2 | 39.6 | 2.1 | 22.6 |
| 2. புடவையும், காலணியும் | 5.7 | 5.6 | 6.0 | -1.1 | 26.2 |
| 3. வீடமைப்பு, நீர், மின்சாரம், எரிவாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் | 12.7 | 12.0 | 11.2 | -4.7 | 10.7 |
| 4. தளபாடமிடுதல், வீட்டுச் சாதனங்கள், வீட்டின் தொடர்ச்சியான பராமரிப்பு | 5.8 | 5.9 | 5.2 | 3.6 | 3.9 |
| நலம் | 1.8 | 2.2 | 2.0 | 21.0 | 7.9 |
| 6. போக்குவரத்து | 21.8 | 21.1 | 21.2 | -2.1 | 19.0 |
| 7. ஓய்வு, களியாட்டமும் பொழுதுபோக்கும் | 3.6 | 2.9 | 2.5 | -18.1 | 0.9 |
| 8. கல்வி | 0.1 | 0.1 | 0.1 | 9.9 | 12.3 |
| 9. உணவகங்களும் விடுதிகளும் | 1.5 | 1.5 | 1.3 | 2.7 | 4.7 |
| 10. பல்வகைப் பொருட்களும் பணிகளும் | 4.9 | 5.5 | 4.8 | 14.4 | 3.0 |
| 11. வெளிநாட்டு வதியுள்ளோர் செலவு | 7.7 | 8.1 | 9.2 | 5.9 | 34.8 |
| 12. வதிவற்றோர் செலவு கழிக்குக | 3.3 | 3.1 | 3.1 | -5.0 | 20.8 |
| **மொத்த தனியார் நுகர்வுச் செலவு** | **100.0** | **100.0** | **100.0** | **1.0** | **18.2** |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலம் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

மீட்சியுடன் இணைந்த அதிகரித்த கேள்வியுடன் கொநுவி சுட்டெண்ணனின் துணைச் சுட்டெண்ணின்படி விலைகளும் 3.4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன. மசகெண்ணெய் மற்றும் மின்வலு போன்ற அநேகமான பொருட்களின் விலைகள் இவ்வாண்டில் தொடர்ந்தும் உறுதியாகக் காணப்பட்டன.

**தளபாடம், வீட்டுப் பாவனைப் பொருட்கள் மற்றும் வீட்டின் கிரமமான பேணல் மீதான செலவினம் முன்னைய ஆண்டின் 3.6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் பெயரளவு நியதிகளில் 3.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இந் நுகர்வு வகையின் செலவினப் பங்கு 2009இன் 5.9 சதவீதப் பங்குடன் ஒப்பிடுகையில் சிறிதளவு முன்னேற்றத்துடன் 5.2 சதவீதமாக விளங்கியது.

**நலம் மற்றும் கல்வி மீதான தனியார் துறைச் செலவினம் 2009இன் முறையே 21.0 சதவீதம் மற்றும் 9.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் முறையே 7.9 சதவீதத்தாலும் 12.3 சதவீதத்தாலும் வளர்ச்சியடைந்தது.** இதேவேளை, நலம் மற்றும் கல்விச் செலவின வகைகள் இரண்டினதும் பங்கு முறையே 2.0 சதவீதமாகவும் 0.1 சதவீதமாகவும் குறைந்து காணப்பட்டு அரச துறையின் உயர் பங்களிப்பினை குறித்து காட்டுகிறது.

**போக்குவரத்துச் செயற்பாடுகள் மீதான செலவினம் 2010இல் மொத்த தனியார்துறை செலவினத்தில் 21.2 சதவீதப் பங்குக்கு வகைகூறியதுடன் இது முன்னைய ஆண்டிலிருந்து சிறிய முன்னேற்றமாகும்.** போக்குவரத்துச் செயற்பாடுகள் மீதான செலவினம் 2009இன் 2.1 சதவீதச் சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2010இல் 19.0 சதவீதத்திற்கு விரிவடைந்தது. அரச போக்குவரத்துடன் போக்குவரத்துத்துச் செயற்பாடுகள் மீதான விலைத்தாக்கம் சிறிதளவாகவும் இவ்வாண்டில் எரிபொருட்களின் விலைகள் மாற்றமுறாது தொடர்ந்து விளங்கியமையால் இத் துறையிலான வளர்ச்சி நாட்டில் சமாதானச் சூழல் ஏற்பட்டதைத் தொடர்ந்து போக்குவரத்துச் செயற்பாடுகளிலான உண்மையான அதிகரிப்பால் ஏற்பட்டது.

**அரசதுறை நுகர்வுச் செலவினம் 2009இன் 19.3 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 2.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** இது பெரும்பாலும் பொதுச் சேவைகளைப் பேணுவதற்கு சம்பளங்கள் மற்றும் கூலிகள், வாழ்க்கைச் செலவுப்படி, ஏனைய மீண்டெழும் செலவினம் மீதான செலவினம் மற்றும் ஏனைய அபிவிருத்தி தொடர்பான மீண்டெழும் செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பால் ஏற்பட்டது.

## முதலீடு

**2010இல் முதலீடு மீதான செலவினம் (மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம்) முன்னைய ஆண்டின் 2.8 சதவீத சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து பெயரளவு நியதிகளில் 31.8 சதவீதத்தால் விரிவடைந்தது.** 2009இல் ரூ.1,181 பில்லியனாக மதிப்பிடப்பட்ட முதலீட்டுச் செலவினம் 2010இல் ரூ.1,557 பில்லியனுக்கு விரிவடைந்தது. முன்னைய ஆண்டில் மெதுவடைந்த முதலீட்டுச் செயற்பாடுகளிலான உயர் வளர்ச்சிக்கு சாதகமான பொருளாதாரச் சூழல் உதவியது. முதலீட்டுச் செயற்பாடுளிலான மீட்சியும் 2009இன் 2.1 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் 15.5 சதவீத வளர்ச்சியை உண்மை நியதிகளில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதனால், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக பெயரளவு முதலீட்டுச் செலவினத்தைத் தெரிவிக்கும் முதலீட்டு விகிதம் முன்னைய ஆண்டின் 24.4 சதவீதப் பெறுமதியிலிருந்து 27.8 சதவீதத்திற்கு மேம்பாடடைந்தது.

**2009இல் 7.1 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க சுருக்கத்தால் பாதிப்படைந்த தனியார் முதலீட்டுச் செயற்பாடுகள் 2010இல் 40.1 சதவீதம் கொண்ட பெயரளவு வளர்ச்சியுடன் மீட்சியடைந்தது.**

**அட்டவணை 2.13**

**இலங்கை முதலீட்டுச்சபை மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழில் முயற்சிகளிலுள்ள முதலீடும் தொழில் நிலையும்**

| | செயற்றிட்ட எண்ணிக்கை | | எதிர்பார்க்கப்பட்ட மற்றும் உண்மையான முதலீடுகள் (ரூ. மில்லியன்) | | | | | | தொழிலாளர் எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2009 (அ) | 2010 (ஆ) | 2009 (அ) | | | 2010 (ஆ) | | | 2009 (அ) | 2010 (ஆ) |
| | | | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு | மொத்தம் | | |
| **முதலீட்டுச்சபை (1978ம் ஆண்டு 4ம் இல. சட்டத்தின் கீழ்)** | | | | | | | | | | |
| அனுமதியளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் | 422 | 427 | 454,896 | 110,138 | 565,033 | 87,155 | 211,605 | 298,760 | 130,294 | 55,866 |
| பிரிவு 17இன் கீழ் (இ) | 384 | 353 | 441,004 | 109,582 | 550,586 | 82,604 | 211,289 | 293,893 | 128,465 | 54,125 |
| பிரிவு 16இன் கீழ் | 38 | 74 | 13,892 | 556 | 14,447 | 4,551 | 316 | 4,867 | 1,829 | 1,741 |
| பிரிவு 17இன் கீழ் ஒப்பந்தமளிக்கப்பட்ட செயற்றிட்டங்கள் (இ) | 182 | 262 | 374,029 | 48,875 | 422,904 | 55,318 | 166,336 | 221,654 | 109,382 | 33,099 |
| பிரிவு 17இன் அடையப்பட்ட முதலீடுகள் (ஈ) | 2,283 | 1,991 | 495,506 | 278,762 | 774,268 | 533,312 | 327,766 | 861,078 | 477,530 | 461,813 |
| வர்த்தகத் தொழிற்பாடுகள் (ஈ) | 2,633 | 2,587 | 264,899 | 3,913,854 | 4,178,755 | 267,702 | 3,923,546 | 4,191,247 | 405,991 | 390,242 |
| பிரிவு 17இன் கீழ் (இ) (ஈ) | 1,848 | 1,830 | 245,383 | 3,903,491 | 4,148,875 | 248,417 | 3,913,263 | 4,161,680 | 368,846 | 354,144 |
| பிரிவு 16இன் கீழ் (ஈ) | 785 | 757 | 19,516 | 10,363 | 29,880 | 19,285 | 10,283 | 29,567 | 37,145 | 36,098 |
| **கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு** | | | | | | | | | | |
| பதிவு செய்யப்பட்ட செயற்றிட்டங்கள் (ஈ) | 1,876 | 1,940 | வி.கி | 139,120 | 139,120 | வி.கி | 145,295 | 145,295 | 292,168 | 294,242 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை
(இ) விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக
(ஈ) ஆண்டின் இறுதியில் ஒன்று சேர்ந்த தொகை

மூலங்கள் : இலங்கை முதலீட்டுச் சபை
கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

அரச கூட்டுத்தாபனங்களை உள்ளடக்கும் தனியார்துறை முதலீட்டுச் செலவினம் 2010இல் மொத்த முதலீட்டின் 77.7 சதவீதப் பங்குக்கு வகைகூறியது. உள்நாட்டு மற்றும் பன்னாட்டுப் பொருளாதாரம் இரண்டிலும் பாதகமான நிலைமை காரணமாக 2009இல் சுருக்கமடைந்த முதலீடு மீதான செலவினம் தனியார் துறையால் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுச் செயற்பாடுகளில் உயர் ஈடுபாட்டைத் தூண்டிய பொருத்தமான சூழலுக்கு மத்தியில் 2010இல் மீளெழுச்சியடைந்தது. இது இவ்வாண்டின் பிற்பகுதியில் விரைவாக வளர்ச்சியடைந்த தனியார்துறைக் கொடுகடனின் செயலாற்றத்தில் பிரதிபலிக்கப்பட்டது. இத்துடன் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 2,970 மில்லியனுக்கு வளர்ச்சியடைந்து இவ்வாண்டில் முதலீட்டுச் செயற்பாட்டின் அதிகரித்த மட்டத்தை எடுத்துக்காட்டுகிறது.


**முதலீட்டுச் சபைத் தொழில் முயற்சிகளின் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் 2009இன் ஐ.அ.டொலர் 601 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010இல் ஐ.அ.டொலர் 516 மில்லியனுக்கு 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.** இவ் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் கடப்பாடு பெரும்பாலும் தயாரிப்பு, வேளாண்மை மற்றும் உட்கட்டமைப்புத் துறைகளில் காணப்பட்டது. இதில் தயாரிப்புத்துறை மொத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் 31 சதவீதத்திற்கும் கூடுதலாக வகைகூறியது. தயாரிப்புத் துறையினுள் முதலீடுகளில் பெரும்பாலானவை இரசாயனம், பெற்றோலியம், நிலக்கரி, இறப்பர், பிளாத்திக்கு உற்பத்திகள் வகை மற்றும் புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் உற்பத்தி வகையில் காணப்பட்டன. வெளிநாட்டு நேரடி முதலீடுகளில் ஐ.அ.டொலர் 110 மில்லியன் பெறுமதி இந்தியாவிலிருந்து பெறப்பட்டது. ஏனைய குறிப்பிடத்தக்க முதலீடுகள் ஐக்கிய அரபுக் குடியரசு, மலேசியா, ஐக்கிய இராச்சியம், சிங்கப்பூர் ஹொங்கொங் ஆகிய நாடுகளிலிருந்து கிடைத்தன. 2010இல் ஒன்றுசேர்ந்த கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு முதலீடு ரூ. 861 பில்லியனாக இருந்தது.

**முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 17 மற்றும் பிரிவு 16இன் கீழ் முதலீட்டுச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் 422 உடன் ஒப்பிடுகையில் 2010இன் 427 ஆக விளங்கியது.** 2010இல் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தச் செயற்றிட்டங்களுள் 135 செயற்றிட்டங்கள் முழுமையாக வெளிநாட்டவர்களுக்குச் சொந்தமாகவும் 183 செயற்றிட்டங்கள் உள்நாட்டவர்களுக்குச் சொந்தமாகவும் விளங்கின. ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் மதிப்பிடப்பட்ட மொத்த முதலீடு 2009இன் ரூ.565 பில்லியனுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ரூ.299 பில்லியனாக விளங்கியது. பணிகள் துறை 266 செயற்றிட்டங்களுடன் முதலீட்டைக் கவரும் பிரதான துறையாகத் தொடர்ந்து விளங்கியதுடன் தயாரிப்பு துணைத் துறையான உணவு, பானம் மற்றும் புகையிலை உற்பத்திகள் பிரதான முதலீட்டு வகையாக தொடர்ந்து விளங்கியது.


**முதலீட்டுச் சபை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களுடன் தொடர்ந்து உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்ட வேளையில் ஏற்றுமதி பதனிடல் வலயங்களில் அமைந்துள்ள பல செயற்றிட்டங்கள் 2010இல் வர்த்தகத் தொழிற்பாடுகளை ஆரம்பித்தன.** முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் 2010இல் ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீடு 2009இன் ரூ.423 பில்லியன் பெறுமதி கொண்ட 182 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் ரூ.222 பில்லியன் மொத்த முதலீட்டுக் கடப்பாடுடனான 262 செயற்றிட்டங்களைக் கொண்டிருந்தது. முதலீடுகளில் பெரும்பாலானவை 2010இல் பணிகள் துறைக்கானவையாகும். இது 2010இல் 141 செயற்றிட்டங்களுக்கு 64 சதவீதத்தால் அதிகரித்த செயற்றிட்டங்களைக் கொண்டிருந்தது. தயாரிப்புத் துணைத் துறையினுள், புடவை, அணியும் ஆடைகள் மற்றும் தோல் பொருட்கள் வகை மற்றும்

**வரைபடம் 2.4** ஒப்பதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபைச் செயற்றிட்டங்கள் (விரிவாக்கப்பட்ட செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக)

செயற்றிட்டங்களின் எண்ணிக்கை




முதலீட்டுப் பெறுமதி




(அ) மிகின் லங்கா பிறைவேற் லிமிட்டெட் மீதான முதலீடு நீங்கலாக

உருவமைக்கப்பட்ட உலோகம், பொறி மற்றும் போக்குவரத்துக் கருவி வகை ரூ.11 பில்லியன் கொண்ட மதிப்பிடப்பட்ட முதலீட்டுடன் பிரதான பங்களிப்பாளர்களாக விளங்கியது. முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் வர்த்தகத் தொழிற்பாட்டிலிருந்த செயற்றிட்டங்களின் மொத்தப் பெறுமதி 2009 இறுதியிலான ரூ.4,149 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2010 இறுதியில் ரூ.4,162 பில்லியனுக்கு அதிகரித்தது.

**கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை 2009இன் 1,876 இலிருந்து 2010இல் 1,940 இற்கு அதிகரித்திருக்கையில் மொத்த முதலீடு 2009 இறுதியின் ரூ.139 பில்லியனிலிருந்து ரூ.145 பில்லியனுக்கு அதிகரித்தது.** இது நாட்டின் அனைத்து மாவட்டங்களில் அமைந்துள்ள தொழில் முயற்சிகளை உள்ளடக்கும் அதேவேளை மிகக் கூடிய முதலீடு தொழில்நிலையில் 88 சதவீதத்திற்குக் கூடுதலானதை உருவாக்குவதோடு மற்றும் மொத்த முதலீடுகளில் கிட்டத்தட்ட 90 சதவீதத்தைக் கவரும் கொழும்பு மற்றும் கம்பகா மாவட்டங்களிலிருந்து பெறப்பட்டது.

**அரச முதலீடு 2010இல் 9.2 சதவீதத்தால் அதிகரித்தது. முக்கிய தூண்டலாக போக்குவரத்து, நீர்ப்பாசனம், வலு மற்றும் சக்தி மற்றும் நீர் வழங்கல் போன்ற துறைகளில் பௌதீக உட்கட்டமைப்பை அதிகரிப்பதற்கு தற்போது நடைபெற்று வரும் மிகப் பெரிய செயற்றிட்டங்களை விரைவுபடுத்தல் விளங்கியது.** இவை கொழும்பு - கட்டுநாயக்கா அதிவிரைவுப் பாதை, கொழும்பு வெளிச்சுற்றுவட்ட வீதிச் செயற்றிட்டம் மற்றும் தெற்கு நெடுஞ்சாலைச் செயற்றிட்டங்கள் மற்றும் தெற்கு நெடுஞ்சாலைச் செயற்றிட்டங்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. நாட்டின் வட பகுதியில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் புனருத்தாபன நிகழ்ச்சித்திட்டங்களுடன் இணைந்து செல்லும் வகையில் பல எண்ணிக்கையான செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதைவிட ஏற்றத்தாழ்வற்ற பிரதேச அபிவிருத்தியை அடைவதை நோக்கமாகக் கொண்ட “மகநெகும” மற்றும் “கமநெகும” நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கலாக சிறிய அளவிலான அபிவிருத்திச் செயற்றிட்டங்களும் தொடர்ந்து இடம்பெற்றன. மக்களின் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தும் அதேவேளை நாட்டில் மனிதவளத்தின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதை நோக்காகக் கொண்ட கல்வி, நலம் மற்றும் சூழல் போன்ற துறைகளிலான செயற்றிட்டங்கள் உள்ளடங்கலாக சமூக உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களும் அதிகரித்தன.

## மூலவளங்களின் கிடைப்பனவும் பயன்பாடும்

**நாட்டின் மூலதனக் கிடைப்பனவு 2009இன் 1.2 சதவீதம் கொண்ட சார்பு ரீதியிலான குறைந்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2010இல் ரூ.7,329 பில்லியனுக்கு பெயரளவு நியதிகளில் 18.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.** மேலும், மூலவளங்களின் கிடைப்பனவு மொ.உ.உற்பத்தியால் தரப்படும் உள்நாட்டு மூலவளங்களினதும் பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகளால் தரப்படும் வெளிநாட்டு மூலவளங்களினதும் கூட்டுத்தொகையாக மதிப்பிடப்படுகிறது. உள்நாட்டு மூலவளங்கள் ரூ.5,602 பில்லியனாக மதிப்பிடப்பட்டு மொத்த மூலவளங்களின் 76.4 சதவீதப் பங்குக்கு வகைகூறுகிறது. இது 2009 உடன் ஒப்பிடுகையில் இரண்டு சதவீதப் புள்ளிகள் கொண்ட வீழ்ச்சியாக விளங்கி 2010இல் மேம்பாடடைந்த பொருளாதாரச் செயற்பாட்டுடன் வெளிநாட்டு மூலவளங்களுக்கான உயர் கேள்வியை எடுத்துக் காட்டுகிறது. இதன் விளைவாக, வெளிநாட்டு மூலவளங்கள் மொத்த மூலவளங்களின் பங்கு 2009இன் 21.8 சதவீதத்திலிருந்து 23.6 சதவீதத்திற்கு அதிகரித்தது. மேலும் மொத்த மூலவளக் கிடைப்பனவு 2009இன் 0.3 சதவீதம் கொண்ட சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2010இல் உண்மை நியதிகளில் 9.3 சதவீதத்தால் அதிகரித்தது. மூலவளக் கிடைப்பனவிலான சாதகமாக அபிவிருத்திகள் இவ்வாண்டில் உண்மை நியதிகளில் உள்நாட்டு வெளியீடு மற்றும் இறக்குமதிகள் இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்பால் உதவப்பட்டது.

**அட்டவணை 2.14 நடைமுறை சந்தை விலைகளில் மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடும்**

| விடயம் | சதவீதப் பங்கு | | சதவீத வளர்ச்சி | |
|---|---|---|---|---|
| | 2009(அ) | 2010(ஆ) | 2009(அ) | 2010(ஆ) |
| அ. மூலவளங்கள் | | | | |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 78.2 | 76.4 | 9.6 | 15.9 |
| பொருட்கள் பணிகளினது இறக்குமதிகள் | 21.8 | 23.6 | -20.8 | 28.4 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **1.2** | **18.6** |
| ஆ. பயன்பாடு | | | | |
| நுகர்வு | 64.2 | 62.2 | 4.4 | 14.9 |
| மொத்த உள்நாட்டு நிலையான மூலதனவாக்கம் | 18.6 | 19.8 | 2.9 | 26.5 |
| தனியார் | 13.6 | 15.4 | -1.7 | 34.5 |
| அரசு | 5.0 | 4.4 | 17.6 | 4.9 |
| இருப்புக்களின் மாற்றம் | 0.6 | 1.4 | -66.0 | 208.1 |
| பொருட்கள் பணிகளினது ஏற்றுமதி | 16.7 | 16.6 | -5.9 | 17.8 |
| **மொத்தம்** | **100.0** | **100.0** | **1.2** | **18.6** |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி


**கிடைக்கத்தக்க மூலவளங்களில் மிகப் பெரிய பங்கு முன்னைய ஆண்டுகளைப் போல் 2010இல் நுகர்வுக்காகப் பயன்படுத்தப்பட்டது.** மொத்தப் பயன்பாட்டில் நுகர்வின் பங்கு 2009இன் 64.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 62.2 சதவீதமாக விளங்கியது. மொத்தப் பயன்பாட்டில் நுகர்வுப் பங்கில் ஏற்பட்ட வீழ்ச்சி நிலையான மூலதன உருவாக்கப் பங்கு முன்னைய ஆண்டின் 18.6 சதவீதத்திலிருந்து 19.8 சதவீதத்திற்கு விரிவடைந்தமையால் ஏற்பட்டது. மேலும், பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிப் பங்கு 2010இல் மூலவளப் பயன்பாட்டின் 16.6 சதவீதத்திற்கு வகைகூறியது.

**பொருட்கள் மற்றும் பணிகளின் மொத்த வழங்கலில் உள்நாட்டு மூலவளங்கள் 2010இல் 76.4 சதவீதம் கொண்ட பங்கிற்கு பங்களிப்புச் செய்தது.** 32.3 சதவீதப் பங்கிற்கு வகைகூறும் உள்நாட்டுப் பொருட்கள் இவ்வாண்டில் 15.5 சதவீதத்தால் வளர்ச்சியடைந்திருக்கையில் 44.2 சதவீதப் பங்குக்கு வகைகூறும் உள்நாட்டுப் பணிகள் பெயரளவு நியதிகளில் 16.1 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தன. மொத்த வழங்கல்களில் எஞ்சிய 23.6 சதவீதப் பங்கு இறக்குமதிகளால் வழங்கப்பட்டது. இதில் பொருட்களின் இறக்குமதிகள் 20.8 சதவீதப் பங்கையும் பணிகளின் இறக்குமதிகள் எஞ்சிய 2.7 சதவீதப் பங்கையும் கொண்டிருந்தன.


**நுகர்வு, முதலீடு மற்றும் ஏற்றுமதிகள் அனைத்தும் முன்னைய ஆண்டைவிட உயர்ந்த வளர்ச்சி வீதங்களைப் பதிவு செய்தமையால் 2010இல் கேள்விப் பக்கத்திலான வளர்ச்சி உத்வேகம் மேம்பாடடைந்தது.** தனியார் மற்றும் அரச நுகர்வு இரண்டிலுமான வளர்ச்சியுடன் நுகர்வுக் கேள்வி இவ்வாண்டில் 14.9 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. இதேவேளை, முதலீட்டுக் கேள்வியும் 2009இன் பின்னடைவிலிருந்து மீட்சியடைந்து 31.8 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. பொருட்கள் மற்றும்

**வரைபடம் 2.5 2010இல் பொருளாதாரம் (நடைமுறை விலைகளில்)**

பொருட்கள் மற்றும் பணிகளின் வழங்கல்
(ரூ. 7,329 பில்லியன்)




பொருட்கள் பணிகளுக்கான கேள்வி
(ரூ. 7,329 பில்லியன்)




பணிகளின் ஏற்றுமதிகளும் முன்னைய ஆண்டின் 5.9 சதவீதச் சுருக்கத்திலிருந்து மீட்சியடைந்து 2010இல் 17.8 சதவீதம் கொண்ட பெயரளவு வளர்ச்சியைப் பதிவு செய்தது.

## சேமிப்புக்கள்

**சேமிப்புக்களிலான வளர்ச்சி உத்வேகம் முன்னைய ஆண்டின் உயர் வளர்ச்சி வீதங்களுடன் ஒப்பிடுகையில் 2010இல் மெதுவடைந்தது.** 2009இல் சேமிப்புக்கள் நுகர்வுச் செலவினத்திலான மெதுவடைவாலும் பன்னாட்டுச் சந்தையில் சார்பு ரீதி பொருட்களின் குறைந்த விலைகளாலும் மேம்பாடடைந்தது. நுகர்வு மற்றும் முதலீட்டுக் கேள்வி இரண்டிலுமான வளர்ச்சியாக தூண்டப்பட்ட பொருளாதாரச் செயற்பாடு உள்நாட்டு மற்றும் தேசிய சேமிப்புக்கள் இரண்டிலும் வளர்ச்சியைப் பாதித்தது. இதன் விளைவாக, மூலவள இடைவெளி 2009இன் 6.5 சதவீதத்திலிருந்து 2010இல் 9.1 சதவீதத்திற்கு விரிவடைந்தது.

**2009இல் 41.8 சதவீதத்தால் வளர்ச்சிடைந்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2010இல் 20.5 சதவீதம் கொண்ட குறைந்த வளர்ச்சியைப் பதிவு செய்தது.** தனியார் மற்றும் அரச சேமிப்புக்கள் இரண்டையும் உள்ளடக்கும் மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2010இல் ரூ.1,045 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தின் நடைமுறைக் கணக்கு நிலுவை என வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள அரச சேமிப்புக்கள் தொடர்ந்தும் எதிர்க்கணியமாகவே விளங்கியதுடன் இது 2009இன் மொ.உ.உற்பத்தியின் 3.7 சதவீதத்திலிருந்து 2.1

அட்டவணை 2.15 நடைமுறைச் சந்தை விலைகளில் நுகர்வு, முதலீடு மற்றும் சேமிப்புக்கள்

| விடயம் | ரூ.மில்லியன் | | (%) மாற்றம் | | மொ.உ.உவின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|
| | 2009(அ) | 2010(ஆ) | 2009(அ) | 2010(ஆ) | 2009(அ) | 2010(ஆ) |
| 1. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி | 4,835,293 | 5,602,321 | 9.6 | 15.9 | 100.0 | 100.0 |
| 2. நுகர்வுச் செலவினம் | 3,967,770 | 4,517,348 | 4.4 | 14.9 | 82.1 | 81.3 |
| தனியார் | 3,116,221 | 3,644,738 | 1.0 | 18.2 | 64.4 | 65.8 |
| அரசு | 851,549 | 872,610 | 19.3 | 2.5 | 17.6 | 15.6 |
| 3. முதலீடு | 1,181,449 | 1,596,769 | -2.8 | 31.8 | 24.4 | 27.8 |
| தனியார் | 863,485 | 1,209,551 | -7.1 | 40.1 | 17.9 | 21.6 |
| அரசு | 317,964 | 347,218 | 11.1 | 9.2 | 6.6 | 6.2 |
| 4. உள்நாட்டுச் சேமிப்புக்கள் | 867,523 | 1,044,973 | 41.8 | 20.5 | 17.9 | 18.7 |
| தனியார் | 1,047,454 | 1,163,847 | 49.6 | 11.1 | 21.7 | 20.8 |
| அரசு | -179,931 | -118,874 | -103.4 | 33.9 | -3.7 | -2.1 |
| 5. உள்நாட்டுச் சேமிப்புக்கள் - முதலீட்டு இடைவெளி | -313,927 | -511,796 | 48.0 | -63.0 | -6.5 | -9.1 |
| 6. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் | -55,795 | -71,858 | 46.9 | -28.8 | -1.2 | -1.3 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் நடைமுறை மாற்றல்கள் | 336,578 | 407,967 | 21.2 | 21.2 | 7.0 | 7.3 |
| 8. தேசிய சேமிப்புக்கள் | 1,148,305 | 1,381,082 | 46.4 | 20.3 | 23.7 | 24.7 |

(அ) திருத்தியமைக்கப்பட்டவை
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

சதவீதத்திற்கு மேம்பாடடைந்து உள்நாட்டுச் சேமிப்புக்களில் வளர்ச்சியை அடைவதில் சாதகமாக பங்களிப்புச் செய்தது. இதேவேளை உள்நாட்டுச் சேமிப்புக்கள் விகிதம் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள்) இவ்வாண்டில் 18.7 சதவீதமாக விளங்கியது.

**தேசிய சேமிப்புக்கள் 2010இல் ரூ.1,381 பில்லியனுக்கு 20.3 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தன.** தேசிய சேமிப்புக்களிலான வளர்ச்சியும் முன்னைய ஆண்டின் 46.4 சதவீத உயர் வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 2010இல் ஊக்கமிழந்தது. தேசிய சேமிப்புக்களிலான இம் மெதுவடைவு வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருவாய் மோசமடைந்ததால் ஏற்பட்டிருக்கையில் வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் நடைமுறை மாற்றல்களிலான 21.2 சதவீத வளர்ச்சி இவ்வாண்டில் தேசிய சேமிப்புக்களில் வளர்ச்சியை நிலைநாட்டியது. இதேவேளை, தேசிய சேமிப்புக்கள் விகிதம் முன்னைய ஆண்டின் 23.7 சதவீதத்திலிருந்து 2010இல் 24.7 சதவீதத்திற்கு வளர்ச்சியடைந்தது.

## சிறப்புக்குறிப்பு 5 சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டம் - உள்நாட்டுச் சேமிப்புக்களை அதிகரிப்பதற்கான சமூக பாதுகாப்புத் திட்டம்

ஓய்வூதியத் திட்டம் என்பது இத்திட்டத்தின் உறுப்பினர்களுக்கு நிதியியல் பாதுகாப்பு மற்றும் உறுதிப்பாட்டை வழங்கும் சமூக பாதுகாப்பு வடிவிலான திட்டமாக இருக்கும் அதேவேளை நாட்டின் உள்நாட்டுச் சேமிப்புக்களின் மட்டத்தை உயர்த்துவதற்கும் பங்களிப்பு செய்கிறது. எனினும், இலங்கையில் தற்போதுள்ள ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியத் திட்டங்கள் சுயதொழில் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள முறைசார்ந்த துறையிலுள்ள குடித்தொகையின் பெரும் பகுதியினரை உள்ளடக்கவில்லை. இதற்கிணங்க, விரிவான உள்ளடக்கத்துடன் சமூக பாதுகாப்புத் திட்டத்துக்கு நீண்ட காலமாக உரைக்கப்பட்ட தேவையைத் தீர்க்கும் பொருட்டு முறைசார்ந்த மற்றும் சுயதொழிலிலுள்ள ஊழியர்கள் அவர்களின் வயோதிப காலத்துக்காக சேமிப்பதற்காக சமூக பாதுகாப்பு திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கான முக்கிய கொள்கை முன்னெடுப்பாக வரவு செலவுத்திட்டம் 2011இல் அறிவிக்கப்பட்டவாறு அரசாங்கம் சுயவிருப்பு ஓய்வூதிய நிதியத்தை நிறுவுவதற்கு முன்மொழிந்துள்ளது.

முன்மொழியப்பட்ட சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டம் குறிப்பாக எந்தவொரு சமூக பாதுகாப்பு நிதியத்தின் உறுப்பினர்கள் அல்லாதவர்களுக்கு அல்லது அவர்களின் ஓய்வின் போது அல்லது வயோதிப காலத்தில் சமூகப் பாதுகாப்பின் வழிமுறையாக ஓய்வூதியத்தை பெறத் தகைமை பெறாதவர்கள் உள்ளிட்ட அனைத்து இலங்கையருக்கும் கிடைக்கக் கூடியதாகவுள்ளது. மத்திய வங்கியின் நாணயச் சபையால் முகாமை செய்யப்படும் சுயவிருப்பு ஓய்வூதியத்திட்டம் பதிவு, உறுப்பினர் பங்களிப்பு, மீள்பெறுகைகள் மற்றும் மாதாந்த ஓய்வூதியத்தை பெறுவதற்காக செல்லிடத் தொலைபேசித் தொழில்நுட்பத்தின் குறிப்பிடத்தக்க பயன்பாட்டிற்கு வசதியளிக்கும் சாதாரண மற்றும் குறைந்த செலவுடைய இலத்திரனியல் உட்கட்டமைப்பினூடாக தொழிற்படுத்தப்படும்.

உண்மையிலேயே, சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டம் இரட்டை நோக்கங்களை பூர்த்தி செய்கிறது. முதன்மையாக, சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டம் உறுப்பினர்களின் ஓய்வுக்குப் பின்பான முழு வாழ்க்கைக் காலம் முழுவதும் அதன் உறுப்பினர்களுக்கு சமூக பாதுகாப்பு மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டை வழங்குகிறது. மாதாந்த ஓய்வூதியம் அவனது/ அவளது நாளாந்தச் செலவினங்களையும் நலக் கவனிப்புத் தேவைகளையும் ஈடுசெய்வதற்கு கணிசமானளவில் பங்களிப்புச் செய்வதுடன் சமூக பாதுகாப்பு வலையமைப்பில் தங்கியிருப்பதனூடாக சமூகத்திற்கோ அல்லது அரசாங்கத்திற்கோ இவர்கள் சுமையாக இருக்கமாட்டார்கள்.

இரண்டாவதாக, சுயவிருப்பு ஓய்வுதியத் திட்டம் எமது குடித்தொகையின் சேமிப்புப் பழக்கங்களை முன்னேற்றுவதற்கு இலக்கிடுகிறது. தற்போது இலங்கையில் உள்நாட்டுச் சேமிப்பு வீதம் 2010இன் மொ.உ.உற்பத்தியின் 18.7 சதவீதம் ஆகும். உள்நாட்டுச் சேமிப்புகள் மற்றும் தேறிய காரணி வருமானம் மற்றும் வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்களை உள்ளடக்கும் தேசிய சேமிப்பு வீதம் மொ.உ.உற்பத்தியின் 24.7 சதவீதம் ஆகும். இருப்பினும், 2016 அளவில் தலைக்குரிய மொ.உ.உற்பத்தி வருமான மட்டம் ஐ.அ.டொலர் 4,000 ஐ அடைவதற்கு தேசிய சேமிப்புகளை 30 சதவீதத்துக்கு அதிகரிக்க வேண்டும். இம்முதலீட்டு பற்றாக்குறை வெளிநாட்டுக் கடன்பாடுகள் மற்றும் முதலீடுகளால் தீர்க்கப்படக்கூடிய போதிலும் வெளிநாட்டு மூலங்களிலிருந்து பெறப்படும் நிதிகளுடன் இணைந்த செலவுகள் மற்றும் இடர்நேர்வுகள் உள்நாட்டுச் சேமிப்புக்களுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவில் உயர்வாக இருக்கும்.

இத்திட்டத்தில் இணைந்து நன்மை பெறக்கூடிய ஏறத்தாழ 4 மில்லியன் சிறிய வணிகங்கள் மற்றும் சுயதொழில் ஈடுபட்டுள்ள முறைசாராத்துறைத் தொழிலாளர்கள் இருப்பதாக தற்பொழுது மதிப்பிடப்பட்டுள்ளது. சுயவிருப்பு ஓய்வூதியத் திட்டம் ஓட்டுநர்கள், தச்சுத் தொழிலாளர்கள், எந்திரவியலாளர்கள், வேளாண்மையாளர்கள், மீன்பிடியாளர்கள், புலம்பெயர் தொழிலாளர்கள் போன்ற சுயதொழிலில் ஈடுபட்டுள்ள பல்வேறு தொழில்களை இலக்கிட்டுள்ளது. இத்துடன், தற்போது எந்தவிதமான சமூகப் பாதுகாப்பு நிதியத்திற்கும் பங்களிப்புச் செய்யாத கட்டடவாக்கத் தொழிலாளர்கள், பணிப்பெண்கள், குழந்தை நலக் கவனிப்பு உதவியாளர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் ஊழியர்கள் போன்ற தனியார்துறை அமைய ஊழியர்களும் சட்டத்தரணிகள், கட்டடகலைஞர்கள், ஆலோசனையாளர்கள், மதியுரைஞர்கள், ஊடகவியலாளர்கள், அழகியற் கலைஞர்கள் போன்ற தனிப்பட்ட தொழில்சார் நிபுணர்களும் இத்திட்டத்தில் இணையலாம்.

இதற்கும் மேலாக, குறிப்பாக முறைசாராத் துறைத் தொழிலாளர்கள் உள்ளிட்ட இத்துறைகளில் ஊழியர்கள் குறைந்த சேமிப்புப் பழக்கங்களைக் கொண்டுள்ளமை பொதுவான நிகழ்ச்சியாக இருப்பதால் இவ் ஊழியர்கள் பாதுகாப்பற்ற ஓய்வு கால வாழ்க்கையின் விளைவுகளால் இயற்கையாகவே பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். எனவே, சுயவிருப்பு ஓய்வுதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது அவர்களின் வயதான காலப் பகுதிக்காக சேமிப்பதற்கு முறைசார்ந்த மற்றும் சுயதொழில் துறையிலுள்ள ஊழியருக்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்துவது முக்கியமான கொள்கை முன்னேற்பாடாகும். அதேவேளை, சுயவிருப்பு ஓய்வுதியத் திட்டம் நீண்ட கால நிதியமாக இருப்பதால் குறிப்பாக நிதியத்தின் குறிக்கோள்கள் மற்றும் இடர்நேர்வைத் தாங்கும் தன்மையை உள்ளடக்கும் பல்வேறு நீண்டகாலச் சொத்துக்களை போதியளவு பன்முகப்படுத்தி முதலிடலாம். எனவே இந்நிதியம் உள்நாட்டுச் சேமிப்புக்களை அதிகரிப்பதற்கு பயனுறும் வகையில் பங்களிப்புச் செய்வதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்கு உதவுகிறது.